தென்மொழி

தனித் தமிழ் இலக்கியத் திங்களிதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 2. | மாசி–தி. பி. 1995 (1964 பிஃப்ரவரி) | ஓலை 1.

132380

031m211,N63
K4

676

இரண்டாம் ஆண்டு.

—*—

தென்மொழி தன் ஓராண்டுப் பணியை வீறுபட முடித்து, இரண்டாம் ஆண்டில் பெருமிதத்துடன் நடையிடுகின்றது. இடையில் ஏற்பட்ட சுழிவும் நெளிவும் தென்மொழி ஏற்றத்தைத் தினைத்தானும் மாற்றிவிட முடியவில்லை. மாற்றுப் புலத்தோரின் வேற்றுப் பார்வைக்கு எதிர்ப் பார்வை காட்டியிருக்கின்றது; அவர்தம் ஏறிய நடைக்குமுன் தானும் ஏறு நடை போட்டிருக்கின்றது. தொடக்க நிலையினின்று இருமடங்காகப் பெருகிச் சறுக்கல் இன்றித் தன் தேறிய கொள்கை வழியில் சீரிய முறையில் முன்னேறிக் கொண்டுள்ள தென்மொழிக்கு இன்றும் பல இடர்ப்பாடுகள்; எதிர்ப்புகள்; அகப் புறப் போராட்டங்கள்! மனத்தாலும் பணத்தாலும் மாறுபடுவார் சிலர்! வினையானும் சொல்லானும் வேறுபடுவார் சிலர்! 'எனை வகையான் தேறியக் கண்ணும், வினைவகையான் வேறுகும் மாந்தர் பலர்!' இவற்றிற்கெல்லாம் காரணம் தமிழ் நாட்டின் சூழ்நிலைதான்; இற்றைத் தமிழனின் பெரும் பொருள் வேட்கைதான்!

மேனாட்டைப்போல் பரந்த தொண்டுள்ளமும், தம்மைச் சூழ்ந்தார் மாட்டு அன்பும், நன்மையும் தீமையும் நாடி நலம்புரிகின்ற அறிவும், பொருள் வாய்ப்புழி அதன்மேல் அவாவின்மையும் வாய்ந்த பொதுவினை மாந்தர் இன்னும் தமிழகத்துத் தோன்றிலர். ஓரிருவர் ஒரோவழித் தோன்றினும் அன்னாரை வேறு

சிறப்பாசிரியர்: புலவ, பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்

பிரித்து, மாறுபாடு சாற்றி இழித்தும் பழித்தும் காலம் நேருங்கால் அழித்தும் விடுகின்ற தந்நல முனைப்பாளர்கள் பலர் நல்லாரினும் பொல்லாரினும் எள்ளில் எண்ணெயெனக் கலந்துள்ளனர். பற்றற்ற தொண்டு செய்வாரையும் குற்றங்கூறிக் குறைப்படுத்து வார் இன்றும் உளர்! கொண்ட கொள்கையும் வலிது; கொள்கை நடக்கின்ற வழியும் புதிது; துணையும் சிறிது; இருப்பினும் இறக்கத் துணிந்தார்க்குக் கடல்நீர் இடுப்பளவு எனும்படி உயிரைப் பணயம் வைத்தாகிலும் எடுத்த வினையை முடிப்பதே நம் வாழ்க்கையென எண்ணிக் கொஞ்சமும் அஞ்சாது நடையிடத் தொடங்கியுள்ளோம். நுங்கும் நுரையுமாய் நீரலைத்துப் புரண்டோடும் கான்யாற்றுக் கடுஞ் செலவைக், கரையினின்று அடிப்பெயர்ந்து வீழும் பெரு மரங்கள் தடுத்து நிறுத்திவிடப் போவதில்லை.

தென்மொழியின் நோக்கும் போக்கும் தொடக்கத்திலேயே திட்டமிடப்பட்டுள்ளனவாகலின், ஐயுற்றுக் கைநெகிழ்ப்பார் தம் இடைமுறிவால் நடை துவளுதலும் படை மலைதலும் என்றும் தென்மொழிக்கு இல்லை. தென்மொழியைச் சார்ந்தார்தம் உரிமையினும் தமிழுரிமை பெரிது! அவர்தம் மனையினும் மக்களினும் தமிழர்தம் அடிமைத் தன்மையும் அவலமும் பெரிய! நாட்டு விடுதலை நோக்கி நாம் வைத்த வலக்காலை எக்காரணம் பற்றியும் பின்னிழுக்க மாட்டோம் தமிழ்க்கும் தமிழ் நாட்டிற்கும் ஏதம் படுப்பாரை என்ன வழி முயன்றேனும் சேதப் படுத்துவோம். இஃது உறுதி! பனிமலை அன்ன உறுதி! அரசினுக்கும் ஆளுமைக்கும் அஞ்சி, நம் முரசம் என்றும் தன் முழக்கை நிறுத்தாது. வாழ்க்கைக்கும், இன்பத்துக்கும் கெஞ்சி நாம் என்றும் நம் குரலிற் குழைவைக்காட்டோம். உயிர்மேல் நமக்கு உவப்பில்லை; செல்வ நிலைக்கு நாம் என்றும் அங்காந்ததில்லை நாம் பிறந்த நாட்டுக்கும் மொழிக்கும் நமக்கிருக்கும் உடலும் உழைப்பும் செலவிடப் பெறும். புறம் பழித்துத் திரிகின்ற புல்லரையும் கரந்து மொழிசாற்றி இரந்துயிர்வாழும் கயவரையும் நாம் என்றும் சிறக்கணித்தும் பார்த்ததில்லை; அவர் வினையும் திறனும் அவையாகவே இருக்கட்டும். அவரைப்பற்றி நமக்குக் கவலையில்லை. நமக்குற்ற கவலையெல்லாம் ஒன்றுதான். தமிழும் தமிழனும் அழியத் தொடங்கியுள்ள நேரம் இது! அவன் பண்பும் நாகரிகமும் அழியத் தொடங்கியுள்ளன. ஒருகைச் சோற்றுக்கு ஒரு காதம் நடக்கின்றான் தமிழன். பிறன் இடும் எச்சிற் கவளத்திற்கு ஏக்கமுற்று மண்டி இடுகின்றான்; இவனிடம் தன்முனைப்பு இல்லை. தன்னறிவு இல்லை. இவன் வாழ்வதும் வீழ்வதும் சோற்றுக்கே. அன்பு, அருள், பொறை, ஈகை, ஒழுக்கம், வாய்மை, உள்ளம், உடல், உயிர் ஒன்று பற்றியும் இவனுக்குக் கவலையில்லை. இவன் கவலையுறுவதெல்லாம் வயிற்றையும் வாயைப் பற்றியுமே! சோற்றுக்கும் துணிக்கும் இவன் மனைவியையும்

மக்களையும் மானத்தையும் துறக்கத் துணிந்துள்ளான் மொழி, நாடு, அரசு, வாழ்க்கை இவற்றின் பொருள்கள் பற்றி இற்றைத் தமிழனுக்குக் கவலையில்லை. வீட்டு ஒற்றுமை பற்றி அறியாது மனைவியும் கணவனும் பூனையும் நாயுமாகி மணவிலக்குக்கும் பணப்பிரிவுக்கும் வழக்கு மன்றம் ஏறியிறங்கும் நிலையுள்ள இவன் நாட்டு ஒற்றுமை பேசுகின்றான்; அதனினும் விரிந்து உலக ஒற்றுமையும் பேசத் தொடங்கியுள்ளான். இப் போலிப் புறநிலைகளையும் வாழ்க்கையைப் பாழடித்துக் கொள்ளும் வறண்ட கொள்கைகளையும் பற்றிப் பேசி நாம் விழிப்பேற்படுத் துங்கால் நம்போன்றாரை, குறுகிய நோக்கினர், குறைமதியாளர் என்றும் மொழி வெறியர் நாட்டு வெறியர் என்றும் குறைகூறித் தமக்குற்ற சட்டம், வழக்கு, வல்லாண்மை முதலிய கூர்மழுங்கிய கருவிகள் கொண்டு தாக்குகின்றான் இவனிடத்தில்தான் நமக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. இந்நிலையை நினைத்துநினைத்து வருந்திச் செயல்படவும் நேரமின்றி வாழ்நாள் எஞ்சின் என் செய்வோம் என்று நாளும் உள மறுகுகின்றோம். இவற்றிற் கெல்லாம் படைக்கருவியாக நாம் தொடங்கியதே தென்மொழி!

நாம் இக்கருவியைத் தூக்கிய காலைத் துணை நின்றார் சிலர். இக்கால் நமக்குத் துணை வருவார் பலர். நம் படை பெரிதன்றா யினும் நடை பெரிது; வீறிது! இதனைக் கொண்டுதான் மொழி மறந்து கிடக்கும் தமிழனை விழிப்படையச் செய்தல் வேண்டும்; செயல் மறந்து நெளியும் தமிழனுக்குப் புயலின் வல்லமையைப் புகட்டல்வேண்டும். பூனைக்கு நடுங்கும் கோழையாகிய இவனைப் புலிவேட்டைக்குத் துரத்தல் வேண்டும். உண்பாடே பெரி தெனக் கருதி பண்பாடுமறந்த இவனுக்கு உளப்பாடு உணர்த்தி, மெய்ப்பாடு காட்டல் வேண்டும். நடை, உடை, வாழ்வு, அரசு, இன்பம் முதலியவற்றுள் எதுவும் புரியாது, வயிறு புடைக்க நீரும் சோறும் கறியும் உண்டு வாழ்வதே வாழ்வு; இவற்றிற்கு அலைவதே வினை; அவ்வினையின் முடிவே இன்பம் என்று மயங்கித் திரியும் பேதைக்கு மொழிப்பற்றும் அதன் வழி நாட்டுப்பற்றும், அவை வழி, தேயப்பற்றும் அதன்பின் உலகப் பற்றும் ஏற்படுமாறு, படிப்படியாக வளர்த்துக் கொண்டு போவதே நம் வேலை. நாம் எடுத்துக்கொண்ட வேலை மிகவும், பெரியதும் அரியதும் ஆகும் என்று நாம் அறிவோம் இருப் பினும் 'அரியவென்று ஆகாத இல்லை; பொச்சாவாக் கருவியால் போற்றிச் செயின்' என்றும் நாம் அறிவோம். நமக்குப் பொரு ளும் துணையும் மிகமிகச் சிறியவே! ஆனால் நமக்குள்ள உள்ள மும் அதனுள் அடங்கிய ஆற்றலும் மடியற்ற வினைப்பாட்டின் துடிதுடிப்பும் மிகமிகப் பெரிய. இவ்வினை முடிவுறாமல் நாம் இறப்பினும் நமக்குக் கவலையில்லை. 'யானை பிழைத்த வேல்' ஏந்தல் இனிது என்பது தமிழர்க்கிட்ட சட்டவுரை! இதன்வழி நிற்போம். இவ்வகைக்கு இவ்விரண்டாம் ஆண்டின் தொடக்கம்

நம் கண்களில் ஒளியேற்றட்டும்; நம் கைகளையும் தோள்களையும் வலிந்து புடைத்து முறுக்கேறச் செய்யட்டும்! நாம் செல்கின்ற வழிகளைச் செப்பமும் விரைவும் மிக்கவையாக ஆக்கட்டும்! மொத்தத்தில் நம் அரிய வினைப்பாடு எளிதே முடிவுற இவ்விரண்டாம் ஆண்டு நமக்கு முழு வல்லமையையும் நல்குவதாகுக! *

நகராண்மைக் கழகத் தேர்தல்கள்

அண்மையில், தொடங்கி நடந்துகொண்டிருக்கின்ற நகராண்மைக் கழகத் தேர்தல்களைப் பற்றி ஒரு சிறிது கூறுதல் யாவர்க்கும் பயன்தரத்தக்க தொன்றும். பொதுவாகக் குடியரசின் அடிப்படையையே நன்றுகப் புரிந்து கொள்ளாத மக்கள் நூற்றுக்கு எண்பத்தைந்து விழுக்காடு உள்ளவரை பொதுத் தேர்தல்கள் எவ்வகையான நல்ல தீர்ப்பையும் வழங்கிவிடல் முடியா. பொருளும் வாய்ப் பெருக்கமும் மிகுந்துவிட்ட இந் நாளில், மக்கள் எண்ணவும் திறனின்றித் தம் வாழ்வு நலன்களை நாடிப் போய்க் கொண்டுள்ளனர். இவர்தம் விரைவைத் தடுத்து நிறுத்தி இவரைக் கொண்டு நல்ல அரசியலை அமைத்துக் கொள்வதென்பது உப்பு மூட்டைகளைக் கொண்டு கடற் கொதிப்பைத் தடுப்பது போன்றதாகவே முடியும்.

மூலை முடுக்குகளில் தெருத் திண்ணை அரசியல் பேசிப் பொழுதுபோக்கிய போக்கிலிகளும், ஈட்டிய பணத்தை வருமான வரிக்காரன் கைகளில் கொடுத்தற்கு மனமில்லாத ஆரவார விரும்பிகளான செல்வர்களும், குலவெறியர்களும் இக்கால் மடி தட்டிக்கொண்டு தேர்தல் வேட்டைக் களத்தில் இறங்கியுள்ளனர். இவர்கள் வெற்றி தோல்விகளைப் பற்றி என்றும் கவலைப் படாதவர்கள். பிறர்க்குத் தாம் இளைப்பில்லை என்பதைக் காட்டவே தேர்தலில் குதித்தவர்கள் இவர்கள். இவர் தம்மைப் பற்றி நமக்கும் கவலையில்லை.

தொண்டு உள்ளமும் தமிழ்ப்பற்றும் நிரம்பிய கல்வியும் அரசியல் பட்டறிவும்கொண்டு ஒரு சிலர் ஆங்காங்கே தேர்தலில் போட்டியிடக் கூடும். மக்கள் அவர்தம்மை இனங் கண்டு கொண்டு அவர்க்கே தம் ஒப்போலை (Vote) களை அளித்தல் வேணடும். பெரும்பாலும் எல்லா வேட்பாளர்களும் கட்சிச் சார்பிலேயே நிற்கின்ற வழக்கமே தமிழ் நாட்டில் எங்கணும் தலைதூக்கி நிற்கின்றது. இக் கட்சி ஒற்றுமையும் குலவெறியை அடிப்படையாகக் கொண்டே இயங்குகின்றது. மொழியுணர்வையோ நாட்டுணர்வையோ தமிழர் தலையாகக் கொள்வார்களாயின் குலமும் கட்சியும் பெரும்பாலும் ஒழிந்து போகும். அது

(73-ஆம் பக்கம் பார்க்க)

பொறியுணர்வும் உயிர் ஆற்றலும்

உள் முகமாக எண்ணத்தைத் திருப்பித், தான் உலகில் வந்த தெவ்வாறு? வாழ்வதன் நோக்கம் என்ன? இவ்வுலக வாழ்க்கை எதை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது? என் றெல்லாம் ஆய்ந்து பார்க்க விழையும் ஒருவனுக்கு இற்றை நாள் இலக்கியங்களும் மெய்யறிவு நூற்களும் போதிய துணை புரிதல் இல்லை. நிலவுருண்டையும் அதன் புறத்தேயுள்ள கோள்களும் அண்டப் பெரு வெளியில் இடையீடின்றிச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றன. ஒளி உமிழும் உடுக்கள் விண் வெளி யெங்கும் நிறைந்து இருள் நீக்கும் விளக்கங்களாக நமக்குதவு கின்றன. நம் கணிய நூற்களும் புதிய புதிய வாராய்வுக் கருவி களும் இவற்றை எவ்வளவுதான் ஆய்ந்த போதிலும் இவை பற்றிய நம் அறிவு வேட்கையை மிகுதிப்படுத்துவனவே அல் லால், முடிந்த முடிபை நமக்கு அறிவித்து விடவில்லை. அது போலவே நம் நாகரிகமும், பண்பாடும் வாழ்வின் இலக்கை நோக்கிய பெரும் பயணத்துக்கு நம்மை அணியப்படுத்துவனவே அல்லாமல் அவ்விலக்கருகிலேயே நம்மை அழைத்துக்கொண்டு போய் நிறுத்திவிடவில்லை.

அண்டப்பெருவெளியில் மிதக்கும் இந் நிலவுருண்டையின் மேல் ஓட்டில் வாழ்பவர் நாம். எங்கிருந்தோ பிறந்தோம்; நமக்கு முன்பே அமைக்கப் பெற்றிருந்த குமுகாயத்துக்குள்தான் வந்து பிறந்தோம். நம் மொழி, பழக்க வழக்கங்கள், மரபு எல்லாமே நமக்கு முந்தியவை. பிறந்த வுடனேயே அவை யெல்லாம் வந்து நம்மைப் பற்றிக் கொள்கின்றன. உயிர் வாழ்க்கையின் சீரிய நுணுக்கம்பற்றி நம் வியப்பினைக் கூட வெளியிட முடியாதவாறு பழைய எண்ணங்களும் வழக்காறு களும் அவற்றில் ஊறிய மாந்தரும் நம் வாய்க்குப் பூட்டிட்டு விடுகின்றனர். நமது நோன்பினைக் கடைப் பிடித்து, நம் உரிமையை நிலை நாட்டி நாம் நாமாகவே நின்று இவ்வுலகினைக் கண்டு ஆராயும் முயற்சிகளைச் சுற்றியுள்ளோர் முகச்சுளிப்புடன் நோக்குகின்றனர்.

என்னதான் செய்துவிடப் போகின்றோம்? ஏன் இந்தத் தடைகள்? நாம் என்ன, மீமிசை அறிவையா பெற்றுச் செருக் கடையப் போகின்றோம்? அவ்வாறு எண்ணவும் இடமில்லையே! அறிவுலகு மிக நுண்ணியதும் சிக்கல் வாய்ந்ததும் நம் பிடிக்குள் அகப்படாததுமாகவன்றோ இருக்கின்றது! அறிவை அடைவ தற்குத்தான் எத்தனை முட்டுப்பாடுகள் இருக்கின்றன!

நாம் மேலோட்டில்தான் வாழ்ந்து வருகின்றோம். நம் இயக்கமும், செயலும், எண்ணங்களும் எல்லாம் மேலோட்டில் தான். ஓட்டின் அடியில் மற்றோர் ஓடு... இப்படி ஓடு ஓடாகப் பல ஓடுகள் அடுக்கப் பெற்றிருக்கின்றன. இவை அனைத்தையும் தொலைத்து உட்பகுதியைச் சென்றடைவது எவ்வளவோ அரிதாகவுளது. அது மட்டுமா? பொருட்களின் படைப்பில்தான் எவ்வளவு நுணுக்கங்கள்! ஒவ்வொரு முதற் பொருளினுக்கும் (Cause) மற்றொரு முதற் பொருள் இருக்கக் காண்கின்றோம். மிக வலிந்து முனைபவரும்கூட உண்மையின் உயரத்தையும் ஆழத்தையும் கண்டறிய இயலாது போகின்றனர். நமக்குத் தெரிந்தது என அறுதியிட்டுக் கூற ஒன்றுமேயில்லை. மாந்தனின் நிலையைத்தான் எடுத்துக் கொள்ளுங்களேன்; அறிவியலால் அவனது முழுமையையும் அறிந்துகொள்ள முடிந்ததா? அல்லது அம் முழுத் தன்மையின் பகுதிகளைத்தாம் ஐயந்திரிபின்றி ஆய்ந்து தெளிய முடிந்ததா? மாந்தனை ஆட்டுவிக்கும் வல் லுணர்வுகளான உவகை, அச்சம், துயரம், நம்பிக்கை, சிரிப்பு, அழுகை இவை என்ன? இசைக் கலையின் நுட்பம்தான் என்ன? ‘உருவம்’ ‘வடிவம்’—இவற்றுட் புதைந்திருக்கும் உண்மையாது? அழகு—ஒரு கோட்டில் ஒரு நெளிவில் அதைக் காணகிறோம்; மற்றொரு கோட்டில் மற்றொரு நெளிவில் அதைக் காண முடியவில்லை—இதன் கமுக்கந்தான் என்ன? இறப்பையும் ஊழையும் முழுக்க முழுக்கப் புரிந்து கொண்டவர்கள் யார்? எங்கு நோக்கினும் அறியாமை! அறியாமை!

நம் அறியாமை பெரிதுதான். ஆனால், அறிவை விரும்பாத தன்மை இருக்கின்றதே அஃது இவ்வறியாமையினும் பெரிதாக இருப்பது மிகவியப்பே. உண்மையாகவே அறிவுபெறக் கனலும் உள்ளங்களைக் காண்பது மிக அரிதாக விருக்கின்றது. மாந்தரை ஒற்றுமைப்படுத்தி, அனைவரையும் இணைத்துப் பிணைத்து, அறியாமைப் பேரிருட்டுக்குள் அறிவெனும் தேரை இழுத்துச் செலுத்தும் வேட்கை கொந்தளிக்கும் நெஞ்சங்களைக் காண முடியவில்லையே! “உங்களையே நீங்கள் அறியுங்கள்” என்று மாந்தரிடம் சொல்லிப் பாருங்கள். அதைவிடச் சப்பென்ற வேலை வேறில்லை என்றுதான் விடை பகர்வர். மனம், உயிர், ஊழ், அன்பு, சாவு இவற்றையெல்லாம் எண்ணி எண்ணி மூளையைக் குழப்பிக் கொண்டு, அவற்றைத் தொட்டும், கைக்ககப்படாமல் நம் போன்றோர் திணறிக் கொண்டிருக்கையில், “என்ன அறிவு, எல்லாம் தெரிந்ததுதானே” என்று சிறிதும் அறிவு வேட்கையற்று நெஞ்சத் தவலமின்றி மரப்பாவைபோல் நம்மைச் சுற்றியுள்ளவரெல்லாம் வாழ்ந்து வருவதைக் காண நமக்கு வருத்தமேலிடுகின்றது. கல்லாதவரும் கற்றவரும் இப்படித்தான். எல்லாம் தெரிந்துவிட்டது போலவும், அதற்குமேல் ஒன்றுமில்லை என்பது போலவும் மனப்பெருந்திகையோடு வாழ்ந்து

வருகின்றனர். உண்மையில், நம் அறிவெல்லாம் தொடக்க நிலையினதே. சிறிது எண்ணிப் பார்ப்போமானால் நாம் ஒவ்வொருவரும் நம்மைப் பிணித்துள்ள அறியாமைக் கயிற்றை அறுத்தெறிந்துவிட்டு, அறிவொளியைத் தேடும் வேட்கையுடன் புதிய உலகை நோக்கிக் கொலம்பசைப் போல் புறப்பட வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

பெருகிவரும் கல்வியின் நடுவிலும், மலைமலையாகக் குவியும் நூற்களின் நடுவிலும், இந்தப் பேரறியாமை, மாந்தனின் உட்புலனின் ஆழ்ந்த உறக்கம் இருந்து வருகின்றது. ஒரு நூல் நிலையத்துக்குச் சென்று பாருங்கள்! எத்தனை நூற்கள்! எத்தனைத் தாளிகைகள்! உலகின் பல பகுதிகளினின்றும் இறக்குமதியாகிய அறிவுக் களஞ்சியங்கள்! பேரறிஞர் தம் பெயர் தாங்கிப் பளபளக்கும் ஏடுகள்! இவற்றையெல்லாம் பார்த்ததும் நாம் நினைக்கத் தொடங்குவோம்:– ''அச்சுப் பொறியும் செய்தியிதழ்களும் தாம் எவ்வளவு நன்மை செய்திருக்கின்றன! உலகின் பல மூலைகளிலுள்ள அறிஞர்கள் தம் மூளை உழைப்பால் சேர்த்து வைத்த அறிவுத் தேன் நிரம்பி வழியும் தேனடைகளாகிய இந் நூற்கள் நமக்கு எவ்வளவு செய்திகளை அள்ளித் தருகின்றன! எத்தனைப் புலவர்கள், மெய்யறிவாளர்கள், அறிவியலறிஞர்கள் நமக்கு அறிவுரை கூறுகின்றனர்! எத்தனை நாடுகளில் எத்தனை மொழிகளில் உள்ள நெஞ்சைத் தொடும் இனியபாடல்கள்...!'' இவ்வாறெல்லாம் நினைத்து மகிழ்கின்றோம். ஆனால், இத்தனைச் சரக்குகளும் வெளியேயிருந்து இறக்குமதியானால் நமக்குச் சொந்தமாக நாமே உருவாக்கும் தனிமப் படைப்புகளை எப்படி எதிர்பார்க்க முடியும்?

இருக்கட்டும்; இந்த நூற்களைப் புரட்டிப் பார்ப்போம். எல்லாம் வழிநூலும் சார்புநூலும், நூற்களைப் பற்றிய நூற்களுமாயிருக்கின்றன முதல் நூலாகக் கூறப்பட்டது தானும் பிற நூற்களின் தொகுப்பாகவோ சுருக்கமாகவோ இருத்தல் கூடும். இவ்வாறு நமக்கு வருஞ் செய்திகள் மூன்று நான்கு கைகள் தாண்டி வரும் செய்திகளாகவுள்ளன. மற்றும், அந் நூற்களிற் பெரும்பாலானவை பருப்பொருள் உண்மையை, மேலோட்டமான செய்திகளைத் தருவனவாகவே யிருக்கின்றன. அப் பருப்பொருள் நிலையின் அடியிற் பாவோடியிருக்கும் எண்ணத்தையோ அதனை இயக்குஞ் சட்டத்தையோ கட்டுப்பாடாக எந்த நூலும் தொட்டுப் பார்ப்பதேயில்லை. இன்னும் பல நூற்கள் உரைநடையாயினுஞ் செய்யுளாயினும் பழைய நூற்களினின்று செதுக்கி எடுத்தவையா யிருக்கின்றன. காலத்துக்கேற்ற சொற்களில் பழம் பெருமை மீண்டும் பாடப் பெறுகின்றது. இன்னும், ஆராய்ச்சி நூற்கள் என்று கூறப்படுவன வெல்லாம் புத்தகக் கடைக்காரர்கள் விளம்பரத்துக்காகச் செய்யும் ஏற்பாடுகள் என்றறிந்தால் நெஞ்சம் துணுக்குறுகின்றது. இவ்வாறு நெடு நேரம்

புரட்டிப் பார்க்கையில் இறுதியாக ஒரு சீரிய பகுதி கண்ணில் படுகின்றது ஆழ்ந்த எண்ணத்தினையோ, அருட் கனிவையோ, வரும் பொருளுணர்த்தும் அரும்பெறற் பாடலையோ அங்குக் காண்கின்றோம். அழியா உண்மையின் ஒளி அங்குச் சுடர் விடுகின்றது... ஆனால் அஃதும் எங்கிருந்து வருகின்றது என்ப தையும் சிறிது நின்று பார்த்தால் கண்டு கொள்ளமுடியும்...

இந்தத் தாட்குவியலையெல்லாம் புரட்டி நாம் பெற்றவை ஒரு சில எண்ணங்கள் தாம். பிறவெல்லாம் வெறுஞ் சக்கைகள்; சொற்றொகுதிகள். சிறு பகுதியே நம் நினைவில் நின்று, நம் உணர்வை உயர்த்தி நம் உவகையைப் பெருக்குகின்றது. பிற வெல்லாம் நம் உள்ளக் கனப்பை அவிப்பவையாகத்தாமிருக் கின்றன. அவற்றால் மறைமுகமாக ஏதாவது பயன் நேர்தல் உண்டு. இம் மலை யனைய பதர்க்குவியலை நாம் பெற்ற ஒன்றி ரண்டு மணிகளோடு ஒப்புநோக்கி, இலக்கியக் கலையின் இயல்பு இதுதான் என்றுவது உணர்ந்து கொள்கின்றோம்.

ஏதோ ஒரு குறிப்பிட்ட காலத்தில்தான் இவ்வாறு அமைந் துள்ளது என நாம் நினைக்கும் இந்த நிலைமைதான் எல்லாக் காலத்திலுமிருந்து வருகின்றது. எண்ணும் ஆற்றல் பெற்றவர் களைவிட மந்தை எழுத்தாளர்களே (Stock-writers) எண்ணிக் கையில் மிகுகின்றனர். ஒருவர், இருவர், மிகுதியானால் மூவர் நால்வர்தாம், வறட்டுப்புலமையின் நெடுநாளைய மரபைக்கிழித்து, காலத்துக்கேற்ற கோலம் என்பதைத் தகர்த்தெறிந்து உண்மை யைக் கூறுகின்றனர். "இந்த வுலகம் தேவைக்கு மிகுதியாக என்னை நெருங்கி வந்து மருட்டுகின்றது. தேவைக்கு மிகுதியாக என் வாழ்விற்புகுந்து என்னை இழுத்துக் கொள்ளத் துடிக்கின் றது. முடியாது; நான் பணியமாட்டேன்; பிறர்தம் எண்ணங் கட்கும் கொள்கைகட்கும் அடிமையாகி, அவர் தம் அடிச் சுவடுகளிலேயே நடந்துகொண்டிருக்கமாட்டேன். நான் இவ்வுலகுக்குப் புறம்பானவன்; என் உள்நெஞ்சின் குரலுக் கன்றிப் பிறவற்றுக்கு நான் செவி சாய்க்க மாட்டேன்" என்று சொல்பவர் அவர்கள். அத்தகையோர்க்கு இற்றைநாள் நூற்கள் பயன் படுவனவல்ல. உணர்வால் துடிக்கும் உள்ளத்துக்குத் தன்னாற்றலின் வழியன்றிப் பிறவழித் துணையில்லை; இருக்கவு மியலாது என்று அவர்கள் உணர்ந்திருக்கின்றனர். ஆனால் பொதுமக்களின் சுவைகட்கெல்லாம் ஏற்ப நூலெழுதிக் குவிப்ப வர்கள் திறமை (talent) மிக்கவர்களே. அவர்கள் சொற்களை வைத்துச் சிலம்பமாடுகின்றனர். ஆனால் அவர்கள் முதுக்குறை வுக்கோ அறத்துக்கோ (?) (wisdom or virtue) எதுவுஞ் செய்தாரில்லை. திறமை உவப்பூட்டுகின்றது; முதுக்குறைவு அறிவுறுத்துகின்றது. திறமை பிறனொருவன் என்ன செய்தல் கூடும் என்பதைக் காட்டுகின்றது. ஒட்பம் (genius) மாந்த

வியல்பின் பொதுமை இயக்கத்தை விளக்கி நிற்கின்றது. முன்னது தச்சுவேலை; பின்னதோ உயிர்ப்புடைய வளர்ச்சி. எண்ண உலகினுள் ஓரடிதானும் எடுத்து வைக்கும் ஆற்றல் பெற்றோர் மிகச் சிலரே. ஓரடியோடு ஈரடி எடுத்துவைப்பவரோ நாட்டுக் கொருவரே இருப்பர். மூன்றாவது அடிக்கும் எண்ணத்தைச் சுமந்து செல்வதோ அருட் பெருஞ் சான்றோர்க்கே இயல்வதாகும்.

அல்லாவுதீன் கதை இங்கு நினைவுக்கு வருகின்றது. பூதத்தால் ஓரேயிரவிற் கட்டிமுடிக்கப்பெற்ற அழகிய அரண்மனையில் ஒரு பலகணி மட்டும் முடிக்கப் பெறாமல் இருந்ததாம். அதனை அரசன் கட்டி முடிக்க முயன்ற போழ்து அரண்மனைப் பண்டாரத்திலுள்ள பொன்னையும் மணியையும் முத்தையும் கொண்டு வந்து கொட்டிப் பலவாறாக முயன்றும் அப்பூதத்தால் அமைக்கப் பெற்ற வேலைப்பாட்டின் மிக எளிய பகுதியேனும் அமையும்படியாகக்கூட அப் பலகணியை அமைத்தல் முடியவில்லையாம். அதுபோலவே உள்ளொளிமிக்க சான்றோர் காலத்துக்குக் காலம் ஆங்காங்கு படைத்தளித்துள்ள உயர்ந்த பாடலைப்போல் ஓர் அடியைக் கூடத் திறமை மிக்கவர்—வல்லுநர் என்போரால் எழுதல் முடியாது. ஏன் இந்நிலை? இந்நூலெழுதிகளும் அவற்றைச் சுவைக்கும் கும்பலும் உண்மையை விரும்புவாராகவும் கொள்கைவழி ஒழுகுவராகவும் இல்லாமையால் தான் என்று கூறமுடியாது. அனைவரும் உண்மையை விரும்புவாரே. மாந்தர் உண்மைக்காக ஏங்கும் ஏக்கம் பெரிதே. ஆனால் அவர்கள் தத் தம் கால்களை ஊன்றி உறுதியாக எழுந்து நிமிர்ந்து நிற்கின்றாரில்லை. உட்புலனினும் புறப்புலன் முனைப்பு அவர்கள்பால் வலிவுமிக்கதாக விருக்கின்றது. புலன்கள் நம்மை விலங்குணர்வில் பிடித்துத் தள்ளுகின்றன. உயர்ந்த குறிக்கோள் உலகம் கண்முன் இருந்து விலகிச் செல்கையில் நாம் பின்னோக்கி நடப்பவராகி விடுகின்றோம். காட்டுமிராண்டிகள் போலாகின்றோம். காட்டுமிராண்டி புலன்கட் கடிமையாகின்றான். உவகை அச்சம் போன்ற வெறிகள் அவனை ஆட்டிப்படைக்கின்றன. குடிவெறியனாய், கீழ்மகனாய் ஆகிவிடுகின்றான். ஒரு குறிப்பிட்ட காலத்தில் தனக்குற்றநிலையே என்றென்றும் நிலைத்திருக்கக் கூடும் என்ற – பட்டறிவுக்குச் சற்றும் பொருந்தி வராத நம்பிக்கை எல்லாருக்கு மிருக்கிறது. இளவேனிற் காலத்தின் இனியதொரு நாளில், நமக்கு இனி வீடே வேண்டா, வெளியிலேயே வாழ்ந்துவிடலாம் என்று நினைக்கின்றோம். கடற்செலவு மேற்கொள்வார், அவ்வப்போது இருக்கும் நிலையிலிருந்து கடற்செலவு எப்படி இருக்கும் என்று தீர்மானிப்பதைப் பார்க்கிறோம். சிறிது நேரம் இனிய இளங்காற்று நன்றாக வீசினால், விரைவில் போகுமிடமடைந்து விடலாமென்றும் சிறிதுநேரம் கடல் அமைதியாகவிருந்தால் நெடுநேரம் பிடிக்கு மென்றும் நம்புகின்றனர்.

வாணிகத்திலும், பலர் அவ்வக் கால நிலைமையை நம்பியே எதிர்காலத்தைக் கணித்து ஏமாறுகின்றனர். அரசியலிலும் குமுக வாழ்விலும் கூடக் காலத்தின் அடிமைகளாகவிருக்கின்றேம். ஒன்றிரண்டு தீயவர்களைக் கண்டு உலகமே தீமையின் இருப்பிடம் என்றும் நன்மைக்கே இடமில்லை என்றும் கூறிவிடுகின்றேம். அதேபோல் வண்டியிற்செல்லும்பொழுது ஒன்றிரண்டு நல்லவர்களைக் காணில், நாடே நல்லவர்களால் நிரம்பியிருக்கின்றது என்று நினைக்கத் தோன்றுகின்றது

இவையெல்லாம் புலன்களின் ஆட்சியே என்றுதான் கூற வேண்டும். இப் புலனுட்சி உயர்ந்தாரையும், அறிவுடையாரையுங்கூட ஆட்டிப்படைத்துச் சீரிய உண்மைப் பண்பாட்டுக்குத் தடையாக நிற்கின்றது. குமுகாயத் தலைவர்கள் உறுதியானவை என்று கருதும் வாழ்க்கைப் பந்தயங்களிலும், புகழ்பெற்ற தொழில்களிலும் செயல்களிலும் பகுத்தறிவின் கூரிய கத்திமுனை ஆய்வுக்கு எதிர் நிற்பது எதுவுமில்லை. மிகவும் சுறுசுறுப்பான வாழ்க்கைகளிலுங்கூடப் பழக்கத்தின் ஆட்சி புகுந்து முன்னேற்றத்தைத் தடை செய்து விடுகின்றது. நாடெல்லாம், ஏன் உலகமெலாம் பெயர்பெற்று விளங்கும் வாணிகர்களை நாம் மதிப்போடு நடத்துகின்றேம். ஆனுல் அந்த மதிப்பு அவர்கட்கும் நமக்குமே நலம் தருவதன்று. ஏனெனில் அவர்களின் தொழிலில் எந்த ஒழுங்குமுறையுமில்லை. அவர்தம் செயல்களெல்லாம் உள்ளத்தின் இயக்கத்துக்கு எவ்வகையிலும் பொருந்தி வருவனவல்ல. குமிழிமேல் குமிழியாக அமைந்து கிடப்பவை அவை. மாந்தத் தன்மைக்குச் சிறிதும் இடமில்லாத, வெறுங் கணக்குகளின் பெருக்கம் அவை. அவ்வணிகர் உலகெல்லாம் அலைந்து பண்டங்களை வாங்கியவாறும், குவித்தவாறும், விற்றவாறுமே உள்ளனர். இவ்வலைச்சலின் உள்நோக்கங்கள்தாம் என்ன என்று ஆய்ந்தால் ஒன்றுமே இராது.

அவர்தம் திறனையும் சுறுசுறுப்பையும் நோக்கினுல் அவர் பெற்ற பட்டறிவை வியந்து போற்ருமலிருக்க முடியாது. ஆனுல் அவர்கட்கு உயர்ந்த நோக்கம் எதுவுமே யில்லை என்பதை நோக்குங்கால் அவர்தம் கொள்கையிலா வாழ்க்கையைச் சற்றும் பாராட்டற்கில்லை.

இவ்வாணிகர் போலவே இலக்கிய வாணிகரும் வெறும் வழக்கங்கட் கடிமையாக இருக்கின்றனர். ஆட்சியாளரும் அவ்வாறே! அரசியல் உலகில் சான்றேரைக் (Statesmen) காண்டல் அரிது. ஆட்சி, பெரும்பாலும் அரசியல் வாணிகரால் எவ்விதக் கொள்கையுமின்றி வாணிப முறைப்படியேதான் நிகழ்த்தப் பெறுகின்றது. எனவே வாணிகரைப்பற்றிய செய்திகள் அனைத்தும் இவ் வாட்சி வாணிகர்க்கும் பொருந்துவனவே.

அவர்களை நாம் மதிக்க வேண்டுவதில்லை. மிடுக்கான பெயர் கட்கும் பகட்டான தோற்றங்கட்கும் நாம் ஏமாற வேண்டுவ தில்லை பட்டங்களும் சொத்துகளும் பெற்ற புகழும் எல்லாம் காவு கொடுக்க இழுத்துச் செல்லப் பெறும் ஆடுகளுக்கிட்ட கழுத்து மாலைகள் போன்றவை. அவற்றை அணிவாரைக் கண்டு நமக்கு வருத்தமே மேலிடுகின்றது.

ஏன் இந்நிலை? படைப்பின் முழுமையை எட்ட முடியாத அளவுக்குத் துணுக்குகள் ஒன்றன்மேல் ஒன்றாய் வந்து விழுந்து மூடி மாந்தனின் விழிகளை மறைத்து விடுகின்றன. வழக்க மென்னும் இம் முகமூடியை நினைத்தால் நெஞ்சம் நடுங்குகின்றது எண்ணத் துறையில் முன்னேக்கிச் செல்வதாக நினைத்துக் கொண்டே பின்னேக்கி நடந்துவிடுகின்றேம். இப் புறப் புலன் முனைப்பை அடக்கி ஒடுக்கி இயைபு படுத்தல் இயலுமா? வேட்கை, வழக்கம் எனும் மலைகளையெலாம் நொடிப்பொழுதில் இடித்தெறிந்து மின்னி முழங்கும் எண்ண மின்னல்களைப் பிடித் திழுத்து என்றும் நிலைக்குமாறு செய்தல் முடியுமா? அறத்தையே அடிப்படையாகக் கொண்டு உலகத்தைத் திருத்தி அமைத்தல் முடியுமா? இவையெல்லாம் பெரிய வினக்களே. ஆனல் இவற்றை நாம் புறக்கணித்தல் சாலாது. இவ் வுண்மைகளை நாம் தெரிந்து கொண்டிருப்பதே நாம் மெய்யறிவின் மருங்கு நிற்பதற் கடையாளம். பகுத்தறிவும் உள்ளொளியும் நம் அருகு நிற்கின் றன. போராட்டத்தின் எக்காளம் முழங்குகின்றது. உலகத்தின் வெறித்தனத்துக்கு ஒரு முடிவுகட்டி மாந்தனின் வாழ்வை நிலைப் படுத்தும் நாள் விரைவில் வராமற் போகாது.

ஆங்கிலத்தில்: எமர்சன். தமிழில்: ம. இலெ. தங்கப்பா.

பாவாணர் நடத்தும் புலவர் வகுப்பு.

மாணவர் நலங் கருதியும், தெளிந்த தமிழறிவுக்கு வழி செய்யும் வகையிலும் பாவாணர் அவர்கள் நடத்திய புலவர் வகுப்பு, போதிய மாணவர்கள் இல்லாமையாலும், வேறு சில காரணங்களாலும் நிறுத்தப்பட்டது.

ஆதலின், புலவர் வகுப்புத் தொடர்பாக யாரும் பாவாணர் அவர்கட்கு மடல் எழுத வேண்டா என்று கேட்டுக் கொள்கின்றேம்.

செந்தமிழ்ச் சின்னச்சாமி.

செந்தமிழ் மறவன் சின்னச் சாமி
வெந்தழல் புகுந்து வெந்தனன், என்றெரு
செய்திவந் தெம்செவி சேர்ந்ததும் உள்ளம்
வெய்துயிர்ப் புண்டது! வெயர்த்தது உடலம்!
தமிழ்க்குயிர் துறந்த தமிழ்மகன், தன்றுய்
அமிழ்தெனும் மனைவி மக்கட் கெல்லாம்
வைத்துச் சென்ற வைப்பெலாம் புகழே!
பொய்த்துயிர் வாழும் போலியர் தமக்குச்
சின்னச் சாமியின் ஈகச் சிறப்பும்
மன்னும் புகழும் மறையா திலங்குக!
தமிழ்க்குயிர் செகுக்கும் தகைமை யாளர்
தமக்கொரு நற்சொல்: தமிழ்க்கென உயிரை
ஈதல் என்றுல், எரிநெய் ஊற்றிச்
சாதல் இல்லை! சாகுநாள் வரையில்
செந்தமிழ்க் குற்ற தீமைகள் களைதலும்
வெந்துயர் தருவார் தம்மை வீழ்த்தலும்
ஆகுமே அன்றித்தாம் அழிதல் அன்று.
சாகுவர் தம்மால் தமிழ்ப்படை சாகும்!
பகைப்புலன் அறுக்கப் பதைப்பார்
வகைப்பட முயல்வதே வழியென் றறிமே!

இலக்கியம்

எண்சுவை எண்பது.

8. நகை.

அள்ளியணை; கள்வாய் அருந்தத்தா! என்றுனும்.
கொள்ளை நகைப்பான கூத்தாம்! அவள்வளர்க்குங்
கிள்ளை மொழிந்த கதை. (1)

---

8. நகை.

மகளும், அவள் மணவாளனும் தனிப்பட நடத்தும் நிகழ்வைப் பொதுப்பட நிகழ்த்தித், தானும் மற்றுரும் நகைத்து மகிழ்தலும் நகை எனலாயிற்று.

1) தன் மகளுக்கொரு மணவாளன் கிடைத்த பின்றைத் தன்ஞெடு பேசி மகிழ வேஞெரு நற்றுணை யின்றுகையால், மகள் வளர்க்கும் கிளியோடு உரையாடிஉவக்கும் தாய்க்குக் கிளி யுரைத்ததைப் பொதுப்படக் கூறி நகைக்கின்றுள்.

மகளும் அவள் கணவனும் ஒருபுறத் துரைத்ததைக் கேட்டிருந்த கிளி, அவர் பேசிய பேச்சுகளைப் புறஞ்சாற்றுகின்றதைக் கூறுவதாமிது.

துரை-மாணிக்கம்

ஏட்டி, கோ தாயிவண்வா! இன்மலரை நின்குழலிற்
சூட்டிக்கோ வென்றேனு; சுட்டிப்பெண் பெற்றவன்பால்
நீட்டிச் சூ டென்றுள்முன் நின்று. (2)

பட்டாடை கட்டிப் படுத்தாளே; கொண்கன்றான்
கட்டாடை கட்டிமறு காலைவந்தாள்! வந்தானே
சிட்டாடை கட்டிச் சிறந்து! (3)

அவள் வளர்க்கும் கிள்ளை என்றதால், தான் வளர்க்கும் மகள் செய்த் கூத்தினை, அவள் வளர்க்கும் கிள்ளையே புலப் படுத்தியதெனக் கொள்க.

அள்ளி அணைத்துக் கொள் என்றதும், கள் ஊறும் வாயினை அருந்துதற்குக் கொடு வென்றதும், தனிப்பட நிகழ்ந்த நிகழ்வுகள். கூறுவ கூறும் கிள்ளை, ஆதலின் அவ்வாறு கூறிற் றென்க.

2) ஏட்டி–ஏடி. வலித்தது.

'ஏடி! கோதைப் பெண்ணே, இங்கு வா, இன் மலரை நின் குழலில் சூட்டிக் கொள்' என்று கூற, அவள் அம் மலரை வாங்கிக் கொண்டு சென்று, தன் கணவன் முன் நின்று, நீட்டிச் சூடென்று சொன்னுள்' என்பதாம்.

மலரைச் சூடுதற்கு விளித்தாளாகையால், கோதை என்றுள். கோதை–குழல். ஈண்டு ஆகு பெயராய் மகளைக் குறித்தது. சுட்டிப் பெண்–துடுக்குத்தனமுள்ள பெண்.

குழலில் மலர் சூட்டுதல் முதலிய காதன் நிகழ்வுகள், தனிப்பட நடவாது, தன் முன்னேயே நடந்தது நகை தோன்றுவதற்குக் காரண மென்க.

3) மகளும், அவள் கணவனும் முன்னிரவு உறங்கி, மறுநாள் காலை எழுந்து வந்தக்கால், ஒருவர் உடையை ஒருவர் கட்டி வந்தனர் என்பதாம்.

கொண்கன்தான் கட்டு ஆடை–கணவன் கட்டுகின்ற ஆடை.

சிட்டாடை–சிறு பெண்கள் அணியும் மேலாடை. சிற்றுடை என்பது எதுகை பற்றிச் சிட்டாடை என்று வந்தது.

கார்குழலிற் கொண்கன் கணையாழி உட்புகவும்
ஈர்களைய முன்விழவும் யானகைக்கக் கேட்டதனை
ஊர்சிரித்த தன்றை, உவந்து! (4)

கீரனென்றான்; இல்லையவள் கிள்ளையென்றாள்; இல்லையில்லை
பாரதென்றான்; என்னென்றேன்; பாவைபெறும் பிள்ளைக்குப்
பேரதென்றாள், யான்பெற்ற பெண்! (5)

கடுத்த திடையென்றாள்; காய்சுக்கு நீரைக்
கொடுத்துக் குடியென்றேன்; கொண்கனுக்கும் என்றாள்
படுத்து நகைத்தார் பலர். (6)

முன் காலையில் எழுந்த அவளுக்கு, இருட்காரணமாக ஆடை மாறியதும் பின் காலையில் அவன் எழுந்து வந்த விரைவு காரணமாக ஆடை மாறியதும் இயல்பே என்க.

4) இரவில் அவள் குழலை வருடல் முதலிய காரணம்பற்றி, அவனுடைய கணையாழி குழலுட் புகுந்ததும், தாய் ஈர் களைந்த ஞான்றை, அவள் முன் விழுந்ததும், இரா நிகழ்ச்சியை வெளிப்படுத்தின வாதலின், ஈண்டு நகை தோன்றியதாம்.

ஊர் சிரித்தது அன்றை உவந்து என்றது இந்நிகழ்ச்சியைக் கண்டோரும், கேட்டோரும் நகைத்து மகிழ்ந்தனர் என்பதாம். தன் மகளும், தன் மருகனும் கொண்டாடும் நல்லுறவு பற்றி, அவள் மகிழ்ந்து பலரிடமும் உரைப்பாளாகையான் ஊர் சிரிக்கக்காரணமாயிற்றாம். யானகைக்கக் கேட்டு என்றது யான், அதை நினைத்துநினைத்து நகைக்கப் பலரும் அந்த நகையின் காரணம் கேட்டு நகைத்தனர் என்பதாம்.

5) பிறவாப் பிள்ளைக்குப் பெயர் வைக்கப் போராடியது கண்டு தாய் நகைத்தது. பிள்ளைபெறுமுன்பெயர் கருதிப்போராடல் அவர் பேதைமையைக் காட்டிற்று.

6) மகளுக்கு இடை கடுத்தது கண்டு, சுக்கு நீர் தந்து, குடி என்னலும், அவள் தனக்குக் கிடைக்கும் பொருளைத்தன் கணவனுக்கும் உண்ணத் தந்து, பிறகருந்தும் பழக்கமாக, அந்தச் சுக்குநீர் அவனுக்கும் வேண்டும்என்றது கேட்டுத் தாய் நகைத்தாள் என்பதாம்.

''தீதுசெயல் நன்றேசொல் தீங்கிளியே'' என்றாளுக்
கேதுசெய்தேன் கிள்ளை'' யென்றான்! என்னென்றேன்; ஊடலெனக்
காதருகிற் சொன்னாள் கதை. (7)

மகளொடு துஞ்சும்! மகளொடெழும்! நாளும்
மகளொடு கொஞ்சும்; மகநோய்க்கு நோகும்;
மகள்தேர்ந் தெடுத்த மகன். (8)

படுத்து நகைத்தார் பலர்–என்றது மகள் நலங்காண வந்த பலரும் விழுந்து விழுந்து நகைத்தனர் என்றதாம்.

7) இது மகளுக்கும், மருகனுக்கும் நடந்த சிறு பிணக்குக் குறித்துக் கூறுவதாகும்.

பிணக்கு வந்துற்றக்கால், ஒருவருக் கொருவர் நேர் முகமாய் மொழியாது, வீட்டிலுள்ள கிள்ளையை முன்னிலைப் படுத்திக் கூறினர் என்றலும், அதுபற்றித் தாய் கேட்க, அவள் காதருகில் தங்களுக்கிருக்கும் ஊடலைச் சொன்னாள் என்பதுமாம்.

கிளியை முன் வைத்து மொழிதலும், காதருகில் வந்து சொன்னதும் நகையாயிற்று.

கதை–என்றது ஊடல் நிகழ்ந்த காரண, கருமத்தையாம்.

8) **மகள் தேர்ந்தெடுத்த மகன்**–என்றது, பெற்றோர் தேராது மகளே தேர்ந்த கணவன் என்றவாறு.

அவளொடு ஒன்றாகத் துஞ்சுவதும், ஒன்றாகவே எழுவதும், கொஞ்சுவதும், பற்றித் தனக்கேற்ற கணவனையே தேர்ந்தெடுத்துக் கொண்டாள் எனும் பெருமையொடு நகைத்ததாம் எனக் கொள்க.

தன் மகளையே சுற்றிக் கிடக்கும் மருகன்பால், தோன்றும் நகைப்பு என்க.

மகள் நோய்க்கு நோகும்–என்றது, மகளுக்கு வந்த நோயைத் தனக்கு வந்ததாகக் கருதி வருந்துவான் என்றபடி. இனி, மக நோய் என்றே கொண்டு கருவுற்றக்கால் நேர்கின்ற நோ வகை என்றும், அதற்காகத் தானும் கருவுற்றான் போல வருந்துவான் என்றும் கொள்க.

நிறைச்சூலந் நாளவளோ நீட்டிக் கிடந்த
அறைத்தாழ் மருங்கில் அவள்நோக நொந்தென்
பிறைபெறப்பெற் ருன்மகிழ்வு பின். (9)

கலைபெற்ற சீரைக் கவின்மகவை வாங்கித்
தலைநுகர்ந்தான் தன்பால் தளிர்க்கொடி, உங்கட்
கிலையினி யென்ருள் இடம்! (10)

---

9) நிறைச் சூல் அந்நாள்–பிள்ளைப் பேற்று நாளன்று.

நீட்டிக் கிடந்த அறை–பிள்ளைப் பேற்றின் பொருட்டு அவளை நீட்டிக் கிடத்திய அறை.

அறைத் தாழ் மருங்கில்–அறைக் கதவின் அருகில்.

பிள்ளைப் பேற்றன்று, மகளைக் கிடத்தி வைத்த அறையின் கதவிற்கருகில், வெளிப்புறமாய் அமர்ந்து, உட்புறம் அவள் நோக, இவனும் நொந்து, அவள் ஒரு மகவைப் பெற, இவனும் மகிழ்வைப் பெற்ருன் என்பதாம்.

அவள் நோக நொந்து–என்றது, செயலொன்றியது காட்டுவான் வேண்டி.

என் பிறை பெறப் பெற்ருன் மகிழ்வு–என்றது பயனும் ஒன்றியது எனல் வேண்டி.

என் பிறை–பிறை போன்ற நெற்றியை உடைய என் பெண். அவள் உடல் நொந்து மகவைப் பெற்ருள் என்றலும், இவன் அவள் நோக நொந்து மகிழ்வைப் பெற்ருன் என்றலுமாம். இவனும் நொந்து பெற்ருன்–என்பது நகையாம்.

10) கலை பெற்ற சீர்–கலையழகு நிரம்பிய தன் மகள் பெற்றெடுத்த செல்வமாகிய குழந்தை.

'குழந்தையை எடுத்துத் தன் கணவன் தலை நுகர்தல் கண்டு மகிழ்ந்த அவள், உங்கட்கு இனி என்னருகில் இடமில்லை' என்ருள் என்க.

தளிர்க் கொடி–பேற்ருல் வருந்திக் கொடி போல் துவண்ட பெண். தன் மகள் பால் சுற்றித் திரிந்த மருகன் அவள் மகவீன்ற காரணம் பற்றி இனி அருகில் இடமில்லை என்றதும், அதனுல் அவன் வருந்துதலும், நகைப்பை விளைத்த தென்க.

தன் மகளின் பிள்ளைப் பருவத்திலிருந்து, பேற்றுப் பருவம் வரை தாய் கண்ட சுவை நலன்கள் போலவே, தன் மகளும் தன் பிள்ளையிடம் தொடர்ந்து காண்பாளாகையால் குழந்தைப் பேற்ருேடு நகையும், எண்சுவையும் முற்றின வென்க.

*

உயிரி இயல்.

தேள்

தேளில் ஏறத்தாழ நானூறு வகைகள் இருப்பதாகக் கூறுகின்றனர். இவ்வினம் மிகப் பழைய இனங்களில் ஒன்று. அரை விரற்கடை முதல் எட்டு விரற்கடை நீளம் வரையில் தேள்கள் காணப்படுகின்றன. இவ்வினம் சிலந்தி வகைகளில் ஒன்றாகும். இதன் வால்புறம் உள்ள கொடுக்கில் இருந்து வெளிப்படும் நஞ்சு, உயிர்களுக்கு மிகக் கடுப்பைக் கொடுக்கும். சிறு குழந்தைகள் சில தேள் கொட்டி இறந்ததுண்டு. இவை வெப்ப மிகுந்த நாடுகளிலேயே வாழ்கின்றன. இவை பகற்காலங்களில் புழைகளிலும் தொளைகளிலும், மரம், கல் இவற்றின் அடிப்பகுதிகளிலும் பதுங்கியிருந்து இரவில் வெளிப்படுகின்றன. சில இடங்களில் மணலில் குழிபறித்து முடங்கிக் கொண்டும் கிடக்கும். மிகக் கடும் வெப்பக் காலத்து மண்ணுள் தொளை செய்து உட்புகுந்து இருந்து, மழையால் தரை நனைந்து இருக்கும் பொழுது வெளிப்போந்து சந்து பொந்துகளில் தங்கி வாழ்கின்றன. இவை சிற்றுயிரிகளைப் பிடித்து உணவாகக் கொள்கின்றன.

தேளின் உடலை, தலையும் மார்பும் சேர்ந்த தலைப்பகுதி, அல்லது முன்னுடல், வயிறு, வால் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். வயிற்றிலே ஏழு கண்டங்களும், வாலில் கோதுமை மணிகள் போன்ற ஐந்து பிரிவுகளும் உண்டு. வாலின் இறுதி மணியில் கொடுக்கு இருக்கின்றது. இவையன்றித் தலையில் இரண்டு சிறிய இடுக்கிகள் உண்டு. இதனிடையில் வாய் அமைந்துள்ளது. இரையை இடுக்கிகளால் பற்றிக்கொண்டு உண்ணுதற்கு வாகாக இவை அமைந்திருக்கின்றன. இதன் அண்மையிலேயே முன்னவையினும், வலி மிக்கனவும், பெரியவையுமான இரண்டு பெரிய இடுக்கிகள் இருக்கின்றன. இவை உணர்வுக் கருவிகளாகவும் பயன்படக் கூடியன. இவையன்றி, பக்கத்திற்கு நான்கு மேனி எட்டுக் கால்கள் உடற்பகுதியில் அமைந்துள்ளன. உடலில் உள்ள ஒவ்வொரு கண்டத்திலும் பக்கத்திற் கொன்றாக இரண்டு தொளைகள் உள்ளன. இவற்றின் வழியாகவே தேள், மூச்சை உள்வாங்கி வெளிப்படுத்துகின்றது. கீழ்வயிற்றில் உள்ள முதல்கண்டத்தின் நடுவில் இதற்குப் பிறப்பு வாயில் அமைந்துள்ளது. அந்த வாயில் ஒரு சிறு தகடு கொண்டு மூடப் பெற்றுள்ளது. இதன் வாயிலிருந்து வால் பகுதிவரை நீண்டுள்ள ஒரே அளவான உணவுக் குழாய் உள்ளது. அதன் சுவர்களில் சுரப்பிகள் இருக்கும்.

தேள் இரையை உண்ண விரும்பும் பொழுது, தலையில் உள்ள பெரிய இடுக்கிகளால் பிடித்துக் கொண்டு, வாயின் அருகில் உள்ள சிறிய இடுக்கிகளால் துண்டித்து, இரையாக அகப்பட்ட பூச்சி புழுவின் உடலில் புண் உண்டாக்குகின்றது. இதற்கிடையில் தன் கொடுக்கால் அதனைக் கொட்டி மயக்கமோ இறப்போ ஏற்படுத்துகின்றது. சிறிய கொடுக்கியால் புண் உண்டாக்கிய சதைப்பகுதியில் தன் வாயிலிருந்து ஒரு செரிமான நீரை உமிழும். நீர் பட்டவுடன் இரையின் சதைப் பகுதி கரைந்து நீர் வடிவாக மாறும் அக்கால் தேள் தன் முன் தொண்டையின் தூம்பால் அந்நீரை உறிஞ்சுகின்றது. ஒரு கரப்பான் பூச்சியை இவ்வாறு கரைத்து உண்ணுமானால், இறுதியில் அப்பூச்சி வெறும் உலர்ந்த ஓடாக நிற்கும். இவ்வாறு உறிஞ்சி யுண்ட தசைநீர் முன் தொண்டையில் வடிகட்டப் பெற்றுக் குடலுக்குள் போகும். அங்கு மிகப் பெரிய அளவில் ஊறும் செரிமான நீர், உணவு நீரை மேலும் நன்றாகச் செரிப் பித்து உயிரணுக்களுக்குக் கொடுக்கும் பயனுடைய உணவு போக எஞ்சிய கழிவு, வாலின் கடைக் கண்டப் பகுதியில் கொடுக்குக்கு நேர் அடியில்உள்ள கழிவாய் வழி வெளித்தள்ளப் பெறும். தேளுக்குப் பூச்சிகள், சிலந்தி, மரவட்டை, பூரான் முதலியனவே உணவு இதற்கு மிகையான உணவு தேவை யில்லை. உணவே இல்லாமல் ஓராண்டுக் காலம் வரையில் தேள் உயிருடன் இருக்கும். ஈர நிலத்தில் வாழ்கின்ற தேள்கள் நீரையும் உணவாக அருந்தும். பாலைப் பகுதிகளில் உள்ளன நீரின்றிப் பல மாதங்கள் உயிருடன் இருக்கும்.

தேளுக்கு ஊறுணர்வு மிகுதி. இதற்கு மொத்தம் பத்துக் கண்கள். தலைப்பகுதியின் மேற்புற நடுவில் இரண்டு பெருங் கண்களும், தலையின் முன் விளிம்புகளில் பக்கத்துக்கு நான்கு மேனி எட்டுச் சிறிய கண்களும் உண்டு. இத்தனைக் கண்கள் இருப்பினும் தேளுக்குப் பார்வை மிகக் குறைவே. அதன் பார்வைத் தொலைவு சில விரற்கடை அளவினதாகவே இருக்கும் ஒரு பொருளை அரை குறையாகவே அது பார்க்கின்றது. இருப் பினும் அது நெருங்கித் தொட்டவுடன் அப்பொருளின் தன்மையை முற்றும் உணர்ந்து கொள்கின்றது. இத்தகைய ஊறுணர்வைச் செய்வது தேளின் உடல் முழுதும் உள்ள குறு மயிர்களே! தேளின் அடிவயிற்றில் முள் முளை போன்ற வரிசை யான உறுப்புகள் உள்ளன. இவை மிகையான உணர்வுடை யன. பால் (Sex) உணர்வை எழுப்ப இவை தூண்டுகோலாக வும் உள்ளன. பெண் தேள்களைக் காட்டிலும் ஆண் தேள் களுக்கே மேற்கண்ட உறுப்புகள் பெரியவையாக உள்ளன. தேள் தரையிலோ, மரத்திலோ ஊர்ந்து போகையில் நிலத்தின் தன்மையை உணர இவை பெரிதும் பயன்படுகின்றன.

தேளினம் ஏறத்தாழ இருப்த்தெட்டுக் கோடி ஆண்டுகளாக உயிர் வாழ்ந்து வருகின்றது. எனினும் இதனினும் தாழ்ந்த உயிரிகளிடை வளர்ந்து மாறுபட்டுள்ள முன்னேற்றம்கூட இதன் இனத்தில் ஏற்படவில்லை. கூட்டு வாழ்க்கை உணர்வே இதனிடம் இல்லை. ஒவ்வொரு தேளும் தனித் தனியாகவே வாழ்கின்றது. ஒன்றை மற்றொன்று காணநேரினும் இரண்டும் விலகித் தன் தன் வழியே போகின்றன. அல்லது இரண்டும் போரிட்டுக் கொள்கின்றன. இப்போரில் ஏதாவதொன்று மற்றொன்றை அழித்துவிட்டே புறம் போகின்றது. தேள் தோலுரிக்கும் இனத்தைச் சேர்ந்தது.

பெண் தேளைவிட ஆண் தேள் மெல்லியதாகவும் வால் நீண்டதாகவும் இருக்கும். அடிவயிற்றில் உள்ள முள் முளைகள் ஆணுக்குப் பெரியதாகவும் மிகையான பற்களை யுடையனவாகவும் இருக்கும். ஆணும் பெண்ணும் எதிர்ப்பட்டவுடன், தம் முன் கொடுக்குகளால் ஒன்றை ஒன்று இறுக்கிப் பிடித்துக் கொண்டு இரண்டும் முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் நடந்து நாட்டிய மாடுகின்றன. இந் நாட்டியம் மேனாட்டாரின் இணை நாட்டியம்போல் இருக்கும். உணர்வு ஏற ஏற இரண்டும் தம்பின் வால்களை மேலே தூக்கி நிமிர்த்தி ஒன்றோடு ஒன்றை உராய்ந்து கொள்கின்றன இதன் பின் ஆண்தேள் தரையில் மறைவாக உள்ள ஓர் இடத்திலோ தொளையிலோ பெண்ணை இட்டுச் சென்று கூடுகின்றது. புணர்ச்சிக்குப் பின் பெண்தேள் ஆணைப் பிடித்துக் கொன்று தின்றுவிடுகின்றது. ஆண் தப்பிப் பிழைப்பது அரிது.

தேள் குட்டிபோடும் இனத்தைச் சேர்ந்தது. தாயின் வயிற்றிலேயே முட்டைகள் முதிர்ந்து குட்டிகளாக வெளிவரும். குட்டித்தேள் பெரிய தேள்களுக்கான முழு உறுப்புகளையும் பெற்றிருக்கும். தேள் குஞ்சுகள் பிறந்த நிலையில் உணவு கொள்ளல் இயலாது. குஞ்சுகள் தாய்த்தேளின் முதுகில் மொய்த்துக் கொண்டிருக்கும். தாய்த் தேள் குட்டிகளுக்கு உணவு ஊட்டுவதில்லை. உடலுக்குள் எஞ்சியுள்ள மஞ்சட் கருவினாலேயே குட்டித் தேள்கள் சில நாட்களுக்கு உயிர் வாழும். முதல் முறையாகத் தோலுரிக்கும் வரைகூடத் தம் தாய் முதுகில் அவை ஏறிக் கொண்டிருக்கும். இக் குட்டிகள் மிகவும் சுறுசுறுப்பு உடையன. நாளடைவில் அவை ஒவ்வொன்றாகத் தாயை விட்டுப் பிரிந்து போகும். குட்டி போட்டபின் தாய்த் தேள் இறந்து விடுகின்றது என்பதும் தேள் குட்டிகளைத் தாய்த் தேள் தின்று விடுகின்றது என்பதும், உண்மையல்ல.

(28-ஆம் பக்கம் பார்க்க)

திருக்குறள் நல்லுரை ஆய்வு:

எற்றென்று இரங்குவ செய்யற்க.

பேராசிரியர், கு. சுந்தரமூர்த்தி,
(செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.)

இம் முதற் குறிப்புடைய திருக்குறள், பொருட்பாலில் வினைத் தூய்மை என்ற அதிகாரத்தில் உள்ளது. அத் திருக் குறள் வருமாறு:-

''எற்றென்(று) இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.''

இக் குறளுக்குக் கிடைத்திருக்கும் உரைகள் ஐந்து. அவ் வைந்து உரைகளும் கருத்து வகையால் நான்கில் அடங்கும். அந்நான்கு உரைகளில் தக்கது எது? என்பதை ஈண்டு ஆராய்வோம்.

1) திருக்குறளுக்கு உரையெழுதிய பழைய உரையாசிரியர்கள் பதின்மருள் முன்னவர் மணக்குடவரேயாவர். அவரும் பரிப்பெருமாள் என்பாரும் ஒரே கருத்தினராய் உள்ளனர். அவர்கள் உரை வருமாறு:-

''துணியப்பட்டதென்று பின் இரங்கப்படும் வினையைச் செய்யா தொழிக; வினை செய்வான் ஆயின், அவை போல்வனவும் செய்யாமையே நல்லது என்றவாறு. இஃது, பின் இரங்கப் படும் வினையைச் செய்யலாகாது என்றது''.

இவ்வினையைச் செய்தல் தக்கதா அன்றித் தகாததா என ஆராய்தலின்றிச் செய்து, பின் தான் இரங்கும்படியாக அவ்வினை அமைதல் கூடாது. அன்றி அவ்வாருன வினையை ஒரோவழித் தான் செய்துவிடினும், அதற்குப் பிறகாவது தன் வாழ்நாளில் அத்தகைய வினைகளைச் செய்யாதவாறு காத்துக் கொள்ளல் வேண்டும் என்பது இவர்தம் கருத்தாகும்.

உரையில் 'வினை செய்வான் ஆயின்' எனப் பொதுப்படக் கூறியிருப்பினும், பின் தான் இரங்கத்தக்க வினை என்பதே கருத்தாகும்.

இவர், கருத்தின்படி 'அன்ன' என்ற சுட்டு, 'அவ்விரங்கத் தக்க வினைகள்' என்பதைக் குறிக்கும்.

2) **பரிதியார் உரை:–** "என்ன காரியம் செய்தோம் என்று பின்பு விதனப்படாத காரியமே செய்வான் மறுத்து நல்ல காரியம் செய்வான் என்றவாறு."

இவ்வுரை குறளுக்குச் சொற்படு பொருளாக இராமல், போந்த கருத்தாகவே உள்ளது. எத்தகைய வினையைச் செய்து விட்டோம் எனப் பின் தான் இரங்கத்தக்க வினைகளை மேற்கொள்ளாத ஒருவன், எஞ்ஞான்றும் நல்ல வினைகளையே செய்வான் என்பது இதன் கருத்தாகும்.

இவருக்கும் 'அன்ன' என்ற சுட்டு 'அவ்விரங்கத்தக்க வினைகள்' என்ற பொருளையே குறிக்கும் என்பது உய்த்துணரத் தக்கது.

3) **காளிங்கர் உரை:–** "இவை தகாது என்று அஞ்சாது நெஞ்சில் துணிவு கொண்டு பிறர் சோகிக்கத் தகுவனவாகிய தூயது அல்லாத கருமங்களைச் செய்யாது ஒழிக; இங்ஙனம் இதனைக் குறிக்கொண்டு செய்வான் ஆயினும், செய்யும் கருமம் செய்யும் இடத்தும் பிறர்க்கு இரக்கம் வருதல் செய்யாமையே நன்று என்றவாறு."

பிறர் வருந்துதற்கு ஏதுவான அடாத செயலை ஒருவன் செய்யலாகாது; அன்றி நற்செயலை மேற்கொண்டு ஒருவன் செய்யினும் பிறர் வருந்துமாறு செய்தல் தக்கது அன்று என்பது இவர்தம் கருத்தாகும்.

இவர் கருத்தின்படி 'இரங்குவ' என்பதற்குப் 'பிறர் இரங்கத் தக்க வினைகள்' என்றும், 'அன்ன' என்பதற்கு 'அங்ஙனம் பிறர் இரங்கத்தக்க' என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

4) **பரிமேலழகர் உரை:–** "யான் செய்தது எத் தன்மைத்து என்று பின் தானே இரங்கும் வினைகளை ஒருகாலும் செய்யாது ஒழிக; அன்றி ஒருகால் மயங்கி அவற்றைச் செய்யுந் தன்மையன் ஆயினும்ஒன்றாயின் பின்னிருந்து அவ்விரங்கல்களைச் செய்யாது ஒழிதல் நன்று என்றவாறு"

தனக்குத் தானே வருந்தத்தக்க செயல்களை ஒருவன் செய்தல் கூடாது; அன்றி ஒரு கால் அத்தகைய வினையைச் செய்து விடினும் அதற்காக வருந்தக் கூடாது என்பது இதன் கருத்தாகும்.

தவறான வினைகளைச் செய்துவிட்டுப் பின் அதற்காக வருந்திக் கொண்டிருந்தால், இவன் தான் செய்யும் வினையை எண்ணிச் செய்வதில்லை என்றும், தன் பழியைத் தானே தூற்று

கின்றான் என்றும், தவறான வினையைச் செய்துவிட்டுப் பின் அதற்காக வருந்துவதனால் பயனொன்றும் இல்லையாதலின் பய னில்லன செய்கின்றான் என்றும் பிறர் பழிதூற்றுவர் ஆதலின், அதற்காக வருந்திக் கொண்டிருத்தல் தகாது என்கின்றார் பரிமேலழகர்.

எனவே, இவர் கருத்தின்படி 'அன்ன' என்ற சுட்டு 'அத்தகைய தீய வினைகளைச் செய்ததற்காக வருந்துதல்' என்பதைக் குறிக்கும்.

முடிவுரை:-

இத் திருக்குறள் இருதொடராக அமைந்துள்ளது 'எற் றென்று இரங்குவ செய்யற்க' என்பது ஒரு தொடர். 'செய்வா னேல் மற்றன்ன செய்யாமை நன்று' என்பது பிறிதொரு தொடர்.

எத்தகைய தீச் செயலைச் செய்துவிட்டோம் எனப் பின் தானே இரங்கும் வினையைச் செய்தலாகாது. அங்ஙனம் இன்றி அத்தகைய தீச் செயலை ஒரு முறை செய்துவிடினும், பின்பாவது தம் வாழ்நாளில் அத்தகைய செயல்களைச் செய்யாது காத்துக் கொள்ளல் வேண்டும் என்பது மணக்குடவர், பரிப் பெருமாள், பரிதி ஆகியோரது கருத்தாகும்.

தீய செயல்களை ஒருவன் செய்யக்கூடாது; அவ்வாறன்றிச் செய்துவிடின் பின் அதற்காக வருந்தக் கூடாது என்பது பரிமே லழகர் கருத்தாகும்.

இவர்களுள் முன்னைய மூவர்க்கும் 'அன்ன' என்பது 'அத் தகைய தீய செயல்கள்' என்ற பொருளைக் குறிக்கும். பரிமேலழ கருக்கு 'அன்ன' என்பது 'அதற்காக வருந்துதல்' என்ற பொருளைக் குறிக்கும்.

'இரங்குவ' என்ற சொல்லிற்கு 'இரங்கத்தக்க வினைகள்' என முன்னர் உரை வகுத்த பரிமேலழகர், பின் 'அன்ன' என்ப தற்கு 'அவ்விரங்கல்கள்' என்று மட்டுமே பொருள் கொள்கின்றார். இது பொருந்துவதன்றாம். ஏனெனில் எற்றென் றிரங்குவ செய்யற்க என்ற ஆசிரியர், செய்வானேல் மற்றன்ன செய்யாமை நன்று என்று கூறுகின்றார்; எனவே செய்வானேல் என்பது இரங்கத்தக்க வினைகளைச் செய்வானேல் என்றே பொருள்படும். அங்ஙனமாகவே அடுத்து 'மற்று அன்ன' எனக் குறிப்பிடுவது அத்தகைய வினைகளைக் குறித்தற்கு இயைபாகுமேயன்றி, அதற்கு முன்னைய தொடரிலுள்ள இரங்குதல் என்ற சொல்லைக் குறித்தற்கு இயைபில்லை. அன்றியும் தீய செயல்களைச் செய்த ஒருவன் அதற்காக எஞ்ஞான்றும் வருந்திக் கொண்டேயிருத்தல்

கூடாதே யன்றிச், செய்தது தீமை எனத் தெரிந்தவுடன் தக்க வாறு வருந்துதலும் வேண்டும். வருந்துதல்தான் திருந்துதற்கு ஏதுவாகும். பாண்டியன் கள்வனல்லாதவனைக் கள்வன் எனக் கருதிக் கொன்றான்; பின் அது தவறு எனத் தெரிந்தான்.

> ''பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
> யானோ அரசன் யானே கள்வன்''

என வருந்தினான். உயிரையும் துறந்தான். அவ்விரங்குதல்தான் 'வல்வினை வளைத்த கோலை மன்னவன் செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது' எனப் பாராட்டப் பெறுவதாயிற்று.

திருவள்ளுவரும் பிறர் நாணத் தக்க செயல்களை ஒருவன் செய்துவிட்டு, அதற்காகத் தான் நாணாது இருப்பானாயின், அதற்கு அறம் நாணும் என்று கூறுகின்றார். இதனையே ''கருமத்தால் நாணுதல் நாணு'' எனப் பிறிதொரு குறளிலும் கூறினர். இத்தகைய நாணுடைமை (அஃதாவது இழிந்த வினை செய்யின் அதற்காக வருந்துத லுடைமை) வேண்டும். அது திருந்துதற்குப் பொருட்டாகும். இங்ஙனம் கூறவே இழிந்த தீச் செயலைச்செய்த ஒருவன், அச்செயலையே நினைந்து நினைந்து வருந்திக்கொண்டே யிருந்துவிட்டால் போதுமானது; வேறு நற் செயலைச் செய்ய வேண்டா என்று கருதுதலும் தக்கதன்றாம். தீச் செயலுக்காக வருந்துதல் பின் திருந்துவதற்கு அடிப்படை யாக அமைதல் வேண்டும் என்பதே கருத்தாகும்.

எனவே மணக்குடவர் முதலாயினோர் உரையே இக்குறளுக்குப் பொருந்திய உரையாகும். இவர்கள் உரை குறட்பாவிற்கு இயைபாகவும், பொருந்தியதாகவும் இருக்கவும், 'இதற்குப் பிறரெல்லாம் இயைபற உரைத்தார்' எனப் பரிமே லழகர்கூறி மறுத்திருப்பது தானாட்டித் தனாது நிறுத்துதற்கேயாம்.

இவர்கள் கருத்தெல்லாம் இங்ஙனம் இருக்கக் காளிங்கர் மட்டும், 'இரங்குவ' என்பதற்குப் பிறர் 'இரங்கத்தக்க வினைகள்' என்றும், 'செய்வானேல்' என்பதற்குச் 'செய்யும் வினையைச் செய்யும் இடத்தும்' என்றும், 'அன்ன' என்பதற்கு 'அங்ஙனம் இரங்கத்தக்க' என்றும் பொருள் காண்கின்றார்.

எற்றென் றிரங்குவ செய்யற்க என்று கூறிய ஆசிரியர் அடுத்துச் செய்வானேல் என்று கூறுகின்றார். அதற்கு அத் தகைய இரங்கத்தக்க வினைகளைச் செய்வானேல் என உரை காண்பதே பொருந்துவதன்றிச் 'செய்யும் வினையைச் செய்யும் இடத்தும்' எனப் பொருள் காணல் எவ்வாற்றானும் பொருந்துவ தன்றாம் பரிமேலழகர் கூறிய மறுப்பு இவர் உரைக்காம் எனில் பொருந்துவதாகும்.

*

பெண்டிர்க்கு.

—*—

நாட்கொருபூந் துகில்புனைந்து நறும்பொடி முகம்பூசி,
வாட்கண் மை, உகிர்மெருகு, அழகிதழ்ச் சிவப்பேற்றி,
வேட்புறும் உடல்வனேவே வியன் வாழ்வின் பயன்போலும்
கோட்படத் திரிதருங் குலக்கொடியீர், கேண்மினோ!

பொற்குவை உள்ளிருப்பப் புதைவகழ்ந்து மகிழாமல்
வெற்றுய கலம் நச்சி விணைகெடலும் நலமாங்கொல்?

ஒளிர்முத்தம் உள்ளிருப்ப உறுபயனுந் துய்க்காமல்
வெளிறுடைப் புன் இப்பி விலைபகர்வும் நலமாங்கொல்?

சுவைக்கொழுங் கனிபெறின் சுளைபிளந்தே உண்ணுமல்
கவிப்புறு மேலோட்டைக் கடிப்பதுவும் நலமாங்கொல்?

பாடல்நூல் கைக்கிடைப்பப் பயில்பொருட்கே உவவாமல்
ஏடெல்லாம் கமழ்பூசி ஏத்துதலும் நலமாங்கொல்?

தூய்நறுந் திருவிளக்கில் சுடர் ஏற்றி வையாமல்
மேய அத் தண்டுக்கே மெருகிடலும் நலமாங்கொல்?

மெய்ப்பொருள் அகத்திருப்ப மெய்யுணர்விங் கெய்தாமல்
பொய்யுருப் புனைந்தார்ப்பப் பொலிவிழவும் நலமாங்கொல்?

இலையாங்கு,

பெண்தகவுள நலம் பேணுதல் கருதீர்,
புன், புரை, அழியுடல் புனைதலும் நலமோ?
என்பித் துற்றனிர்! என்குரு டாயினிர்!
மன்பிறப் புண்மை மாண்பயன் உணர்விரேல்
புறம்புனைவு கடிமின், போலிமை தவிர்மின்;
உண்ணிறை பெண்மைக் குளஞ்செலுத் திடுமின்;
இன்பமும் உயர்வுமஃ தன்றியும்,
மன்பதை உய்யும் வழியுமற் றதுவே!

ம. இலெ. தங்கப்பா, எம். ஏ.

(22-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தேளின் கொடுக்குமுனையில் உள்ள ஊசிபோன்ற உறுப்பில் இரண்டு சிறிய தொளைகள் உள்ளன. முள்ளின் அடிப்பகுதியில் உள்ள கருமணி போன்ற பகுதியில் உள்ள இரண்டு பைகளில் நஞ்சு ஊறுகின்றது. முள் உடலில் புகுந்தவுடன் நஞ்சு தொளைகளின் வழி உள்ளே செலுத்தப் படுகின்றது. தேள் தனக்குத் தொல்லை நேர்கின்றது என்றுணர்ந்தபின்பே எதிரியைக் கொட்டுகின்றது. கொட்டுமுன் அது வாலை மேலும் கீழும் ஆட்டிக்காட்டி எதிரிகளை அச்சுறுத்த முயலும். அச்சுறுத்தல் நேரும் பொழுது தன் முன்கொடுக்குகளின் நுனி உகிர்களில் ஒன்றெடொன்றைத் தேய்த்து நறநறவென ஒலியெழுப்புகின்றது. தான் பற்றியுள்ள உயிரி தன்னினும் பெரிதாக இருந்து, அது தப்பியோட முயலும் பொழுதே தேள்கொட்டி அஃதை உணர்விழக்கச் செய்கின்றது. சில வகைத் தேள்கள் கொட்டினுல் மக்கள் உயிரையும் இழக்கின்றனர். ஆனுல் பெரும்பாலும் இவ்வாறு நேர்வதில்லை. சில தேள்கள் கொட்டினுல் சில மணி நேரமே கடுப்பு இருக்கும். சில கொட்டினுல் நான்கைந்து நாட்கள் கூட வலியிருந்து கொண்டே இருக்கும். கொட்டப்பட்ட இடம் வீங்கிக்கொள்ளும். தேளின் நஞ்சால் குருதியில் உள்ள சிவப்பு வடிகங்கள் ஒன்ருெடொன்று ஒட்டிக் கொள்கின்றன. கரிய பெரிய தேள்கள் நட்டுவாய்காலி எனப்படும். ஆனுல் இவற்றின் நஞ்சைவிடப் பிற சிறு தேள்களின் நஞ்சே மிகக் கடுமையாக இருக்கும். தேள் கொட்டுக்குப் பலவகையான மருந்துகள் கூறுகின்றனர். கொட்டிய இடத்தைக் கீறிக் கொஞ்சம் குருதியை வெளிப்படுத்தி விட்டு 'அமோனியாவை' அதில் விடுதல் நல்லதென்பர். கொட்டுவாயில் 'பொட்டாசியம் பர்மாங்கனேட்டும்' 'டார்ட்டாரிகக்' காடியும் வைத்து ஒரு சொட்டு நீரை விடுவதும் உண்டு. தமிழ் முறையில் ஒரு மருத்துவம் கூறப்பட்டுள்ளது. குப்பைகளிலும் சதுப்பு நிலங்களிலும் கொல்லைப் புறங்களிலும் மிகப் பேரளவில் காணப்பெறும் நரிஆமணக்கு என்ற பூண்டின் பாலைக் கொட்டிய வாயில் வைத்துத், தேங்காய் நாரைக் கொளுத்தி அணைத்த புகையை அதன் மேல் காட்டினுல், கொட்டப்பட்ட இடம் உடனே வெயர்க்கும்; உள்ளிருக்கும் நஞ்சு உடனே வெளிப்படும்; கடுப்பு அடங்கும் என்று உறுதியாகச் சொல்லலாம். இது மிகவும் பயனுடைய மருத்துவம் ஆகும். வீட்டைச் சுற்றிக் குப்பைகூளம் சேரவிடாமலும், அழுக்குப் படியாமலும் பார்த்துக் கொண்டால் தேளே வராது

*

இந்தியப் பல்தமிழ்க் கழகம்

(INDIAN TAMIL ACADEMY)

காரைக்குடி – 1, தமிழ்நாடு.

விளக்கத்தாள்

தமிழ். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"

நம் தாய் மொழியாம் தமிழ் இந்தியத் தாய்நாட்டில் வழங்கி வரும் மொழிகளுள் மிக்க முதுமொழி; ஞாலத்து வழங்கி வரும் மொழிகளுள்ளே ஒரு தொன் மொழி; கடல் கடந்து பரவியுள்ள ஓர் இந்திய மொழி; வடமொழிபோல் பல மொழிக் குழவிகளை ஈன்று புறந்தந்த அன்னை மொழி; எஞ்ஞான்றும் அழகுப் பருவத்தோடு இலங்கும் கன்னி மொழி; மூவரசு ஆண்ட அரசு மொழி; முக்கழகம் வளர்த்த செம்மொழி; என்றுமுள தென்மொழி.

தமிழின் பழமை தெய்வத்தின் பழமை போன்றது. அளவினும் அளவாகக் கணக்கிட்டாலும், நாலாயிரம் ஆண்டுத் தொன்மையுடையது என்பர். தமிழ் பல்வளம் படைத்த செல்வ மொழி. காலந்தோறும் எவ்வாறு ஏற்பட்ட எத்தனையோ பேரழிவுக்குப் பின்னரும், இன்று எஞ்சியுள்ள அதன் செல்வமே இவ்வளவாயின், முன்னைச் செல்வம் எவ்வளவாமோ? மதித்துப் பார்மின்! இந்நாள் நாம் கற்கும் நூல்களுள் மூவாயிரம் ஆண்டு மூப்புடையது தொல்காப்பியம். தனி வாழ்வையும் பொது வாழ்வையும் போரையும் அமைதியையும் விரிவாகக் கூறும் ஒரு முழு நூல் இது. உலகிற் சிறந்த ஒரு மொழி நூலும் இது. மூவாயிரம் பாடல் கொண்ட பதினெட்டுக் கழகப் பனுவல்கள் கி. மு. முதல் நூற்றாண்டில் தோன்றியவை. தமிழர்களின் அறவியல் துறவியல் மறவியல் அரசியல் பொருளியல் வாழ்வனைத்தும் இவற்றில் பொதிந்து கிடக்கின்றன. உலகு புகழ் திருக்குறள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே உலகை ஒருலகமாகவும் மக்களை ஓரினமாகவும் அன்பாற் பிணைத்து அறஞ் சொல்லிய நூல். இவ் வறநூல் நடைமுறைக்கு ஒத்தது; யாரையும் நல்வழிப்படுத்த வல்லது. சைவம் வைணவம் சமணம் பௌத்தம் முகமதியம் கிறித்தவம் என்றின்ன பெருஞ் சமயங்கட்கெல்லாம் தனித்தனிக் காப்பியங்கள் கண்ட மொழி தமிழ் மொழி ஒன்றுதான் என்று பாராட்டுப. இறையடி காட்டும் இசைத் தெய்வப் பாசுரங்களும், ஓதி ஒழுகுதற்கு உரியநெறிச் செய்யுட்களும் தமிழின்கண் கடல் போற் பெருகிப் பரவியுள்ளன. தமிழாற்றல் துயர் கடந்து செல்லும் தூயவாற்றல். இன்றும் தமிழ் வளர்ச்சி குறைவோ எனின், அன்று காண். நம் இந்திய மொழிகளுள் முதன் முதல் கலைக்களஞ்சியம் கண்ட மொழி தமிழ் மொழியே காண்.

கழகத்தின் குறிக்கோள்:

இந்தியப் பல்தமிழ்க் கழகத்தின் குறிக்கோளாவது எல்லா வகையானும் எல்லாத்துறையானும் தமிழ்மொழியைப் பதினைந்து ஆண்டுக் காலத்தில் தன்னிறைவாக்க வேண்டும்; அதன் தூய தனியியல்பும் மரபும் அடிப்படையிற் குன்றுவாறு போற்றியே எவ்வகை வளர்ச்சியும் செய்தல் வேண்டும்; உலகவரங்கில் ஒரு பெருமொழிக்கு என்னென்ன செல்வாக்குகள் ஆற்றல்கள் உண்டோ அவ்வனைத்தும் தமிழ்பெறச் செய்தல்வேண்டும்; நல்ல பொருளியல் வளங்களும்பெருவேலை வாய்ப்புகளும்அறிவாற்றல் களும் தமிழால் எய்தலாம் எனவும் எய்துதற்குத் தமிழ் போதும் எனவும் எண்ணுகின்ற நன்னம்பிக்கையை மக்களுக்கு உண்டாக்கல் வேண்டும்; உண்டாக்குதற்கு உரியனவும் செய் தல் வேண்டும். சில சொல்லாற் கூறின், கழகத்தின் குறிக் கோளாவது அறிவும் ஆற்றலும் சான்ற அனைத்துலக வழக்கு மொழிகளுள் ஒன்றாகத் தமிழ் மொழியைத் தமிழர்தாமும் பிறரும் எண்ணி மதிக்குமாறு அதனைத் தன்னிறைவாக்கல் என்பதாகும்.

ஐந்து மூன்றாண்டுத் திட்டங்கள் கோலி, பதினைந்து ஆண்டு களில் தன் அருங்குறிக்கோளைக்கழகம் நிறைவேற்றப் பாடுபடும். அறிவு விரைவு காற்றினும் கடிதாக இயலிப் பரவும் இற்றை வுலகில் இருபதாண்டு முப்பதாண்டு எனக் கைகடந்த நெடுந் திட்டம் கருதுவதே ஒரு பிற்போக்கன்றோ? அத்திட்டம் எங்கு உய்க்குமோ? அதற்குள் உலகம் எவ்வளவு முற்போக்காய் விடுமோ? ஆதலின் திட்ட ஆண்டுகள் சுருக்கமாகவும் செயல் வினைகள் பெருக்கமாகவும் இருக்கவேண்டும் என்று கழகம் தெளிந்தது. தமிழின் இயல்பான பேராற்றலையும் இடையறாப் பெருந்திறலையும் உணர்ந்து, இற்றை அறிவியல் தந்துள்ள நுண்ணிய பெருங்கருவிகளையும் வாய்ப்பான சூழ்நிலைகளையும் பயன் படுத்திக் கொள்வோமாயின், வள்ளுவர் கூறியாங்கு, ‘அரிய என்று ஆகாத இல்லை’ என்பது கழகத் துணிபு.

சாதி சமயம் கட்சி என்றின்ன பிரிவுகளை மனத்தாலும் எண்ணாது, எண்ணவும் இடங்கொடாது செயலாற்றும் பண் புடையது இக்கழகம் என்பதை ஒரு தலையாக நினையுங்கள். கழகத்தின் தாழாத் தளராத் தனிமுயற்சியாலும், தமிழ் மக்களின் ஒருமுக ஒத்துழைப்பாலும், சான்றோர்களின் இகலற்ற நல் வாழ்த்தாலும், தமிழ்த்தாயின் இயற்கையன்பாலும், வேண்டு வார்க்கு வேண்டுவதே ஈயும் இறைவன் இன்னருளாலும் தமிழ் வளர்ச்சிக் குறிக்கோள், வரும் தடையனைத்தும்கடந்து குறித்த காலத்தில் குறைவற நிறைவெய்தும் என்பது கழகத்தின் உறுதி.

முதன் மூன்றுண்டுத் திட்டம்

1. தேர்வுகளும் பட்டங்களும்

கழகம் செய்யக் கருதியிருக்கும் கூறுகளையெல்லாம் இப்போதே விளம்புதல் இனியதன்று. முதல் மூன்றுண்டு அகவையில் ஆற்ற வகுத்துள்ள சில திட்டங்களை மட்டுமே இங்குக் குறிப்போம்.

இளமணி, பெருமணி, முதுமணி என்ற மூன்று தேர்வுப் பட்டங்களைக் கழகம் அமைத்துள்ளது. இவற்றுக்கு முறையான பாடத் திட்டங்களையும் வகுத்துள்ளது. பொருத்தமான வினாத் தாட்கள் தந்து கழகம் தேர்வுகளைச் செம்மையாகவும் பொறுப்பாகவும் ஆண்டுதோறும் நடத்தும். தாமேபடித்தோ தக்காரிடம் பாடங் கேட்டோ யாரும் இத்தேர்வுகளை எழுதலாம். எழுத முன்வருவார்க்கு அகவை வரம்பு முதலான ஏற்பாடுகள் இல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அரசினரின் பல்வேறு அலுவலகங்களிலும் நகராண்மைக் கழகங்களிலும் ஐவர் ஆயங்களிலும் தனியார் அலுவலகங்களிலும் பெருந் தொழில் நிலையங்களிலும் பிற தொழில் நிலையங்களிலும் அச்சகங்களிலும் பதிப்பகங்களிலும் செய்தித் தாளகங்களிலும் வேலை பார்ப்பாரெல்லாம் இத் தேர்வுகள் எழுதலாம் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள பல்துறை ஆசிரியர்கள் எழுதலாம். கலைத்துறையிலும் அரசியலிலும் சமயத் துறையிலும் உள்ளாரெல்லாம் எழுதலாம். தமிழ்ப் பற்றுக் கொண்டு ஆங்காங்கே பலநூல்களைப்படித்துவரும் ஆடவர் பெண்டிரெல்லாரும் கழகத்தின் பாடத் திட்டங்களை வரன்முறையாகப் படித்துப் பட்டம் பெறத் தேர்வு எழுதலாம். சுருங்கக் கூறின், தமிழ் சறக விழையுங்கள்! முயலுங்கள்! கழகம் யாரையும் வரவேற்பதல்லது விலக்காது. தமிழருக்கு அடையா நெடுங்கதவும், தமிழுக்கு அஞ்சல் என்ற சொல்லும் உடையதுவே இந்தியப் பல்தமிழ்க் கழகம்.

நல்லமைப்புக் கொண்ட ஒரு பெருங்கழகம் நிரலான பாடத் திட்டம்வகுத்து நேர்மையான தேர்வுகள் நடத்திப் பெருமையான பட்டங்கள் வழங்குமாயின், ஆங்கிலம் கற்ற தமிழ் மக்களும் அறிவு நாடி யலையும் தமிழ் இளைஞர்களும் ஓய்வு நேரத்தையெல்லாம் தமிழ்கற்கப் பயன்படுத்தி யிருப்பரன்றோ? இத்தகைய வாய்ப்பு தமிழ் மக்களுக்கு இதுவரை இல்லாமை ஒரு குறையே. இக் குறைபாட்டை அறவே களைந்தெறியத் தோன்றியதுவே இக்கழகம். தமிழ் ஆட்சி மொழியாகவும் சட்டமன்ற மொழியாகவும் இயங்கிவரும் இவ்வுரிமைக் காலத்து, பற்பல வினைஞரும் தொழிலரும் தனியாகத் தமிழ் படித்துப் பட்டம்பெறுதற்கு

ஓர் எளிய வழி வேண்டியதுதானே! என்ன துறைப் பட்டம் இருந்தாலும் கூட, ஒரு தமிழ்ப்பட்டம் இருப்பது குறைவாமோ? கோதிலா நிறைவன்றோ? தாய்மொழிப்பட்டம் தனிமகிழ்ச்சியைத் தருவது; தனி ஆய்வுக்குரியது; தளர்ச்சிக் காலத்துத் தாங்க வல்லது. உண்மை, இது வெறும் புகழ்ச்சியில்லை.

மேற்சொல்லிய தேர்வுகள் 1965 மேத் திங்களில் நிகழும். தேர்வெழுதுவோர் 1965 சனவரித் திங்களுக்குள் விண்ணப்பம் அனுப்ப வேண்டும். உரிய விண்ணப்பத் தாள்கள் கழகத்தில் கிடைக்கும். ஆங்காங்கே பணியாற்றிவரும் தமிழ்க் கழகங்களும் தமிழாசிரியர்களும் பல்தமிழ்க் கழகத் தேர்வு எழுத விரும்பு வார்க்கு வகுப்புகள் நடத்தி ஒத்துழைக்க வேண்டுகின்றோம்.

2. ஆராய்ச்சிப் பட்டங்கள்

தனித்தமிழ்ப் பட்டம்கொண்ட யாருமே ஆராய்ச்சிப் பட்டம் பெறுதற்கு வழிதுறை யாதும் இல்லை. ஆங்கிலத் தமிழ்ப் பட்டம் உடைய பலர்நிலையும் இதுவே. எண்ணிறந்த தமிழ்ப் புலவர்கள் மேலும் கற்று ஆய்ந்து வளரும் ஆர்வமும் சார்புமின்றிச் சோர் வுற்று வருகின்றனர். தமிழ் அகலமாக வளர்வதுமட்டும் போதாது ஆழமாகவும் வளர வேண்டும். ஆதலின் **கல்விமணி, அறிவு மணி** என்ற இருபெரும் ஆராய்ச்சிப் பட்டங்களைக் கழகம் நிறுவி யுள்ளது. நுண்மாண் நுழைபுலம் மிக்க ஆராய்ச்சி நூற்கட் டுரைகள் எழுதி முறைப்படி கழகத்திற்குப் பணிக்கவேண்டும் அவற்றின் தகுதியை ஆராய்ச்சிச் சான்றோர் மதிப்பிடுவர். நல் மதிப்புப்பெற்ற கட்டுரைக்குப் பட்டம் அளிக்கப்படும் இலக்கியம் இலக்கணம் மொழியியல் திறனாய்வு கல்வெட்டு வரலாறு இசை மருத்துவம் என்றினைய தமிழின் பல் துறைகளிலும் ஆராய்ச்சி செய்யலாம். அரிய புதிய இவ்வாய்ப்பைத் தமிழ் கற்றவர்கள் பயன் கொண்டு பட்டம் பெற்றுத் தாமும் உயர்ந்து தமிழ் மொழி யையும் உயர்த்துவர் ஆருக.

3. ஆக்கப் பட்டங்கள்

அறிவுலகில் முற்றும் புதியதொரு வழியைக் கண்டு முதன் முதலாக இந்தியப் பல் தமிழ்க் கழகம் தொடங்குகின்றது. தம் கூர்த்த மதியால் புதிய பெரும் படைப்புகளை ஆக்குவார்க்குப் பட்டம் கொடுக்கும் அமைப்பு, நாம் அறிந்தவரை, இதுவரை எக்கல்விப் பெரு நிலையத்திலும் இல்லை. ஆராய்ச்சி யளவிற்கே பட்டங்கள் அளிப்பது வழக்காறாக உள்ளது. ஒரு மொழிக்கு அகலமும் ஆழமும் அவற்றோடு அடிப்படையான ஆக்கமும் வேண்டுமன்றோ? ஆக்கம் பெருகப் பெருகவே அகலமும் உண் டாகும், ஆழமும் உண்டாகும். ஆதலின் **தலைமணி, முதன் மணி** என்ற இருபெரும் ஆக்கப் பட்டங்களைக் கழகம் நிறுவி யுள்ளது. மொழிக்கும் மக்கட்கும் வழிவழிப் பயன்படும் நிலை

சான்ற புத்தம் புதிய நூல்கள் இயற்றி முறைப்படி கழகத்திற்குப் பணிக்க வேண்டும். அறிஞர்கள் அவற்றின் தகுதியை மதிப்பிடுவர். நன்மதிப்பு உடைய நூல்களை இயற்றியவர்கட்கு ஆக்கப் பட்டம் வழங்கப்பெறும். இப்பட்டப்பேறு பெரும் புகழும் நற்பயனும் உடைய பேறன்றோ? முயற்சி யார்க்கும் பெருமை தரும்.

மேற்குறித்த தேர்வு, ஆராய்ச்சி, ஆக்கப் பட்டங்கள் இந்தியப் பல்தமிழ்க் கழகம் கொண்டாடும் பட்டமளிப்பு விழாவில் தக்கவர் தலைமையில் வழங்கப்பெறும் என்பதனைக் குறிப்பிட விரும்புகின்றோம்.

4. நற்பயிற்சி வகுப்புச் சான்றிதழ்

இற்றைக் கல்வி நிலையங்களில் தமிழ் ஒலிப் பிழைகளும் எழுத்துப் பிழைகளும் சொற்பிழைகளும் மரபுப் பிழைகளும் பல்கி வருகின்றன. இவ்வவலம் மிக இரங்குதற்கு உரியது. ஒரு மொழிக்கு உயிரனைய ஒலிகள் சின்னஞ் சிறுவர் சிறுமிகளால் பிழைபட ஒலிக்கப்படுமாயின், கொலையனைய பெருந்தீமை அம்மொழிக்கு வேறு வேண்டியதில்லை; ஒலிப்பிழை ஒன்றுபோதும். இலக்கண இலக்கியங்களும் தமிழ்நெறிதழுவி வரன்முறையாகக் கற்பிக்கப்படவில்லை. ஆதலின் கழகம் நற்பயிற்சி வகுப்பினைத் தானே நடத்த முன்வருகின்றது. இவ்வகுப்பு சிலநாள் நடைபெறும். தமிழ் மொழியியற் கொள்கைகளும் திறனாய்வு நெறிகளும் பிறவும் இவ்வகுப்பில் விளக்கப்படும். ஆசிரியத் துறையில் உள்ளவர்கள் சேர்ந்து பயிற்சிபெறுவது பெரும் பயனுடையதாகும். வகுப்பிற் கலந்து பயின்றோர்க்குச் சான்றிதழ் அளிக்கப்படும். இவ்விதழ் அறிஞர்களின் மதிப்பைப் பெறும் என்பது கழகத்தின் நம்பிக்கை. இப் பயிற்சி முறையால், தமிழ் நெறிகள் காக்கப்படும், அல் நெறிகள் தவிர்க்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

தேர்வுப்பட்டம், ஆராய்ச்சிப்பட்டம், ஆக்கப்பட்டம், சான்றிதழ் என்ற நால்வகைப் பாங்கினுல் முதன் மூன்றாண்டுத் திட்ட காலத்தில் தமிழ்ப்பணி செய்ய இந்தியப் பல்தமிழ்க் கழகம் முற்படுகின்றது. நம் தமிழ்த் தாய்மொழியின் அடிப்படை இம் முயற்சியால் வலுவடையும். கழகத்தின் நெடும் பணிக்கும் வாய்ப்புகள் பெருகும்.

தலைவர்: பண்டாரகர்: வ. சுப. மாணிக்கம்.
செயலர்: இராம. பெரியகருப்பன்.

(அவர்கள் விடுத்த அழைப்பிதழில் ''தமிழ்த் தோன்றல் திரு. க. வெ. சித. வே வேங்கடாசலஞ் செட்டியார் அவர்கள் (அழகப்பா கல்லூரி அறநிலையச்செயலர்) கழகத்தைத் தொடங்கி வைக்கவும், தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் அவர்கள் தலைமை தாங்கவும் இசைந்துள்ளார்கள்'' என்று கண்டுள்ளது. அந்த அழைப்பிதழுக்கு நாம் விடுத்த விடை)

பேரன்புடையீர், வணக்கம்.

தாங்கள் அன்புடன் விடுத்த இந்தியப் பல்தமிழ்க் கழகத் தொடக்க விழா அழைப்பும் விளக்கத்தாள்களும் கிடைத்தன. தங்களின் அரும்பெரும் முயற்சி கண்டு பேருவகை கொண்டோம். கழகம் ஆற்றவிருக்கும் செயல்களையும், கொண்டிருக்கும் குறிக்கோள்களையும் படித்து அகமகிழ்ந்தோம். தங்களின் செயற்கரிய செயல்களுக்கு என்றும் துணை நிற்கவும் உறுதி பூண்டோம். எல்லாம் வல்ல இறைவன் இருதிறத்தானும் நின்று பேரருள் புரிய வேண்டுகின்றோம். நிற்க.

தாங்கள் விடுத்துள்ள அறிக்கையில் உள்ள எல்லாச் சொற்றொடர்களும் தங்கள் உளக்கருத்தை இனிதே புலப்படுத்தி மெய்ம்மகிழ்வுவகை செய்ததெனினும், எந்தமிழ்த் தாய்க்கு யாமென்று முன்னிற்பார் யாவரும் சொல்லவும் கொள்ளவும் மறந்த கொள்கையான, ''சாதி சமயம் கட்சி என்றின்ன பிரிவுகளை மனத்தாலும் எண்ணாது, எண்ணவும் இடங்கொடாது செயலாற்றும் பண்புடையது இக்கழகம் என்பதை ஒருதலையாக நினையுங்கள்'' என்ற இன்றியமையாச் சொற்றொடரே எம்மை மிகவும் மகிழ்வுறச் செய்ததும் ஆழ்ந்து எண்ணச் செய்ததுமாகும். சாதி சமய கட்சிப் போராட்டங்களே இற்றைத் தமிழின் இறங்கு நிலைக்கும் தமிழரின் இரங்கு நிலைக்கும் ஆன உண்மைப் பொருட்டாகும். மொழித் தொண்டும் அறிவுத் தொண்டும் குமுகாயத் தொண்டும் செய்யப் புறப்படுவார் எல்லாரும் புறத்தே பேச்சிலும் அகத்தே மூச்சிலும் அவற்றை மறவாமல் வளர்த்து வருகின்ற கொடுநிலை நினைக்குந்தோறும் எந்தமிழ் நெஞ்சம் அனல் மெழுகெனக் கசிந்து கண்ணீர் பொழிகின்றது. எண்பொருள் ஆளவாச் செலச் சொல்லித் தாம் பிறர் வாய், நுண்பொருள் காண்கின்ற பேரறிவுத் திறம் வாய்ந்தாரும், ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப் பேதையுட் பேதையரெனவே வருதலைக் கண்டு வருந்தி வருந்தி நெஞ்சு நெக்குருகி உயிர்சாம்பி உடல் குறுகிக் கையற்றுக் குமைந்திருக்கின்றோம். மெய்த்தொண்டு செய்யப் புகுவார் எவரும் பொய்த் தொண்டாலேயே பொருள் தண்டி

(72-ஆம் பக்கம் பார்க்க)

இலக்கணவியல்

தொல்காப்பியத்தில் தொழிற் பெயர்

வித்துவான் மோ. இசரயேல் எம். ஏ.
(தமிழ் ஆய்வுத் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.)

தொல்காப்பியனார் தமிழ் மொழியின்கண் வழங்கும் சொற்களை நான்கு வகைகளாகப் பகுத்திருப்பினும் (சொல் 158, 159) பெயர், வினை ஆகிய இரண்டற்கே பெருஞ் சிறப்பு அளித்துள்ளார்.

சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப அறிந்திசி னோரே (சொல். 158)

என்னும் நூற்பாவின்கண் சொல் இருவகைத்து எனத் தெளிவு படுத்திவிட்டார். பின்னர்,

இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப. (சொல். 159)

என்னும் நூற்பாவின்கண் இடை, உரி ஆகியவையும் அவற்றைச் சார்ந்து தோன்றும் என்று கூறி, அவற்றிற்குப் பெயர் வினைகளை ஒப்பிட சிறப்புக்குறைவே என்பதை விளக்கிவிட்டார்.

சிறப்பு வாய்ந்த பெயர் வினை ஆகியவற்றில் பெயரின் இலக்கணங் கூறுங்கால்

பெயர்நிலைக் கிளவி காலந் தோன்றா
தொழில்நிலை யொட்டும் ஒன்றலங் கடையே (சொல் 70)

எனக் குறிப்பிட்டுள்ளார். இதினின்று பெயரில் காலம் தோன்றும் வகை ஒன்று உள்ளது என்பது தெளிவு. தொல்காப்பியனார் அதனைத் தொழிற் பெயர் (சொல். 139), வினைப்பெயர் (சொல். 165, 168), தொழிலிற் கூறும் கிளவி (சொ. 139), வினை (சொல். 146), ஆகிய பல சொற்களால் குறிப்பிடுகின்றார்.

தமிழ் மொழியில் பல வேர்ச்சொற்கள் (Roots) பெயர் வினைகளுக்குப் பொது உரிமை பெற்றும், சில பெயருக்கே தனி உரிமைபெற்றும், இன்னும் சில வினைக்கே தனி உரிமைபெற்றும் வழங்குதல் உண்டு என்பதை பர். கால்டுவெல் ஐயர் அவர்கள் (திரவிட மொழிகளின் ஒப்பிலக்கணம். பக். 443) தெளிவுபடுத்தி உள்ளார். தொல்காப்பியனார் "தொழிற் பெயர்" என்ற சொல்லால் குறிக்கின்ற யாவும் வினைக்கே தனி உரிமை பெற்ற வேர்ச்சொற்களை அடிப்படையாய்க் கொண்டு அமைந்த சொற்களேயாகும். அவை பெயரின் இயல்பைப் பெற்றுள்ள வகையினையும்

தற்காலத் தமிழ் இலக்கணத்தில் பெற்றுள்ள இடத்தினையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியனார், பெயர்ச் சொற்கள் உருபேற்கும் (எழு. 116, சொல். 69); எழுவாயாகவும் (சொல். 65) பயனிலை யாகவும் (சொல். 66) நிற்கும்; தொழிற்பெயர்கள் ஒழிந்த ஏனைய பெயர்கள் காலங்காட்டா (சொல். 70) எனக்கூறித் தன்மையை வரையறுக்கிறார். காலங்காட்டுதல் பொதுவாக வினையின் இயல் பாகும் (சொல். 198). மேலும் பெயர்ச் சொற்கள், பெயரெச் சத்தாலும் (சொல். 234) வினைச்சொற்கள், வினையெச்சத்தாலும் (சொல். 432) தழுவப்படும் அஃதாவது: பெயரும் வினையும் முறையே பெயரெச்சத்தையும், வினையெச்சத்தையும் முன்னர் ஏற்றுவரும். தொழிற்பெயர் வினையின் தன்மையில் சிலவற்றைப் பெற்றும், பயன் வகையில் பெரும்பாலும் பெயரையே ஒத்தும் செயல் புரிகின்றது.

தொல்காப்பியனார் கூறுகின்ற தொழிற்பெயர்களை அவற்றின் அமைப்புப்படி (Structure) மூன்று வகைகளாகப் பகுக்கலாம். ஒன்று வினையடிச்சொல் (Verbal root) மட்டும் நின்று பெய ராகச் செயல் புரிவது; இரண்டு வினையடிச் சொல்லோடு சில விகுதிகள் சேர்ந்து நின்று (Verbal root + suffix) பெயராகப் பணிபுரிவது; மூன்று வினைமுற்றே (finite verbs) பெயராகப் பணிபுரிவது.

1. வினையடிச் சொல் மட்டும் நின்று பெயராதல்:

(முதனிலைத் தொழிற் பெயர்)

இவ்வகையைச் சார்ந்த சொற்களைத் தொல்காப்பியனார் எல்லா இடங்களிலும் தொழிற்பெயர் என்னும் குறியீட்டால் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியனார் ஞ், ண், ந், ம், ல், ள் என்னும் மெய்களை ஈற்றில் கொண்ட வினையடிச் சொற்கள் (எழு, 296, 306, 327, 376, 40) பெயராகச் செயல்புரியும் என்கிறார். அவை சொற்றொடரில் வருங்கால் – உ – என்னும் வெற்றுருபை (empty morph) ஏற்று வரும் என்றும் அவரே கூறி உள்ளார்.

உரிஞ், உண், பொருந், திரும், வெல், துள், என்பன;

உரிஞுக் கடிது	—	உரிஞ் + உ
திருமுப் பெரிது	—	திரும் + உ
துள்ளுக் கடுமை	—	துள் + உ

இத்தகைய தொழிற் பெயர்கள் காலங் காட்டுவதில்லை; வேற்றுமை உருபை ஏற்று வருகின்றன; எழுவாயாக வரு கின்றன; பெயரெச்சத்தை ஏற்று வருதலும் உண்டு.

திருமுப் பெரிது (எழுவாய்)
திருமைத் தாங்க இயலவில்லை (உருபு ஏற்றல்)
துள்ளின துள்ளுப் பெரிது (பெயரெச்சம் ஏற்றல்)

தற்காலத் தமிழ் இலக்கணத்தில் இவை முதனிலைத்தொழிற் பெயர்கள் என அழைக்கப் பெறுகின்றன. முதனிலை யெனினும் பகுதி எனினும் ஒக்கும்; அதுவே வேர்ச் சொல் எனினும் அமையும். முதனிலை மட்டுமாய் நிற்றலால் இஃது இப்பெயர் பெற்றது. தற்காலத் தமிழ் மொழியில் வினைக்கே தனி உரிமை பெற்ற வேர்ச் சொற்கள் பெயராய் வழங்குதல் மிக அரிது.

2 **வினையடிச் சொல் விகுதியுடன் இணைந்து பெயராதல்:**

''தொழில்நிலை ஒட்டு ஒன்றலங் கடையே'' (சொல் 70) எனத் தொல்காப்பியனுர் வழங்கிய சொற்ருெடருக்கு விளக்கங் கூறிய உரையாசிரியர்கள் காலந்தோன்ருத் தொழிற்பெயர் என ஒரு வகையினைக்கூறி''உண்டல், தின்றல்''என்னும் சொற்களை அதற்கு எடுத்துக்காட்டாகத் தருகின்றனர். இச்சொற்கள் வினையடியும் விகுதியும் சேர்ந்து ஆயவை; காலங்காட்டாதவை.

இவை வேற்றுமை உருபு ஏற்கும்; எழுவாயாகவும் வழங்கும்; ஆனுல் வினையெச்சத்தை முன்னர் ஏற்று வருமே ஒழிய பெயரெச்சத்தை ஏற்று வருதல் இல்லை. பயன் வகையில் முற்றும் பெயரேயாம்.

செய்தலைக் கண்டேன் (உருபேற்றல்)
உண்டல் நல்லது (எழுவாய்)
உண்டு வருதல் நல்லது (வினையெச்சம் ஏற்றல்)

வினையெச்சம் ஏற்றல் வினையின் இயல்பாயினும் அது பெயரின் இடத்தையே பெறுகின்றது என்பதை அறிகின்ருேம்.

இவ்வகையைச் சார்ந்தவற்றை இன்றும் இலக்கண நூல்களில் தொழிற்பெயர் என்றே குறிக்கின்றனர். தெளிவுக்காக இதனை விகுதிபெற்ற தொழிற்பெயர் என அழைத்தலும் உண்டு. இதனையே உண்மையான தொழிற்பெயர் (True verbal noun) எனச் செக்நாட்டுத் தமிழ் அறிஞர் பர்.கமில் சுவலபில் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். 1.

FOOT NOTE

1) It seems that we have .... forms, formed by morphemes - ku - tal. - al, - kai, - mai etc; and their allomorphs which are not capable to express

3. வினைமுற்றே பெயராதல்: (வினையாலணையும் பெயர்).

பெயர்ச் சொற்கள் காலந்தோற்ரு; ஆனுல் அவற்றில் தொழில் நிலை ஒட்டுவன காலந்தோற்றும் (சொல். 70) எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். சில பெயர்ச்சொற்கள் வினையின் அமைப்பை (Verbal structure) ஒத்து அமைந்துள்ளன; ஆனுல் அவை காலங்காட்டும். சேனுவரையர் "உண்டான், தின்ருன் என்னுந் தொடக்கத்துப் பகுத்துச் சொல்லப்படும் தொழிற் பெயர் வினைச் சொற்போலத் திணை பால், காலம் முதலானவற்றை விளக்கி, அன், ஆன் முதலியன ஈருய் வருதலின் "தொழில் நிலை யொட்டும்" என்று தொல்காப்பியனுர் கூறினுர் எனத் தெளிவுரை தருகின்றமையே இவ்வகைத் தொழிற் பெயரை விளக்குவதாக உள்ளது.

இத்தகைய தொழிற் பெயர்கள் வடிவிலும் (form) அமைப்பிலும் (structure) முற்றிலும் வினைச்சொல்லை ஒத்துள்ள போதிலும் பயன் வகையில் முற்றிலும் பெயராகவே வழங்குகின்றது. வினையடியைப் பெற்றுக் காலம் ஏற்று வருதலும், வினையெச்சத்தை முன்னர்க் கொண்டு வருதலும் இவ்வகைச் சொற்களில் காணலாம் வினையியல்புகள். (Verbal characteristics). எழுவாயாக நிற்றலும் வேற்றுமை உருபை ஏற்றலும் பெயர் இயல்புகளாம்.

எ–டு பாடினுனுக்குப் பரிசில் கொடு.

பாடு–இன்–ஆன்–உ–கு

பாடு	—	பகுதி (stem)
–இன்	—	இறந்தகாலமறி குறியீடு (Past tense marker)
–ஆன்	—	(Person marker)
–ன்	—	பாலறி கிளவி (Number-gender marker)
–உ	—	வெற்றுருபு (empty morph)
–கு	—	வேற்றுமை உருபு (case marker)

"உண்டான் உறங்கினுன்" என்னும் சொற்ருெடரில் வினையாலணையும் பெயர் எழுவாயாக அமைந்துள்ளது.

கழகக் கால நூற்களில் வந்தான், வந்தோன், வந்தவன் எனப் பலவகையில் வழங்கிய இத்தொழிற் பெயர்கள் தற்காலத் தமிழில் "வந்தவன்" என்னும் ஒரே வகையில் (type) மட்டும் வழங்குகின்றது. சேனுவரையரும், அவர் பின்னர் நன்னூலாரும்

---

the tense categories; these forms may be called true verbal nouns" (Page. 183)
Tamil Vol. VIII No. 3, 1953
Participial and Verbal Nouns-Dr. Kamil Zvelebil.

புலவர்: ச. சுந்தரேசன்.

குழந்தை

சின்னஞ் சிறிய பூங்காலால்
சிறுகக் குறுகி நடைபயின்றே,
தென்னம் பாளை அவிழ்ந்ததுபோல்
தெறிப்பாய் ஒளியை! குழந்தாய்நின்
பொன்னின் மேனி மாந்தளிரோ?
பூவோ? பொலியும் பட்டொளியோ?
என்னென் றுரைப்பேன் நினதழகை?
ஏட்டில் தீட்டக் கூடுவதோ?

தவழ்ந்து வருவாய்; அண்ணுந்து
தலையைத் தூக்கி எழில்வாயில்
அவிழ்ந்த முல்லைக் குவியலெனும்
அருமைச் சிரிப்பில் மயக்கிடுவாய்
புவியில் நின்றன் புன்னகைக்குப்
பொருந்தும் செல்வம் யாதுண்டு?
சிவக்கும் கனிவாய் முத்தெனக்குச்
சேர்க்கும் இன்பம் யார்தருவார்?

உள்ளம் உவக்கும் மழலைமொழி
உரைக்கும் குழந்தாய்! நீஎன்பால்
துள்ளி வருங்கால் காணுமெழில்
சொல்லி முடியேன்; கிண்கிணியின்
விள்ளும் ஒலியில் மயங்கிமனம்
வியக்கும் செயலை அறியாயோ?
கள்ள மில்லாய் உனைத்தழுவிக்
களிக்க அருகில் வாராயோ!

(முன் பக்கத் தொடர்ச்சி)

இவ்வகையின் பெயரை வேறுபடுத்தி வினையாலணையும் பெயர் எனக் குறிப்பிட்டு விட்டனர். இன்றும் இவ்வகைச் சொற்கள் ''வினையாலணையும் பெயர்'' என்னும் குறியீட்டாலேயே வழங்குகின்றன.

எனவே, தொல்காப்பியத்தினின்று யாம் அறியும் தொழிற் பெயர் வகை மூன்று; அவையாவன: 1. முதனிலைத் தொழிற் பெயர் 2. விகுதிபெற்ற தொழிற் பெயர் 3. வினையாலணையும் பெயர். தொல்காப்பியனர் காலத்தில் இம்மூவகைச் சொற்களும் ''தொழிற் பெயர்'' என்னும் சொல்லாலேயே குறிக்கப்பெற்றன என்பது தெளிவு. எனினும், தொல்காப்பியனாராலேயே அவற்றில் அமைந்துள்ள வேறுபாடு விளக்கப் பெற்றுள்ளது. பிற்காலத்தில் அவை குறியீட்டாலும் வேறுபட்டுவிட்டன. *

திருவள்ளுவராண்டு.

முன்னுரை:

உலகு, நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து எனத் திருவள்ளுவர் கூறுகின்றார். உலகின் நிலையாமையை உணர்ந்தோர், தம் சிறந்த வாழ்க்கையால்-புகழால் நிலைபெற விரும்புகின்றனர்; இயன்ற வகையான் இனிய செயல்களைச் செய்யத்தக்க இடங்களிலெல்லாம் செய்கின்றனர். நாள் என்பதனை மக்களின் உயிரை அறுக்கும் வாள் எனவும் வள்ளுவர் கூறுகின்றார். நாட்களை நன்கு கணக்கிட்டு வழங்கிய தமிழ் மக்கள், பயனுறக் கழிக்கும் முறையினையும் வரன்முறைப் படுத்தியுள்ளனர். காலம் பொன்னினும் சிறந்ததாகப் போற்றப் படுகின்றது.

''கல்லாது போகிய நாளும் பெரியவர்கண்
செல்லாது வைகிய வைகலும்-ஒல்வ
கொடாஅ தொழிந்த பகலும் உரைப்பிற்
படாஅவாம் பண்புடையார் கண்''

என நாலடியார், நாளை நன்கு கழிக்கும் முறையினைக் கூறுகின்றதனைக் காண்க.

கால அளவுகள்:

தமிழ் மக்கள் தம் நுண்ணறிவால் கைந்நொடி முதல் ஊழி வரை பலவகையான கால அளவுகளைக் கணக்கிட்டு நெறிப்பட வாழ்ந்தனர். 'நாழிகை வட்டில்' என்னும் கால அளவு கருவியும்

புலவர். தி. பாலசுப்பிரமணியன், தஞ்சாவூர்.
(தொல்காப்பியர் கழகச் செயலர்.)

பண்டு வழக்கிலிருந்தது. உலகம் ஞாயிற்றினைச்சுற்றி வருவதால் தட்பவெப்ப வேறுபாடுகளும் பருவ வேறுபாடுகளும் இயற்கையாக நிகழ்கின்றன. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்னும் ஆறு (பெரும் பொழுதுகளும்) பருவங்களும் தட்ப வெப்ப நிலைகளை அடிப்படையாகக் கொண்டனவே. இரு திங்கள்களுக்கு ஒரு பருவமாக ஓராண்டிற்கு ஆறு பருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உலகம் (தன்னைத்) தானே ஒரு முறை சுழலும் கால அளவு நாள் எனக்கூறப்படும். ஒரு நாளைக் காலை, பகல், மாலை, இரவு, நள்ளிரவு, விடியல் என ஆறு சிறுபொழுதுகளாகப் பிரித்துள்ள

னர். பகல் முப்பதும் இரவு முப்பதுமாக அறுபது நாழிகை கொண்டது ஒரு நாளாகும். 'அல்லும் பகலும் அறுபது நாழிகையும்' என்னும் மரபுத் தொடர் இன்றும் வழக்கிலுள்ளது. நாள், கிழமை, திங்கள், ஆண்டு என்பன கால அளவினைக் குறிக்கும்.

தொடராண்டுகள்:

உலகின் பல பகுதிகளிலும் பன்னிரு திங்கள்களைக்கொண்ட பலவகைத் தொடராண்டுகள் வழக்கிலுள்ளன. சமய, மொழி, இன, நாகரிக, நாள், கோள்கள் அடிப்படையில் தொடராண்டுகள் தோன்றின. மேலை நாடுகளில் 'கிரிகரியன்' (Gregarian) என்னும் ஆண்டு வழக்கிலிருந்தது. இதுவே, பிறகு 'கிரேக்க முறை' ஆண்டு எனக் கூறப்பட்டது. இதில் கிறித்து பிறந்த ஏழாம் நாளை ஆண்டு முதல் நாளாக அமைத்துள்ளனர். சனவரி முதல் திசம்பர் ஈருகவுள்ள கிறித்து ஆண்டு ஒன்றில் $365\frac{1}{4}$ நாட்கள் உள்ளன. நான்காண்டுகட்கு ஒருமுறை பிப்ரவரித் திங்களுக்கு 29 நாட்களை அமைத்து அத்தகைய ஆண்டுகளை 'லீப்' ஆண்டுகள் என வழங்குகின்றனர்.

முகமதியர் ஆண்டு (ஹிஜிரி) திங்களை (நிலவினை) அடிப் படையாக வைத்துக் கணக்கிடப்படுவதாகும். இந்தியாவில் முகமதிய மன்னர்கள் காலத்தில் ஆட்சி முறைக்காக வகுக்கப் பட்டது 'பசலி' என்னும் ஆண்டாகும். உழவுத் தொடர்பாக இவ்வாண்டு இன்றும் ஓரளவுக்கு வழக்கிலுள்ளது. கலி, சாலி வாகன, விக்கிரமசக, சக, கொல்லம் ஆண்டுகளும் வழக்கி லுள்ளன. சித்திரையை முதல் திங்களாகக் கொண்ட 'பிரபவ, விபவ' என்னும் வடமொழிப் பெயர்களை உடைய அறுபதாண்டு வரிசையும் உண்டு. இவ்வறுபதாண்டுகளின் வரலாறுபற்றி ஒரு சிறிதும் அறியாத தமிழ் மக்கள் இவ்வாண்டுகளைத் 'தமிழ் ஆண்டுகள்' எனக்கூறுவது கண்ணில்லாதவனைச் செந்தாமரைக் கண்ணன் எனக் கூறுவது போன்றதாகும்.

மேலை நாட்டினர், தம் ஆட்சியுரிமையினால் உலகம் முழுதும் கிறித்து ஆண்டினையே அரசியல் தொடர்பான (அலுவலகத் தொடர்பான) ஆண்டாக வழங்கலாயினர். வரலாற்றாசிரியர் களும் மேலைநாட்டு நாகரிக நெறிப்படி நடப்போரும் இவ்வாண் டினையே வழங்கலாயினர். கீழை நாட்டினர், நாட்டுணர்ச்சி யாலும் தன்மான உணர்ச்சியாலும் தத்தமக்கெனத் தனித் தொடராண்டினை அமைக்கவும் அமைந்த ஆண்டினை வழங்கவும் தொடங்கினர். ஏறத்தாழக் கால்நூற்றாண்டுக்குமுன் சென்னையிற் கூடிய திருவள்ளுவர் மாநாட்டில் திருவள்ளுவராண்டு உறுதி செய்யப்பட்டது. தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளார்

அவர்கள் கலந்துகொண்ட இம்மாநாடு, கிறித்துவுக்கு முந்தியவர் வள்ளுவர் எனவும், கிறித்து ஆண்டுடன் முப்பத்தோராண்டுகளைச் சேர்த்து வள்ளுவராண்டைக் கணக்கிடல் வேண்டும் எனவும் அமைத்தது. (1964 + 31 = 1995.) அனைவரும் இதனை ஏற்றுக்கொண்டு வழங்குகின்றனர்.

திருவள்ளுவராண்டு:

தமிழக வரலாற்றில் திருவள்ளுவர் பிறப்பு நனி சிறந்த ஒரு நிகழ்ச்சியாகும். உலகப் பெருநூலை இயற்றியுதவிய தமிழ்ச் சான்றோராகிய திருவள்ளுவர் மொழி, இனம், சமயம், நாடு முதலியவைகளைக் கடந்த மாபெரும் உலக அறிஞரும் அறவோருமாவார். ''யாதானும் நாடாமால் ஊராமால்'' எனக் கூறிய அவர் பெயரால் தொடராண்டினை அமைத்து வழங்குவது அறிவையும் சான்றாண்மையையும் மதித்துப் போற்றும் நன்றி மறவாத நல்ல செயலாகும். வள்ளுவராண்டினை வகுத்து வழங்கிய பெறற்கரிய பெருமை, இருபதாம் நூற்றாண்டுத் தமிழர்க்குக் கிடைத்த இணையற்ற பேறாகும். தமிழகத்தின் தனிச் சிறப்பு நாளாகிய தைத்திங்கள் முதல்நாள் பொங்கலன்று திருவள்ளுவராண்டுப் பிறப்பு நாளை அமைத்திருப்பது பெரு மகிழ்ச்சிக்குரியதாகும்.

திருவள்ளுவராண்டுத் திங்கள்கள்:

திருவள்ளுவராண்டின் தனித் தன்மைக்கேற்ற வகையிலும் திருக்குறள் நெறிக்குரிய முறையிலும் தை, மாசி முதலிய பன்னிரு திங்கள்களின் பெயரையும் மாற்றி வழங்குவது மிகப் பொருத்தமான ஒன்றாகும். ஒவ்வொரு திங்களுக்கும் உரிய நாட்களையும் முப்பதும் முப்பத்தொன்றுமாக ஒரு நெறிப்படுத்தி அமைத்துவிடல் நலம். நான்காண்டுகட்கு ஒருமுறை தைத் திங்களில் ஒருநாளை மிகுதிப்படுத்தி விடல்வேண்டும்.

திங்கள்களின் பெயர்களும் நாட்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு அமைவது நலம். திருக்குறளை நினைவிற்கொண்டு பின்வரும் பெயர்கள் வரிசை முறையிலமைத்துக் காட்டப்பட்டுள்ளன. அவை,

1. அன்பு–30	5. ஆக்கம்–31	9. உவகை–30
2. அருள்–31	6. ஆட்சி–31	10. உழவு–30
3. அறம்–31	7. இன்பம்–30	11. ஊக்கம்–30
4. அறிவு–31	8. ஈகை–30	12. ஒப்புரவு–30

என்பனவாகும். இந்திய அரசு புதிதாக அமைத்து வெளியிட்டுள்ள 'சக நாட்காட்டி'யில் (Saka National Calendar) மேற்கண்ட எண்ணிக்கை முறையிலேயே நாட்கள் அமைக்கப்பட்டுள்ளன ஆங்கில 'லீப்' ஆண்டு முறையும் அதனிலும் சிறந்த முறையும் இதுவேயாகும்.

திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு நிறைவு:

திருவள்ளுவராண்டு ஈ ரா யி ர ம் நிறைவுறும்பொழுது இம் மாற்றங்களைச் செய்வது ஏற்புடையது. தமிழக அரசும் திரு வள்ளுவராண்டை ஏற்றுக்கொண்டு அனைவர்க்கும் வழிகாட்ட வேண்டும். தற்பொழுது, திருவள்ளுவராண்டினைப் பயன்படுத்து கின்ற தமிழ் வெளியீடுகள், நாளிதழ்கள், நாட்காட்டிகள், நாட் குறிப்புகள் முதலியன விரல்விட்டு எண்ணத் தக்கனவே. அவைகட்குத் த மி ழ ர் பெரிதும் கடப்பாடுடையவர். இனி, தமிழில் குறிக்கப்படும் எல்லா நிகழ்ச்சிகளிலும் திருவள்ளுவ ராண்டு இடம் பெறச் செய்தல் வேண்டும். இது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும் உலக ஒற்றுமைக்கும் உயர்வுக்கும் பொதுமை நலத்திற்கும் உரிய உயர்ந்த கருத்துகளைக் கூறி யுள்ள தி ரு வ ள் ளு வ ர் உலகக் குடிமகனுராவர். அவரது பெருமையினை உலகறியச் செய்யும் சிறப்பு மிக்க பொறுப்பினை நன்கு நிறைவேற்றிக் கொள்ளத் தமிழர்க்கு வாய்த்துள்ள நல்ல சமயம் ஈராயிரம் நிறையும் ஆண்டாகும். இதனை நன்கு நிறை வேற்ற இப்பொழுதே திட்டமிடல் வேண்டும்.

முடிவுரை:

தைத்திங்களை முதல் திங்களாகக்கொண்ட வள்ளுவராண்டு சனவரித் திங்களோடு பெரிதும் தொடர்பு கொண்டிருப்பது இயற்கையாக அமைந்துள்ள சிறப்பாகும். மேலே குறிக்கப் பட்டுள்ள பன்னிரு திங்கள்களின் புதுப்பெயர்களும் ஏற்றவாறு மாற்றுதற்குரியன நாட்களின் எண்ணிக்கை அமைப்பு முறை மேலே குறிக்கப்பட்டுள்ளவாறு அமைவதே பல வகையிலும் சிறப்புடையதாகும் இத்துறையில் தமிழறிஞர்கள் வழிகாட்டுவர். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளல் வேண்டும். முயற்சி திருவினை ஆக்கும்.

வெல்க முயற்சி! தழைக்க திருக்குறள் நெறி!
வளர்க வள்ளுவராண்டு!

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்"

(தமிழ் மாத வரிசை பற்றிய ஒரு புதுக் கருத்தைத் தென்மொழி விரைவில் வெளியிடும். — ஆர்)

எழுதுவார்க்கு!

தென்மொழிக்கு வரும் உருப்படிகளில் பாடல்களே மிகுந் துள்ளன. சிலர், பாடல்களில் எதுகைத் தொடையிலும் வட சொல்லமைத்து, மாற்றஞ் செய்ய முடியாதவாறு எழுதுகின்றனர். எழுதுவார் கட்டுரை, பாடல்களைத் த னி த் த மி ழி ல் எழுதித் தக்காரிடம் காட்டிச் செப்பஞ் செய்து அனுப்ப வேண்டுகிறோம்.

முன் இதழ்த் தொடர்ச்சி. **மெய்யறிவியல.**

Philosophy.

கல்வி

ஆங்கிலத்தில்: விவேகானந்த அடிகள்.
தமிழில்: 'வழுதி'

நமக்கவ்வப்போது அமைந்த கடன்களையாற்றி மேனிலை எய்துதற்குரிய வல்லமையை நாம் பெருக்கிக் கொள்வதே நாம் உய்யும் வழியாகும். பயன் கருதாது கடமையைச் செய்வோன் உள்ளம் உண்மை ஒளிபெறுகின்றது. ஆற்றல் எய்துகின்றது. அதுவே சிறந்த மன முனைப்பு (யோகம்). பயன் கருதிப் பணி புரிபவனே தனக்கு வந்து வாய்த்த கடமையைப் பார்த்து, முணு முணுக்கின்றான். பற்றற்ற பணிஞர்க்கோ எதுவாயின் என்ன? எல்லாக் கடமைகளும் நன்றே! அவர்கள் தன்னலத்தையும் புலனடக்க மின்மையையும் கொன்று,புலம்பன்(ஆன்ம)விடுதலை எய்துவதற்குக் கடமையே சிறந்த கருவியாகக் கொள்கின்றனர் முணுமுணுப்பவனுக்கு எல்லாக் கடமையும் பிடிக்காதவையே; அவனை யாராலும், யாதாலும் பொந்திகை செய்ய முடியாது. அவன் வாழ்க்கை பெருந் தோல்வியாக முடியும். நாமே மனமுவந்து நம் கடமையைச் செய்வோம். முன்னேறுவோம் எப்போதும் பெரும்பணிகட்குத் தோள் கொடுக்க அணியமா யிருப்போம். அப்போது நமக்கு ஒளி தோன்றும்.

பணி புரியும் முறை:

இடைவிடாது பணி புரிதல் வேண்டும் என்று அறநூல்கள் கூறுகின்றன. அனைத்துப் பணியிலும் நன்மை தீமையுண்டு. நாம் செய்யும் ஒவ்வொரு சிறுவேலையிலும் ஏதாவதொரு நன்மை இல்லாமல் இல்லை; தீமை இல்லாமலும் இல்லை. இருந்தபோதிலும் இடையறுது பணிபுரிய வேண்டியவர்களாகின்றோம். நன்மையும் தீமையும் தத்தம் வினையைப் பயப்பன. இரண்டுமே புலம்பனைக் கட்டுப்படுத்தும் அடிமைத் தளைகள். செய்யும் எப்பணியிலும் பற்றற்று விலகி நிற்பதொன்றே இத்தளையினை அறுக்கும் வழியாகும்.

பணியிற் பற்றற்று நிற்றல் என்றால் என்னவென்று பார்ப் போம். ஆமை தன் உடலை ஓட்டினுள் அடக்கிக் கொண்டு, அடித்தாலும், கொன்றாலும் வெளியில் வராமைபோல் உண்மை மாந்தன், எத்தீங்கு நேரினும் தன் உளத்தினையும், புலன்களை யும் கட்டுப்படுத்தி நல்வழி அடைகின்றான். அவன் விருப்பத்

துக்கு மாருக எதுவும் அவனின் உள்ள உறுதியைத் தளர்த்த முடியாது.

இவ்வாறு நல்லனவே உணர்ந்து நல்லனவே எண்ணி யிருப்பதால் நன்மை செயும் ஆற்றல் மிகுகின்றது. இதன் விளைவே புலனடக்கமாம் இந்நிலையில்தான் உள்ளியல்பு (Character) உருவாகின்றது. அப்போதுதான் மாந்தன் உண்மையை அறிந்துகொள்கின்ருன். அத்தகைய மாந்தனைப் பற்றி யாரும் கவலவேண்டா. அவனால் ஒருபோதும் தீமை புரிய முடியாது எச்சூழலிலும் அவன் பண்பு அழிந்துபடான். இந்த நலவேட்கையினும் உயர்ந்தநிலை ஒன்றுண்டு. அதுவே விடுதலை வேட்கையாகும். எல்லாவகை மனமுனைப்புகளின் இலக்கும் புலம்பனின் விடுதலையேயாம். வழிகள் பலவாயினும் இலக்கு ஒன்றே. புத்தர் பொறிப்புலன் முனைப்பாலும் (Meditation), கிறித்து பெம்மான் வழிபாட்டாலும் அடைந்த அதே இலக்கினைப் பற்றற்ற பணியினால் நாமும் எய்த முடியும். புத்தர் மெய்யறிவாளர் (ஞானி); கிறித்துவோ இறையன்பர்; ஆயினும் இருவரும் ஒரே இலக்கை யடைந்தனர். நல்லுணர்வு, தீயுணர்வை வென்று, அழித்தோ உள்ளத்தின் மூலையில் ஒடுக்கியோ தலைநிற்கிறது. பின்பு இந்நல்லுணர்வையும் நாம் வெல்லு தல் வேண்டும். அப்போதுதான் பற்று நீங்கிப் பற்றின்மை தோன்றுகின்றது.

பணிபுரியுங்கள்; ஆனால் செயலோ, நினைவோ உள்ளத்தில் ஆழப் பதிந்து விடாமற் பார்த்துக்கொள்ளுங்கள். குமிழி கள் தோன்றி மறையட்டும். தசை நார்களினின்றும் மூளையி னின்றும் பெருஞ் செயல்கள் புறப்படட்டும். ஆனால் புலம் பனில் மட்டும் அவை சென்று பதிதல் வேண்டா. இந்நிலை யினை அடைவதெவ்வாறு? நமக்குப் பற்றுடையதான செயல் களே நம் உள்ளத்திற் பதிகின்றன. நூறு முகங்களைப் பகலெல்லாம் பார்த்திருந்தபோதிலும், இரவில், நமக்கன்புடைய ஒருமுகமே மனக்கண்முன் நிற்கின்றது அன்பெனும் பற்று அம்முகத்தை நம்முள்ளத்திற் பதிக்கின்றது. உடற் கூற்றின்படி முகங்கள் மனத்திரையில் பதிவதில் எவ்விதவேறுபாடும் இல்லை. ஆயினும் உள்ளத்தின் உணர்வுத் திரையில் பதிவதில் அவ்வேறுபாட்டினைக் காண்கின்ரேம். அம்முகம் நமக்குப் பன்னாட் பழகி நம் வாழ்க்கையில் பங்கு கொண்டிருப்பதால் அனைத்து முகங்களைவிட நம் உள்ளத்தில் மிகுதியான நினைவு களை எழுப்பும் தன்மையாயிருப்பதே இப்பற்றுக்குக் காரணம். இத்தகைய பற்றினை அறுக்கத்தான் பெருமுயற்சி வேண்டும்.

இவையனைத்தின் சாரமும் இதுதான். நாம் ஓர் அடிமை யைப் போலன்றித் தலைமகனைப்போல் பணிபுரிதல் வேண்டும்.

இடைவிடாது பணி புரியுங்கள். ஆனால் அடிமையைப்போல் மட்டும் உழைக்காதீர்கள்; உலகின் தொண்ணூற்றென்பது விழுக்காட்டினர் இவ்வாறுதான் உழல்கின்றனர். வேலை! வேலை! ஓய்வொழிச்சல் இல்லா வேலை! எல்லாம் தன்னல வேலைதான்; விளைவு துன்பமே! விடுதலை உள்ளத்தோடு உழையுங்கள்; அன்பின் வழிநின்று உழையுங்கள்.

அன்பென்னுஞ் சொல்லின் பொருளைப் புரிந்து கொள்வது மிகக் கடினம். விடுதலை உள்ளம் இருந்தாலன்றி "அன்பு" எழுவதில்லை. அடிமையின்பால் உண்மை அன்புக்கு இடமே இல்லை. ஒருவனைப் பிடித்துவந்து அடிமையாக்கி உழைக்கச் செய்தால் நாள் முழுதும் நமக்காக உழைப்பான். ஆனால் அவனிடம் அன்புமட்டும் இராது. அதுபோன்றே, உலகியல் நலங்கட்காக அடிமைகளைப்போல் நாம் உழைப்போம் எனின் நம்மில் உண்மை அன்பிராது. நம் பணியும் உண்மைப் பணியாய் இராது. நமக்கும் நம் கேளிர்க்கும் நாம் செய்யும் வேலை அடிமை வேலையே. ஒரு சிறு தேர்வினால் இதனை அறியலாம்.

அன்பினால் விளையும் ஒவ்வொரு செய்கையும் மகிழ்வூட்டுவதாகும். அமைதியும் இன்பமும் விளைவிக்காத அன்புச் செயல் எதுவுமே இல்லை. உண்மை வாழ்வும், உண்மை அறிவும், உண்மை அன்பும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. மூன்றும் ஒன்றாக இயங்குவன. ஒன்றிருப்பின், மற்றொன்று ஆங்கிருந்தாகல் வேண்டும். மூன்றும் ஒரு தனிச் செம்பொருளின் முத்திறக் கூறுபாடேயாம். அவையே வாழ்வு, அறிவு, இன்பம் (Existence, Knowledge, bliss) என்பவையாம். வாழ்வே இப் பருப்பொருள் உலகமாகின்றது. அறிவே உலகப் பொருட்களைப் பற்றிய அறிவாகின்றது. இன்பமே உண்மையான அன்பின் அடிப்படையாம். ஆதலின் உண்மை அன்பு, உண்மை வாழ்வோடும் அறிவோடும் பிணைந்ததாகலான் அன்பு காட்டுவார்க்கும், பெறுவார்க்கும் ஒரு போதும் துன்பம் விளைவிக்காது.

ஒருவன் ஒரு பெண்ணை விரும்புகிறான் என்று கொள்வோம். அவள் முற்றும் தனக்கே உரியளாக வேண்டுமென்று விரும்புகின்றான். அவள் தன்னருகிலேயே அமர்ந்து, நின்று, உண்டு, உலவித் தன் சொற்படியே இயங்க விழைகின்றான் அவட்கடிமையா யிருக்கின்றான். அவளையும் தனக்கடிமையாக்கிக் கொள்ள விழைகின்றான். இஃது அன்பன்று. ஏனெனில் இவ்வன்பால் துன்பமன்றோ விளைகின்றது! ஆம், அவளுக்கும் துன்பம்; அவனுக்கும் துன்பம். ஆனால் உண்மையன்போ துன்பத்தின் சுவடே அறியாதது. பேரின்பம் பயப்பது, அவ்வாறு பயவாவிடின் அஃது அன்பாக இராது. நம், கணவனை

மனைவியை, மகவை, உலகத்தை, இப்புடவியையே சற்றேனும் துன்பமோ, பொருமையோ விளையாமல், தன்னலம் இல்லாமல் விரும்புவதில் வெற்றிகாணும் போதுதான் பற்றறுத்தற்குத் தகுதியுடையவராகின்றோம்.

உன் குழந்தைகட்காக, நீ செய்தவற்றுக்கு அவர்களிடமிருந்து கைம்மாறு எதிர்பார்க்கின்றாயா? இல்லை, அவர்கட்காக உழைக்க வேண்டுவது உன் கடன்; அவ்வளவே. தனியொருவனுக்கோ ஊருக்கோ நாட்டுக்கோ உழைக்கும் போதும் அதே மனப்பான்மையைக் கொள்: கைம்மாறு கருதாதே. எப்பணியினையும் பயன் கருதாது செய்ய எப்போது கற்றுக்கொண்டு விட்டாயோ அப்போதே நீ பற்றற்றவனாகின்றாய்.

நம் உள்ளங்கட்கு நாமே தலைவராக நின்று பணிபுரியும் போதுதான் பற்றற்ற பேரின்பம் கிட்டுகின்றது. உரிமை, முறைமை என்றெல்லாம் பேசுகின்றோம். உலகில் இவையெல்லாம் வெறும் குழந்தைப் பேச்சுகளே. மாந்தரின் செயல்களை இயக்குவன இரண்டே; ஒன்று வலிமை; மற்றொன்று அருள்! வலிமை தன்னலமுடையது. அருள் இறை நிலையது. நல்லவராகத் திகழ வேண்டுமெனில் அருளுணர்வு வேண்டும். உரிமை, முறைமை எல்லாம் அருளுக்குப் பின்தான். கைம்மாறு கருதுவது, நம் உரிமையே என்போமாயின், நம் புலம்பன் (ஆன்ம) வளர்ச்சி தடைப்படுகின்றது. வாழ்க்கை துன்பத்தில் முடிகின்றது. இவ்வருளுணர்வையும், தன்னலமற்ற அன்பையும் செயற்படுத்த மற்றொரு வழியுண்டு. அதுதான் பணியினை, இறைவழி பாடாகக் கருதுவதாகும்.

நம் பணியின் பயன்கள் அனைத்தையும் நாம் இறைவனுக்குப் படையலாக்கி விடுகின்றோம். இவ்வாறு அவனை வழிபடுவதனால் நாம் மாந்தர்க்குச் செய்கின்ற எப்பணிக்கும், மாந்தரிடம் கைம்மாறு எதிர்பார்க்கும் உரிமை நமக்கில்லாது போகின்றது. இறைவனே பற்றற்றுப் பணி புரிகின்றான் அல்லனோ? பற்றற்றுப் பணிபுரியும் ஒருவன் தாமரையிலைத் தண்ணீர் போன்றவன். காலமெல்லாம் தீவினையாளர் நடுவில் இருப்பினும், தீவினை அவனைத் தொட்டும் பார்ப்பதில்லை. தன்னலம் துறக்கும் ஈகமே மாந்தனை உயர்த்தி இறைநிலைக் கழைத்துச் செல்கின்றது. இன்று இந்த எண்ணம் நம் நாட்டை விட்டகன்று கொண்டிருக்கின்றது பெருஞ் சான்றோர் அருகி வருகின்றனர்.

வினைமுனைப்பு (கருமயோகம்) என்பதை இப்போது புரிந்து கொண்டோம். ஆம். சாவின் எல்லைக் கோட்டில் நிற்கும்போது கூட, ஏன்? எதற்கு? என்று கேட்காமல், யார்க்கும் உதவி புரிய அணியமாயிருக்க வேண்டும். ஆயிரமாயிரம் முறை

ஐயம்

மருதூர் இளங்கண்ணன்; எம். ஓ. எல்.,
(அரசினர் கலைக்கல்லூரி; சென்னை.)

பன்னாள் தெளிவும் பழுநிய அன்பும்
ஐயம் நெஞ்சுபுகின் அதனெதிர் நில்லா:
நம்பிக்கை யொழிக்கும்; நலன்விழை நெஞ்சத்து
ஆழ்பே ரன்பே அடிப்படை யாக
நன்றொன்று செயினும் நடிப்பெனக் காட்டும்;
மாசறு செயலையும் மறைந்துநின் றறியும்;
யாவதுந் தொடர்பில் இயற்கை நிகழ்வையும்
கருத்திற் கியைய காரண மாக்கிப்
பழிபல சுமத்தும்; பல்விழுப் பொருள்கள்
அடுக்கிக் கொடுப்பினும் அடைவதற் கரிய
விழுமிய அன்பையும் வேரொடு சாய்க்கும்;
புணர்ச்சியைக் கெடுக்கும்; புன்மைகள் கொடுக்கும்;
தீந்துயில் கெடுக்குந் துயர்மழை பொழியும்;
வன்கொலைத் தொழிற்கும் வழிபல வகுக்கும்.
ஆழ்ந்துநனி நினைகுவம் ஆயின்
ஐயத்தின் அழிந்தோர் வையத்துப் பலரே!

திருமணச் செய்தி

'தென்மொழி'யின் மதுரை முகவர் திரு. கே. சி. குப்புசாமி அவர்தம் மகனார் திரு. கோவிந்தராசு அவர்கட்கும் திருவாட்டி. இராமலக்குமி அம்மைக்கும் தை 7-ஆம் நாளன்று மதுரையில் மணம் நிகழ்ந்தேறியது. மணமக்கள் நீடுழி வாழ வாழ்த்துகிறோம்.

— ஆசிரியர்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஏமாற்றப்பட்டாலும் படு. எதிர் வினை மட்டும் வினவாதே. நீ செய்வதைப் பற்றியும் எண்ணாதே! ஏழைக்குக் கொடுப்பதைப் பற்றியும் பெருமைப்படாதே! அவர்களின் நன்றியையும் எதிர் பாராதே! மாறாக ஈத்துவக்கும் வாய்ப்பை உனக்களித்ததற்காக அவர்கட்கு நன்றி காட்டு.

(முற்றும்)

<u>கற்பனை ஊற்று</u> மெய்ம்மைப்பித்தன்.

அமைதிப் புயல்

என் அறிவு விழித்துக் கொண்ட நாளிலிருந்து என் உள்ளம் தூங்குவதில்லை.

இருள் மண்டிய அறையில் தூங்கிக் கொண்டிருக்கும் விழிகள், திடுமெனப் பாயும் ஒளி நிறைவால் விழித்துக் கொள்வதுபோல், அன்று விழித்த என் உள்ள விழிகள் இன்றளவும் துயில் கொள்ளவில்லை. மாறாக, நாளுக்கு நாள் அதன் இயக்கம் நன்கு சூடேறிய இருப்புச் சட்டியில் கொதிக்கின்ற எண்ணெய்போல் தளதளத்துக் குதிக்கின்றது. நான் நடந்து செல்கின்ற வாழ்க்கை வழியில், என்னுள் கொளுத்தி வைக்கப் பெற்ற அறிவு விளக்கு முன்னே நடையிட்டுச் செல்ல, என் உள்ளம், இதற்கு முன் காணாத காட்சிகளைக் கண்டு கண்டு சுவைத்த வண்ணமாய் எண்ணி எண்ணி இறுமாந்த நிலையொடு அதன் சுடரொளியில் நான் நடக்கவேண்டிய வழிகண்டு விரைந்து நடையிடுகின்றது.

இளமை மெருகேறிய தாய் தந்தையரைப் பின்பற்றி அவர்தம் வலிந்த கைகளைப் பிடித்துக் கொண்டு, அவர்தம் விரைந்த நடைக்கு ஈடு கொடுக்கவியலாமல் 'தடக்குப் புடக்கு' எனக் கால்கள் தள்ளாடி நடக்கும் சிறு மகவுபோல், என் வலிவற்ற உடல், முன்னே போகும் அறிவிற்கும் உள்ளத்திற்கும் இணைய நடக்க முடியாமல் அடிக்கடி சோர்ந்து களைப்புறுகின்றது.

தன் உடலையே தூக்கிக்கொண்டு நடையிடத் தெரியாத அச்சிறு குழந்தை, தன் இடக் கையிலும் வலக் கையிலும் தனக்குகந்த சிறுசிறு விளையாட்டுப் பாவைகளைத் தூக்கிக்கொண்டு மேலும் மேலும் தள்ளாடி நடப்பதுபோல் என் உடல் என் மனைவி மக்களை இறுக அணைத்துக் கொண்டும், எங்கட்கு வேண்டிய பொருள் பொதிகளைச் சுமந்துகொண்டும் நாளுக்கு ஒரு எட்டாக நடை போடுகின்றது!

புறவியக்கத்தில் நான் விலக்கினாலும் என்னை விட்டு விலகத் தெரியாத என் மனைவி மக்கள் பால் நான் கொள்ளும் இரக்கத்தைப்போல், சதைத் திரைகள் மூடித் திண்ணிக் கிடக்கும் என் எலும்புக் கூட்டை இழுத்துக்கொண்டு போகும் என் உள்ளமும் அறிவும் இவ்வுடல்மேல் சிற்சிலகால் பரிவு காட்டி, இதன் பொருட்டுச் சிற்சிலகால் இதன்வரவுக்கெனக் காத்திருக்கின்றதை நான் அறிந்து நாணியிருக்கின்றேன்,

உள்ளும் புறமும் எனக்கேற்படும் ஆரவார நிலைகளை விட்டுச் சிறிதுகால் என் உள்ளம் அமைதியை நாடுவதுண்டு. ஆனால் அது பெறுவது இரட்டிப்பான சந்தை இரைச்சலே!

சோற்றுக்கும் வாழ்வுக்கும் 'அடித்துத் துணி பொறுக்கும்' இவ் வெற்று ஆரவார மக்களைவிட்டுப் புறம் போக எண்ணிக் காது களையும் கண்களையும் உணர்விழக்கும்படி மூடிக்கொண்டு சில பொழுது நின்றிருக்கின்றேன்.

அப்பொழுதெல்லாம், அப்பப்பா; என் உள்ளச் செவிகள் அற்றுப் போகும்படியும், என் உள்ளக் கண்கள் கூசுகின்ற வாறும் என் உள்ளுக்குள் அலைத்துப் படபடத்துத் தூளிபடுக்கும் என் அறிவுக் கூத்தை எங்ஙனம் விண்டுரைக்க வல்லேன்!

சுற்றிச் சூழ்ந்திருக்கின்ற வெற்றுரைகளின் புன்மைப் பகட்டுக ளாகிலும் என் உள்ள நெரிசலையும் அறிவின் முடுக்கத்தையும் ஓரோவொரு கால் தடுத்து நிறுத்துவதுண்டு!

இவையற்ற தனிமையான சூழலில், என் உள்ளமும் அறிவும் கடிவாளமின்றிப் பூட்டப் பெற்றுக் கட்டவிழ்த்துக் கொண்டு திரிவதால் என் உடல் வண்டியின் நடப்பு உருளைகள் தாறுமாறாகக் குறுக்கும் நெடுக்கும்போய், மலைமீதிருந்து கடலில் தலைகீழாகக் குதிப்பதும், கடலிலிருந்து விண்ணுக்குத்தாவுவதும் அங்கிருந்து உடல் குப்புற மணற்படுக்கையில் 'தொப்'பெனக் குதித்துப் புரள்வதும், பூக்களை மிதிப்பதும், தேன் கூடுகளைச் சிதைப்பதும், குழந்தைகளை ஓட ஓட விரட்டுவதும், கோயில் மணிகளை இராமுழுதும் பேரொலி பட இடைவிடாமல் முழக்கு வதும், தூங்கித் தூங்கி விழுவார் தம் முதுகுகளைத் தட்டி எழுப்பு வதும், தூங்காத எறும்புகளைக் குழிகளிற் போட்டு மூடுவதும், ஆடுவதும், நகைப்பதும், அப்பப்பா, இன்னும் பல்வேறு வினைப் பாடுகளால் என் உடலைப் போட்டு உருட்டுவதுமாக இருக் கின்றன.

ஒரு நொடி அமைதிக்காக ஒரு நாள் முழுதும் காத்திருந்து களைப்படைந்ததுண்டு! ஓடி ஓடி யலுத்தவன் கால்கள் இயக்க மின்றிச் சோர்ந்து விழுங்காலும், அவன் உள்ளம் துடிதுடிப்ப தைப்போல், கிடைக்கின்ற சிறிதுநேர ஓய்விலும் நான்விரும்பிய அமைதி இன்றளவும் கிடைத்ததில்லை. படுத்தவுடனே முடங்கிக் கொண்டு அயர்ந்து தூங்கிய என் இளமைப் பருவத்து நினைவுகள் இன்னும் காய்ந்து போகவில்லை! அவற்றை எண்ணி ஏங்கு கின்றேன்.

வலுத்த ஆரவாரப் பேரொலிக் கிடையிலும் வாயைப் பிளந்து கொண்டு குறட்டையொலி அண்டைஅயலாரைத் தொலைப்பது போல் சாத்தூக்கங் கொள்ளுகின்ற ஒரு சிலரைப் பார்த்து ஏங்கி யிருக்கின்றேன்

இரவில் ஓயாத குரைப்பின் அயர்வால் வேலியோர நிழலில், பள்ளந் தோண்டி முடங்கிக் கிடக்கும் நாய்களைக் கடந்து போகும்பொழுது நானும் அவைபோல் குழி தோண்டிப் படுத்து முடங்க வேண்டும் என்று பேராவல் கொண்டிருக்கின்றேன்.

என் வேட்கையெல்லாம் காய்ந்து கனல்கின்ற என் உள்ளத்திற்கு மேலும் சூட்டைப் பரப்பி வந்திருக்கின்றதே அன்றி, என் உணர்வு நெருப்பு குளிரும் வண்ணம் அமைதித் துளிகளைத் தெளித்ததில்லை.
கடற்கரை எனக்கு அமைதி தரலாம் என்ற சிற்றுவலினால் அங்குப் போய் நெடு நேரம் அமர்ந்திருக்கின்றேன்.

ஆனால், அக்கடலலைகள்போல் எழும்பிக் குதிக்கும் என் உள்ள அலைகள் அங்குப் போனவுடன், மேலும் மேலும் நிலவொளியைக் கண்டு பொங்கும் அந்நீல நீர்ப்பரப்புப்போல் உணர்வால் உயர்ந்து பொங்குகின்றது.
மூச்சொலியும் இல்லாத குன்றத்தின் கொடு முடியில் நின்று இரு கை நீட்டி அமைதியை எதிர்நோக்கி யிருக்கின்றேன்!

அம்மகோ! அங்கு நான் கேட்கும் ஓவென்ற பேரொலிக்கு என் செவிப்பறைகள் தவிடு பொடியாகின்றன.
எல்லாரும் அயர்ந்து துயிலும் அந் நள்ளிரவு நேரமே என் உணர்வுக்கான அமைதியான பொழுது என்று கொட்டுக் கொட்டென விழித்திருந்து, இரவின் நடுப் பொழுதுகளை நீந்தியிருக்கின்றேன்!
காந்தக் கல்லை நெருங்க நெருங்க இரும்பிற்கு இயக்கம் ஏற்பட்டு இழுப்புண்டு சுழல்வதுபோல் என் உள்ளமும் நள்ளிரவின் அசையாப் பொழுதுகளில் கடுஞ் சுழற்சியில் என்னை அலைக்கழிக்கின்றது.
மடித்து வைக்கப் பெறாத என் நெஞ்ச ஆடை காய்ந்து முருக முருக, சிறிய காற்றுக்கெல்லாம் படபடக்கின்றது.
அமைதி தேடி அலையாத இடம் அலைகின்றேன்.
நான் காலை ஊன்றி நடக்குமிடமெல்லாம் தரை தட்டுப்படுவது போல், என் உணர்வு அலைகின்ற இடமெல்லாம் இவ்வுலகின் ஆரவாரக் கூத்து என்னை முட்டி மோதுகின்றது!
என் உடல் புறத்தே அசையாது இருப்பதெனின் உள்ளம் ஓயாமல் கூத்திடுகின்றது என்று பொருள்!
என் உடல் ஆடி அசையுங்கால் என் உள்ள ஓட்டம் தடைப் படுகின்றது
குறிக்கோளற்று விரைந்து நடக்கும் என் உயிர்ச் செலவு என்று ஓயுமோ?
என் கண்ணும் காதும் அங்காந்த வாயுடன் அறிவுப் பசி கொண்டு அலைகின்றன
இளமை வேட்கை பொங்கும் புதுமண மக்களின் இறுகிய தழுவல் போல், அறிவுருவை அணைக்கத் துடிக்கின்றது என் உள்ளம்!
உள்ளம் அறிவை எட்டுவதற்குள், அறிவு நெடுந் தொலைவு பறந்து போகின்றது!
காதலனை விடாமல் தொடரும் காதலியாக என் உள்ள உணர்வு என் அறிவைப் பின் தொடர்கின்றது.

ஓய்வொழிவின்றி நடையிடும் இவ்விரு காதலரின் நோக்கந்தான் என்ன?

காதலனெடு தப்பிவிட்ட தன் மகளுக்காகத் தேடி நடக்கும் மெலிந்த முது மகள்போல் என் உடல் அறிவொடு போகும் என் உள்ளத்தை எட்டிப் பிடிக்கப் பன்முறை முயல்கின்றது.

ஊனும் உறக்கமும் இன்றி இவ்வுடல்தாய் மெய் வாழ்வு நாடிப் போகும் அறிவையும் உள்ளத்தையும் மீட்டும் பிறந்த இவ்விடத்திற்கே இட்டுக்கொண்டு வரப் பெரு முயற்சி செய்கின்ருள்.

அறவோரும் துறவோரும் அத்தாயின் வேட்கையைத் தடுத்து நிறுத்தும் முயற்சி பயன் தருவதாகத் தெரிவதில்லை.

இறுதியில் முற்றி முதிர்ந்த அத்தாய் தனித்து நிற்ப, நிலையான ஒளி வாழ்வு வேண்டிப் போன காதலர் இவ்வுலகத்தின் புலை நிகழ்ச்சிகளின் மீது படராத தனி வாழ்வு நடத்துகின்றனர்.

என் அறிவும் உள்ளமும் வளர்ந்து பருவ மெய்திய இளையோர் போல் தம் இயக்கம் வலிவுறும்படி என்னைப் புறக்கணிக்கின்றன.

நிலத்திற்கும் நீர்க்கும் இழுத்துக் கொண்டு துன்புறும் கட்டுப் பட்டுக் கிடக்கும் எலியும் தவளையும் போல என் உயிரும் மெய்யும் எதிரெதிரே முனைந்து நிற்கின்றன

ஓயாத இப் பெரும் போராட்டத்தில் அமைதி கிட்டுமா?

அவ்வமைதி புறத்தே எவ்வகையான அசைவையும் நிகழ்த்துவதில்லையாயினும், அகத்தே பெரும் புயலையல்லவா எழுப்பிக் கொண்டுள்ளது!

நடக்காத ஒன்றின் ஓட்டத்தை நீங்கள் பார்த்ததுண்டா?
பேசாத ஊமையனின் பாட்டை நீங்கள் கேட்டதுண்டா?
அசையாத கருங்கல்லின் ஆட்டத்தை நீங்கள் கண்டதுண்டா?
இல்லை; கண்டுகொள்ளும் வாய்ப்பு உங்கட்கிருந்ததில்லை.

ஏனின், என் புற அமைதியின் அகத்தே சுழன்று வீசி என்னை அலைக்கழிக்கும் அப்பெரும் புயலின் பேயாட்டத்தை நீங்கள் உணர்தல் இயலாது!

அப்புயலில் சிக்குண்ட என் உயிர் துன்புறுவதாக நீங்கள் நினைத்தல் வேண்டாம்.

அப்புயலில்தான் என் உயிர் இன்பம் பெறுகின்றது!
இயக்கந்தான் இன்பம்!
இயக்கந்தான் விழிப்பு!
இயக்கந்தான் தோற்றத்தின் வித்து!
இயங்காத ஒன்று இன்புறவும், இன்புற்று ஒன்றைத் தோற்றுவிக்கவும் இயலாது!
புறவியக்கம் அக நிலைப்பு!

அகவியக்கம் புற வொடுக்கம்!

இவ்வுலகப் போலியாரவார நிகழ்ச்சிகளில் உடலையும் உள்ளத்தையும் அறிவையும் ஈடுபடுத்துவான், 'அகம்' ஒன்றிருப்பதையும் நினைவு கூரான்!

ஓடுகின்ற கால்கட்கும், ஆடுகின்ற கைகட்கும், பேசுகின்ற பேச்சுகட்கும், கேட்கின்ற செவிகட்கும், பார்க்கின்ற பார்வைக்கும் அவன் உண்ணுகின்ற உணவு சரியாகப் போகும்!

அவற்றை யியக்கின பெரும் பங்கு போக எஞ்சிய எள்ளின் மூக்கத்துணை பங்கால் உள்ளத்தையும் அறிவையும் இயக்க மாட்டாமல் அவன் தேய்ந்து போகின்றான்;

கூட்டிவைக்கும் ஆற்றலையெல்லாம் இவ்வைம்புலன்களின் வழியே அவன் ஒழுக விடுங்கால், உள்ளத்தையும் அறிவையும் பேணுவது யாங்ஙன்?

நான் என் உடலை வளர்த்துக் கொள்வதை விட என் உள்ளத்தையும் அறிவையும் வளர்த்துக் கொள்ளவே முனைகின்றேன்.

மெய்த் தோற்றத்தால் நான் இளமையாகவும் மெய்யறிவுத் துலக்கத்தால் முதுமையாகவும் இருக்கவே நான் விரும்புகின்றேன்.

என்பால் முளைவிட்டுத் தோன்றும் அறிவு என் புறத்தைக் கட்டி அதன் வளர்ச்சியைக் குறைப்பதாக நான் எண்ணுகின்றேன்.

விளக்கமிலாத அறிவுப் புதிரைத் துருவித் துருவியே என் வாழ் நாளைக் கழிக்க விரும்புகின்றேன்.

துலக்கத் துலக்க ஒளிபெறும் கண்ணாடி, பின்புறத்துள்ள தோற்றத்தை மேலும் மேலும் துல்லியமாக்குவது போல்,

அறிவால் விளக்கமுறும் உள்ளம் இவ்வறிவுப் புதிரை மேலும் மேலும் நுண்ணிய விளக்கலாகாத புதிர்களாகக் காட்டுகின்றது.

இருப்பினும் அவற்றையே நாடிப் போகின்றது என் உயிர்.

என் உடலை நான் என் புறக்கண் கொண்டு பார்த்தும், புறக் கருவிகொண்டு தொட்டும் நீவியும் மகிழ்வது போல், என் உயிரை என் அகக்கண்கொண்டு பார்த்தும் அகக் கருவிகொண்டு தொட்டு மகிழவும் நான் விழைகின்றேன்.

நான் புற நிகழ்ச்சிகளுக்காக எத்துணை மல்லாடுகின்றேனோ அத்துணையளவு என் அக நிகழ்ச்சிகளுக்காக மல்லாடுகின்றேன்.

என் அமைதி என்னையே நான் புரிந்து கொள்ள நான் செய்யும் முயற்சி!

அங்கு எனக்கு நிகழ்வது போராட்டமே!
அப் போராட்டமே என்றன் உயிர் இன்பம்!
அதுவே எனக்கென்றும் வேண்டுவது!
அதுவே என் வாழ்வு.

*

பாவாணர்க்கு உதவுக!

புலவர்; பா. நாராயணன், மேட்டுப்பாளையம், திருச்சி.

க அந்தோநற் றமிழகமே நின்னிலையு
மிவ்வாறின் ருதல் நன்றோ?
செந்தமிழை மொழியாகப் பெற்றதனால்
தாழ்ந்தனையோ! செவ்வி சான்ற
அந்தமிழைக் கற்றவர்க்கு மந்நிலையோ!
தொன்றுளதேல் அருளின் மேற்றாம்;
இந்தநிலத் திஞ்ஞான்று மிருப்பதுவோ?
இழிவறியா வியல்பின் மேற்றோ?

உ நின்னகட்டில் தோன்றியட லாண்மையொடு
மறம் மானம் நீங்க கில்லாப்
பொன்னனைய மைந்தரெலாம் வறுமையெனும்
பேரளற்றிற் புதையுண் டாங்கே
தன்னனைய மானமொன்றால் தலைநிமிர்ந்து,
தாழாமல் தமிழ்நெஞ் சத்தால்
இன்னலுறத் தமிழகத்தார் பார்த்திருந்தும்
எண்ணுகிலார் இவர்நோக் கென்னும்!

ங தண்டமிழ்த்தாய் மக்களுளே மறைமலைபோல்
தலைசிறந்த புலவ னெங்கள்
ஒண்டமிழ்க்குக் கேடென்று லுயிர்தனையும்
ஈந்துவக்கு முரவோன் வாழ்வில்
எண்டிசையு மெதிர்த்தாலுந் தன்கொள்கை
இடையூழ்த்தான் எதிர்ப்பா ராற்றல்
கண்டுபகைக் கஞ்சாதான் களிறட்டு
நிவந்தெழுகோ ளரியே யன்னான்.

ச தமிழ்ச்சொல்லும் வடசொல்லுந் தலைமணந்த
நிலையதனால் தமிழ்ச்சொல் லெல்லாம்
குமிழ்நெஞ்ச முடையவர்கள் வடமொழியின்
வழியென்றே குறிக்குங் காலை
அமிழ்தனைய தமிழ்மொழியின் அடிச்சொல்லும்
வளர்வழியும் அரிய சான்றும்
கமழ்தரநன் கெடுத்தோதிப் பகைநடுங்க
நிறுவுமியற் காட்சி மிக்கான்.

பொதுத் தொண்டர்க்குச் சில பொன்னுரைகள்.

○ நீங்கள் தொண்டாற்றச் செல்கையில் பொன்னையோ, வெள்ளியையோ செம்பையோ உங்கட்காகத் தேடிவைத்தல் வேண்டா. வழிப்பயணத்துக்காகப் பையினையோ, மாற்றுடையையோ, செருப்புகளையோ கைத்தடியையோ எடுத்துச்செல்லல் வேண்டா. உங்கட்கு வேண்டியவை தாமே வந்து வாய்க்கும்.

○ நாடெங்கும் சென்று உண்மையைக் கூறுங்கள். ஒளியுலகச் செய்தியை எடுத்தியம்புங்கள். ஏற்றுக் கொள்பவர் ஏற்றுக் கொள்ளட்டும். ஏற்றுக் கொள்ளாதவரை உதறித் தள்ளுங்கள். உலகியல் மாந்தர் நடுவில் எச்சரிக்கையாயிருங்கள் அவர்கள் உங்களைப் பிடித்துத் தங்கள் வழக்கு மன்றங்களில் குற்றஞ் சாட்டிக்கோவில்களில் உங்களைக் குதிரை வாரினால் அடிக்கவைக்கக் கூடும். அப்பொழுதும் கவலைப்படல் வேண்டா. உண்மை ஒளி உங்கள் உள்ளத்தில் இருக்கும்பொழுது, ஆணையாளர்களாகட்டும் அரசர்களாகட்டும் அவர்கள் முன்பும் உங்கள் தலை நிமிர்ந்து நிற்கும்.

○ உடன் பிறந்தார்க்குள்ளே பகை மூளக்கூடும். பெற்றோர்க்கும் பிள்ளைகட்கும் பூசல் நிகழக்கூடும். உங்கள் செயலை முன்னிட்டு, நீங்கள் பகைக்கப் படுவீர்கள். எனினும் இறுதிவரை உறுதி மாறாதிருப்பவனே உய்தியடைவான் என்று உங்கட்குச் சொல்கின்றேன். நீங்கள் யாருக்கும் அஞ்சுதல் வேண்டா. உள்ளத்தைக் கொல்ல வல்லவராயிராமல் உங்கள் உடலைமட்டும் கொல்ல வல்லவர்கட்கு நீங்கள் அஞ்சத் தேவையில்லை. உங்கள் உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே அழிக்க வல்ல தீவினைகட்கே நீங்கள் அஞ்சுங்கள்.

○ நான் உலகில் அமைதியை நிலைநாட்ட வந்தேன் என்று எண்ணாதீர்கள். அமைதியை யன்று, போராட்டத்தையே

---

௫ பன்மொழியு நனியாய்ந்த பாவாணன்
எனவுலகம் பகரு மன்னன்
தொன்மொழியாந் தமிழ்மொழியின் தூணென்றே
எம்மக்கள் சொல்லா நிற்பர்;
இன்மையெனுங் கொல்பருந்துக் கிரையானான்
எனினட்டிற் கிழுக்கா மன்றோ?
பின்மொழியா வகை, வாரிப் பெருஞ்செல்வம்
தமிழ்நாடே பொழிவாய் நன்றே! *

எழுப்ப வந்துள்ளேன். ஆம், மகனுக்கும் தந்தைக்கும், மகளுக்கும் தாய்க்கும், மாமிக்கும் மருமகளுக்கும் பிரிவினையை உண்டாக்க வந்தேன். ஒரு மாந்தனுக்குப் பகைவர் அவன் வீட்டாரே. தந்தையையாவது தாயையாவது தொண்டு வாழ்க்கையினும் மிகுதியாகப் பாராட்டுகின்றவன் எனக் குரியவன் அல்லன்; மகனையாவது மகளையாவது என்னினுஞ் சிறப்பாகக் கருதுபவன் எனக்குரியன் அல்லன். எவனொருவன் பொதுப்பணிக்காக வீட்டையாவது உடன் பிறந்தாரையாவது பெற்றோரையாவது, மனைவி மக்களையாவது நிலங்களையாவது விட்டுவிட்டுவருகின்றானோ அவனே நிலைபெற்ற மெய்வாழ்க்கைக் குரியவனாவான்.

○ தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள விரும்புபவன் அதனை இழந்து போவான். தொண்டில் தன்னையே அழித்துக் கொள்பவன் தன் உயிரைக் காத்துக் கொள்வான் மாந்தன் உலக முழுவதையும் தனக்குத் தேடிவைத்துக் கொண்டாலும் தன் உயிரை (புலம்பனை) இழந்து போவானாயின் அவனுக்குப் பயன் என்ன? தன் புலம்பனுக்கீடாக மாந்தன் எதைக் கொடுக்க முடியும்? உண்மையில் முழு நம்பிக்கை வேண்டும். கடுகளவு நம்பிக்கை இருப்பினும் போதும், மலையையும் புரட்டித் தள்ளலாம்.

○ உங்களில் சிலர் என்னை முழுவதும் நம்பவில்லை. உங்கள் மனம் வேறு எதையோ நாடியிருக்கின்றது. என்னிடத்தில் இவ்வுலக வாழ்வுக்குரியனவற்றை எதிர்பார்க்காதீர்கள். நான் இவ்வுலகத்துக் குரியவனல்லன். புலம்பன் வாழ்க்கையே மெய் வாழ்க்கை; அதுவே உயிரூட்டுகின்றது. பருவுடல் வாழ்க்கை எதற்குப் பயன்படும்? நான் உங்கட்குக் கூறுபவை யெல்லாம் மெய்யுணர்வைப் பொறுத்தவை; அவையே உங்கட்கு உயிர்நிலை.

○ உலகம் உங்களைப் பகைக்கின்றது என்று அஞ்சாதீர்கள். உலகம் உங்களைப் பகைக்குமுன்பு என்னைப் பகைக்கின்றது. நான் உலகின் செயல்கள் தீயவை என்று கூறுகின்றேன்; ஆகவே உலகம் என்னைப் பகைக்கின்றது. நீங்கள் உலகத்தவராக இருந்தால் உலகம் உங்கள்பால் நட்புக் காட்டியிருக்கும். நீங்கள் உலகத்தவராயில்லை. நான் உங்களை அவர்களினின்று பிரித்தெடுத்தேன். ஆகவே உலகம் உங்களையும் பகைக்கின்றது அதற்காக அஞ்சுதல் வேண்டா. நீங்கள் அழுது புலம்பினால் உலகம் மகிழக் கூடும்; ஆயினும் ஒருநாள் நீங்கள் மகிழ்வடைவீர்கள். பிள்ளைப்பேற்றுக்காலத்தில் பெண் பெருந் துன்பமடைகின்றாள். ஆயினும் பிள்ளை பிறந்த பின் அவளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி! அதுபோல் உங்கள் குறிக்கோளை நீங்கள் எய்தியபின் உண்மையாகவே பெருமகிழ் வெய்துவீர்கள்.

— ஏசு கிறித்து.

மண்ணியல் 'வழுதி'

பிளந்தோடிய மண்ணுலகு!

நாம் வாழும் இம் மண்ணுலகின் மேற்பரப்பைப்பற்றி நாம் தெரிந்துகொண்ட அளவு அதன் உட்பரப்பைப் பற்றித் தெரிந்து கொள்ளவில்லை. ஏன், எட்டாத் தொலைவில், கோடிக் கணக்கான விண்மீன்களும் கோள்களும் இயங்கிக் கொண்டிருக்கின்ற வான வெளியையும் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் நம்மைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற இம்மண்ணுலகின் இயல்பைமட்டும் இன்னும் முற்றிலும் அறிந்தோமில்லை. எனவே தான் அண்மைக் காலங்களில் உலகில் ஆங்காங்குள்ள அறிவியலறிஞர்கள் உட்பகுதியைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டு வருகின்றனர். அவ்வாராய்ச்சிகளின் விளைவாக ஒரு சில புதிய உண்மைகள் புலனாகின்றன.

இதுவரை நாம், இம்மண்ணுலகு கனற் பிழம்பால் ஆகிய ஒரே உருண்டையாக இருந்ததென்றும் அதன் மேற்பகுதி ஆறிச் சுருங்கியதால் மேடு பள்ளங்கள் ஏற்பட்டு மேடுகள் நிலமாகவும் மலைகளாகவும் பள்ளங்கள் கடலாகவும் மாறின என்றும் படித்திருக்கின்றோம்.

ஆனால் இக்கருத்தை மாற்றிக் கொள்ளக் காலம் வந்துவிட்டது. மேடுகளும் பள்ளங்களும் உலகு ஆறிக் குளிர்ந்ததால் ஏற்பட்டவை அல்ல என்றும், உள்ளிருந்து கொதித் தெழுந்த ஒருவகை ஆற்றலால் மலைகள் எல்லாம் குமுறிக் கிளம்பியிருத்தல் வேண்டும் என்றும் கூறுகின்றனர். மேலும் இப்போதுள்ள பெருநிலங்கள் (கண்டங்கள்) எல்லாம் தொடக்கத்தில் ஒன்றாக இருந்தன என்றும் காலப் போக்கில் அவை பிளந்து பிரிந்து தம் தற்போதைய நிலையை அடைந்துள்ளன என்றும் அறிவியலாளர் பலர் அறைகின்றனர். உலகம் ஒரே கெட்டியான உருண்டை என்றே அறிந்து வந்திருக்கும் நமக்கு இச்செய்தி வியப்பாகவும் நம்ப முடியாததாகவுமே உள்ளது. பெரு நிலங்களாவது, ஒன்றாயிருப்பதாவது? பின் விலகிப் போவதாவது? இப்படி ஆவதற்கு அவை என்ன மிதந்து கொண்டா யிருக்கின்றன? என்று கேட்போம்.

இதற்கு விடை, ஆம் அவை மிதந்து கொண்டு தாம் இருக்கின்றன என்பதாகும். முதன்முதலில் இவ்வாறிருத்தல் வேண்டுமெனக் கருதுதற்குக் காரணமான ஓருண்மையைக் கண்டு பிடித்தவர் மோகோரவிகிக் என்னும் யூகோசுலாவிய எரிமலை நில நடுக்கவியல் அறிஞராவர். நிலநடுக்க அதிர்வலைகளின்

இயக்கத்தினின்று, இவர் உலக உருண்டைக்கு மேல் தோடு (Outer Crust) ஒன்றிருத்தல் வேண்டுமென்று கண்டார். மேலும் சில அறிஞர்கள் இவ்வதிர்வலை இயக்கங்களின்றே மேல்தோட்டுக் கடுத்தபடியாக ஓர் உள்தோடும் (Mantle) இருத்தல் வேண்டுமென்றும் காழ்ப்பகுதி அதன் உள்ளேயே அமைந்து கிடத்தல் வேண்டும் என்றும் கண்டனர். இக்காழ்ப் பகுதியும் புறத்தே ஞெகிழியாகவும், மையத்திற் கெட்டியாகவும், இருபிரிவாக அமைந்துள்ளது என்றும் கண்டனர்.

இவ்வாறு, இந்நிலவுருண்டையைச், சிறிதே வேகவைத்த ஒரு முட்டைக்கு ஒப்பிடலாம். முட்டையின் கடினமான, அதேபோது நொறுங்கும் தன்மைவாய்ந்த (Brittle) ஓட்டினைப் போன்றதே உலகின் மேல்தோடும் (Outer Crust). ஆனால் முட்டை யோட்டினைப் போல் அன்றி இது பருமனில் ஏற்ற இறக்கங்கள் உடையதாயிருக்கின்றது. நிலப்பரப்பில் இது பத்தொன்பது முதல் நாற்பதுகல் பருமன் உடையது. கடல் அடியிலோ மூன்று கற்கள் பருமனே உடையது.

அடுத்தது உள்தோடு (Mantle) இது முட்டையின் வெள்ளைக்கருப் போன்றது. திட்ப்பொருளால் ஆயினும், வெள்ளைக் கருவினைப் போலவே சற்றுக் குழைவுடையது. மேல் தோட்டினின்றும் முற்றும் மாறுபட்ட – மேலும் அழுத்தமான – வேறு வகைப் பாறைகளால் ஆயது.

அடுத்துள்ள புறக்காழ் (Outer Core) முட்டையின் மஞ்சட் கருப் போன்றது. வெளிறக் காய்ச்சிய இரும்பு ஞெகிழி யாகும் இது (White hot liguid iron).புறக்காழின் நடுவண் உறுதியான அகக்காழ் (inner core) இருப்பதை முன்னரே கூறினோம்

மேல்தோடு எதனில் மிதக்கின்றது என்ற வினா எழல்கூடும். உள்தோட்டின் மேல் மிதக்கின்றது என்றே கூறல் வேண்டும். (முற்றிய விளாம் பழத்தின் ஓட்டினைப்போல் இஃது இருக்கும் என்று நாம் கற்பனைசெய்து கொள்ளலாம்) இஃது இரண்டுவகை யாக அமைந்துள்ளது நிலப்பரப்பின் மேல் உள்ள தொன்று. இது பருமன் மிக்கதாகவும், புலர்ந்துபோய்ப் பளுக் குறைந்த தாகவும் உள்ளது. கடல்களின் அடிப் பகுதியில் இத்தோடு பருமன் குறைந்ததாகவும், ஆனால் அடர்த்தி (பளு)மிக்கதாகவும் உள்ளது. நிலப் பரப்பு கடல் மட்டத்துக்கு மேல் புடைத்தெழுந் திருப்பதற்கு இதுவே காரணம். உலர்ந்தும் அடர்த்தி குறைந்தும் இருப்பதால் அஃது எளிதில் மேலெழும்பி மிதக்கின்றது. இது வியப்பாகத் தோன்றக் கூடும். ஆனால் மேல்தோடு மட்டுமே ஆறிக் குளிர்ந்து உலர்ந்தும், உட்பகுதி கொதிக்கும் கனல்

உருண்டையாகவும் இருப்பதனை எண்ணுகையில் இதனைப் புரிந்து கொள்ளல் எளிதே.

மேல் தோடு மிதக்கும் தன்மையது என்பதற்கும் மேலழுத்தும் சுமைக்கேற்பத் தாழ்ந்தும் எழுந்தும் வந்துள்ளது என்பதற்கும் சான்றுகள் உள. இசுக்காந்திநேவியா (Scandinavia), கனடா போன்ற பகுதிகளில் இரண்டு கல் ஆழத்துக்கு, பழங் காலத்தே பெரும் பனித் திரள்கள் கிடந்து அழுத்திக் கொண்டிருந்தமை பல சான்றுகளால் அறியப்பட்டுள்ளது. ஏறத் தாழப் பத்தாயிரம் ஆண்டுகட்குமுன் திடுமென எழுந்த வெப்ப மிகுதியால் அவை உருகி ஓடலாயின. அழுத்திக் கொண்டிருந்த சுமை இவ்வாறு நீங்கவே நிலம் படிப்படியாக மேல் எழுந்து மிதக்கத் தொடங்கியது. தற்போது கடல் மட்டத்துக்குமேல் பல்லாயிரம் அடி உயரத்தில் கிடக்கும் கடற்கரைகளில் பல முன் கடல் மட்டத்திலிருந்து, பின் படிப்படியாக உயர்ந்து உயர்ந்து தற்போதைய நிலையை அடைந்துள்ளன என்பதற்கு அவற்றிலேயே அடையாளங்கள் காணக்கிடக்கின்றன. வடக்கு பின்லாந்தில் கண்டுள்ளபடி ஓராண்டுக்கு ஒரு சென்டி மீடர் மேனி நிலம் உயர்ந்து வந்திருக்கின்றது.

இக் கொள்கைக்கு வலிவூட்டும் வகையில் மற்றொரு செய்தியைக் கூறலாம். அத்துணைப் பெருந்திரளான பனிக்கட்டி உருகியதால் கடலின் நீர்மட்டம் ஏறத்தாழ ஐம்பது மீடர் அளவு உயர்ந்திருத்தல் வேண்டும். அதனால் பல விடங்களில் கடல் கோள் ஏற்பட்டிருத்தல் வேண்டும். பத்தாயிரம் ஆண்டுகட்கு முன் ஏற்பட்ட இக்கடல் கோள் பற்றி உலக வரலாறெங்கணும் செய்திகளும் கதைகளும் மலிந்து கிடப்பதிலிருந்து, அப் பெரும் பனி யுருக்கம் உண்மையாக நேர்ந்ததே என நாம் துணியலாம்.

இவ்வாறு மேல்தோடு கீழும் மேலுமாய் அமிழ்ந்தெழக் கூடியதே என்பது உண்மையாகும்போது அது பக்க வாட்டிலும் நகரக் கூடியதே என்ற கொள்கை புது வலிவு பெறுகின்றது. இக் கொள்கை 1912ஆம் ஆண்டு, ஆல்பிரட் வெகனர் எனும் செருமானிய வானிலை ஆய்வாளரால் வெளியிடப்பட்டது. நிலப் பரப்பு முன்பு ஒன்றாயிருந்து பின்பு பிளந்தோடிப் போயிருக்கின்றது என்பதே அதன் சாரமாகும். அட்லாண்டிக் கடலின் இரு மருங்கிலுமுள்ள பெரு நிலங்கட்கிடையே அமைப்பிலும் பாறை வகையிலும் தன்மையிலும் மிகஒற்றுமை காணப்படுவதை முன்பே அறிவியலார் கண்டு வியந்திருக்கின்றனர். காரணம் என்னவாக இருக்கும் என்று எண்ணி எண்ணிப் புரியாமல் விழித்திருக்கின்றனர். வெகனரின் கொள்கை இக் காரணத்தைப் புலப்படுத்திவிட்டது. இவ் விடம் விலகலுக்குச் சில கோடி ஆண்டுகளாவது பிடித்திருக்கவேண்டும். சில கோடி ஆண்டு

களா என்று வியத்தல் வேண்டா. ஒரு முறையன்று பல முறைகள் இது போன்ற விலகல்கள் நேருமளவுக்கு மண்ணுலகு அத்துணை முதுபெரும் பழமை வாய்ந்ததே.

பெருநிலங்களின் இடம் விலகல் (Continental Drift) எனப் பெயர் பெறும் இக்கொள்கை பலரின் எதிர்ப்புக்குள்ளாகியே இருக்கின்றது. எனினும் பற்பல சான்றுகளால் இக்கொள்கையே வரவர உறுதிப்படுகின்றது. அட்லாண்டிக் கடலின் இருபுற முள்ள நாடுகளிலும் காணப்படும் பழம் பாறைகள், பாறைப் படிவங்கள் (fossils) ஆகியவை பல்லாற்றானும் ஒத்திருத்தல் பற்றிக் கூறினோம். இந்நிலப் பரப்புகளின் வடிவங்களும் இக் கொள்கையை வலியுறுத்துகின்றன.

புதிய உலகின் கிழக்குக் கரையினையும் பழைய உலகின் (ஐரோப்பா ஆப்பிரிக்கா) மேற்குக் கரையினையும் ஒத்துநோக்கினால் அவற்றின் அமைப்பில் உள்ள ஒற்றுமை புலனாகும். படம் ஒன்றில் இவற்றைத் தனித்தனியே கத்தரித்து ஒட்டவைத்தால், துருத்திக் கொண்டிருக்கும் தென்அமெரிக்காவின் முனை உள் வளைந்திருக்கும் ஆப்பிரிக்கக் கரைக்குள்ளும், ஆப்பிரிக்காவின் துருத்திக்கொண்டிருக்கும் வடமேற்குக் கரை வட அமெரிக்காவின் உட்குடைவாகிய கரைக்குள்ளும் போய்ப் பொருந்திக் கொள்வதைக் காணலாம். நிலப்பரப்புப் பிளந்து போயிருக்கின்றது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

இவை அட்லாண்டிக் கடலின் நடுவில் ஏதோ ஒரு பகுதியிலிருந்து பிளந்து போயிருக்க வேண்டும். அதன்பின்பே அக் கடல் தோன்றியிருக்க வேண்டும். சான்று கிடைக்காதிருந்த இக்கொள்கைக்குத் தற்கால ஆராய்ச்சியின் விளைவாகச் சான்றுகள் கிடைத்துள்ளன.

1956-ஆம் ஆண்டில் அமெரிக்க அறிவியலறிஞர் இருவர் வியத்தகும் ஓர் உண்மையைக் கண்டனர். கடலுக்கடியில் பெரு மலைகளும் குவிபாறைகளும் (Ridges) கிடைப்பதாக நாம் முன்பே அறிந்துள்ளோம். இவ்வறிஞர், இப்பாறைகள் தனித் தனியாகத் துண்டுதுண்டாகக் கிடப்பவை அல்ல, அட்லாண்டிக்கின் வடகோடியில் தொடங்கி இந்தியக் கடல் வழியாகச் சென்று ஆத்திரேலியாவையும் தாண்டியுள்ள ஒரு நீண்ட சங்கிலித் தொடரே என்று கண்டறிந்தனர். தவிர இப்பாறைகள் வெப்பமாகவும், எரிமலைத் தன்மையாகவுமுள்ளன. இவை இருபுறப் பெருநிலங்கட்கும் நேர் நடுவில் நீண்ட கோடு போன்று கிடப்பதால் நிலங்கள் பிளந்து சென்றதன் அடையாளமே இவை என்று துணியலாம்.

மேலும் பசிபிக் கடலின் அடியில் ஆழ்ந்ததில் ஆங்காங்கு ஏறத்தாழ இரண்டு கல் உயரமும் ஆயிரங்கல் நீளமுமான பல பாறை முரிவுகள் (Fractures) காணப்படுகின்றனவாம். அம் முரிவுகளின் இரு மருங்கையும் ஒத்து நோக்கியதில் அவை ஏதோ ஒரு வெடிப்பு நேர்ந்தமையின் அறிகுறிகளே என்று தோன்றுகின்றதாம். இவ்வெடிப்பு நேர்ந்தது ஏன்? நிலம் பிளந்தோடியது ஏன் என்ற வினக்கட்கும் விடை கூறினுல்தான் கொள்கை மேலும் வலுப்பெறும்.

நிலத்தின் உட்பகுதியிலிருந்து ஆற்றல் குமுறி எழுகின்றது (Theory of convection currents) என்றதொரு கொள்கை அறிவியலாளர்களால் தற்போது மேற் கொள்ளப்பட்டுள்ளது. கீழிருந்து புறப்படும் இவ்வாற்றல் மேல் தோட்டின் வலிவு குறைந்த இடங்களைத் தாக்கி அவற்றைப் புடைக்கச் செய்திருத்தல் வேண்டும். வலிவான பகுதியின் கீழ் அஃது அமிழ்ந்து போயிருத்தல் வேண்டும். வலுக்குறைந்த மேல் தோடு வெடித்து விட்டது; அவ்வளவே. நிலப்பரப்பு நொறுங்கும் தன்மை வாய்ந்த பாறைகளால் அமைந்திருப்பதும், கடல் அடிப்பகுதி உள்தோட்டோடு ஒப்புமை உடைய கெட்டியான கடினப்பாறைகளால் அமைந்திருப்பதும் இதற்கு அரண் செய்யும்

பெருநிலங்கள் வளர்ந்து கொண்டே வருகின்றன என்று மற்ருெரு கருது கோள் உள்ளது. பொதுவாக உலகத்தின் மலைத் தொடர்கள்பல நிலப்பகுதிகளின் விளிம்புகளிலேயே இருப்பதைக் காணலாம். நிலப்பகுதியைச் சுற்றிச் சிறிது சிறிதாக இவை வளர்ந்து அவற்ருேடு ஒட்டியிருத்தல் வேண்டும். நிலம் ஆறிக் குளிர்ந்ததால் ஏற்பட்ட மேடுகளே மலைகள் என்ற கொள்கையை இக்கொள்கை மறுக்கின்றது. இதன்படி பெரு நிலங்களில் சற்றும் அசைவு ஏற்படாமல் உட் குமுறலால் மலைகள் உள்ளிருந்து புடைத்துக்கிளம்பிச் சிறிது சிறிதாக நிலப் பரப்பை அகலப்படுத்திக் கொண்டே வந்திருத்தல் வேண்டும். உட்பகுதி நோக்கிச் செல்லச்செல்லப் பாறைகள் பழமையாகவும் ஓரங்களில் இளமையானதாகவும் இருப்பது இக்கருத்தை வலியுறுத்துகின்றது.

வேறு சில புதிய உண்மைகளும் கண்டறியப்பட்டுள்ளன. பாறைகள் மட்குத் திரள்களால் ஆகியிருப்பினும் எரிமலைக் குழம்பு உறைந்ததால் ஆகியிருப்பினும், அவை உருவாகும் அஞ்ஞான்று, தத்தமக்குரிய காந்த ஈர்ப்பினுல் எந்தத் திசை நோக்கியிருந்தன என்பது (prevailing direction of Magnetization) பற்றிய சான்றுகளைத் தம்மகத்தே அடக்கியிருத்தல் கூடும் என்று சில அறிவியலறிஞர் கருதினர். ஆய்ந்து பார்த்ததில் இஃதுண்மையாகவே யிருந்தது. பாறைகள் கிடக்கும்

இடத்தைப் (latitude) பொறுத்தே இத் திசையும் கண்டறியத் தக்கதாம். பழம் பாறைகளை ஆய்கையில் அவை தற்போது கிடக்கும் இடத்துக்கும் தம்மகத்தே கொண்டுள்ள இடச் சான்றுகட்கும் பொருத்தமின்மை புலனாகியுள்ளது. 20 கோடி ஆண்டுகட்கு முந்தியவை என்று கருதப்படும் மணற் பாறைகள் சில (Sandstones) பிரிட்டனில் உள்ளன. அவற்றின் தட்பவெப்பம் சகாராப் பாலைக்குரியதாகத் தோன்றுகின்றது. காந்த ஈர்ப்பின் திசையினை ஆய்ந்தபோதும், தற்போது சகாராப் பாலை இருக்கும் இடத்திலேயே முன்பு பிரிட்டனும் இருந்திருத்தல் வேண்டும் என்று புலனாகியுள்ளது. ஒரே இடத்தில் காணப்பெற்ற பல்வேறு காலங்களைச் சேர்ந்த பாறைகளில் இவ் விடச் சான்றுகள் படிப்படியாக ஒரே திசையில் முன்னேறி வந்திருப்பதிலிருந்து நிலப்பரப்பு ஒரே ஒழுங்காக இடம் பெயர்ந்து வந்துள்ளமை தெரிகின்றது. ஆப்பிரிக்கா இந்தியா ஆத்திரேலியா ஆகிய நாடுகள் வடக்கு நோக்கி நகர்ந்திருப்பதாகத் தெரிகின்றது.

மேலும் ஆய ஆய எத்தனையோ உண்மைகள் புலப்படவிருக்கின்றன. என்ன வியத்தகும் புடவி இது! ○

உறுப்பினர் பார்வைக்கு

தென்மொழி அனுப்பப்பெறுகின்ற சுற்றுத்தாளின் முகவரிக்குமேல் குறிப்பிடப் பட்டுள்ள எண்களே அவரவர் உறுப்பினர் எண்கள். அவற்றுள் பு. உ. எண் 244 முதல் 284 வரை உள்ள அன்பர்கள் எல்லார்க்கும் சுவடி 2- ஓலை 1 (மாசி இதழ்) முடிய உறுப்பினர் கட்டணம் முடிவுறுவதால், மேற்கொண்டு தென்மொழி தொடர்ந்துவிரும்புவார் இம்மாதத்திற்குள் அனுப்பிக் கையொப்பத்தைப் புதுப்பித்துக் கொள்ள அவ்வெண்களுக் குரியாரை வேண்டிக் கொள்கின்றேம்.

கடந்த (தை மாத) இதழோடு கட்டணம் முடிவுற்ற பு. உ. எண் 1 முதல் 243 வரை உள்ள உறுப்பினர்களில் பலர் இன்னும் தங்கள் கையொப்பங்களைப் புதுப்பித்துக் கொள்ளவில்லை. அவர்கட்கு இந்த இதழ் நிறுத்தப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் விரைந்து தங்கள் கையொப்பங்களைப் புதுப்பித்துக் கொள்வார்களென்று எதிர்பார்க்கிறேம். —அமைச்சர்.

உள்ளம் திருத்தி உயிருணர்வு மேலெழுப்பி
அள்ளும் சுவைபெருக்கி ஆழ்தோறும் – கொள்ள
இருப்ப தினியொன் றிருப்பதுபோல் என்றும்
இருப்ப துயர்பாட் டியல்பு!

– புதுவை முதுகண்ணன்.

தமிழ்:

வாழி தமிழே வாழி! – மெய்
வன்மை பெற்றாய் வாழி!

யாழும் குழலும் ஆர்ந்தநல் மழலையும்
யாவும் உன்பால் பெற்றாய். (வாழி)

அறத்தினைப் புகட்டி அருங்கலை உணர்த்தி
ஆய்ந்தநல் அறிவை அன்பினை ஊட்டி
மறத்திலும் மாண்பைப் புகுத்திடும் தாயே
வளத்தினைப் பெற்று வாழிய நீயே! (வாழி)

– கோ. சோ. செயபால், தெற்குப்பொய்கை நல்லூர்.

அள்ளக் குறையா அருஞ்சொற்கள்; உண்டுண்டு
விள்ளக் குறையா இனிய சுவை; என்றென்றும்
கொள்ளக் குறையா இளமை நலம்; இத்தமிழைத்
தள்ளக் குறையுண்டோ, சாற்று!

– புதுவை. சுப்பிரமணியன்.

தூவுநறு மணங்கமழும் ஆரம் போலும்
சுவையினிய தேன்போலும் தமிழுக்காகச்
சாவுபெறும் நிலைகிடைத்தால் நன்று, நன்று;
தமிழ் மண்ணில் என்பிணத்தைப் புதைத்தல் நன்றே!

– நா. இளங்கோவன், மயிலாடுதுறை.

இந்தி எதிர்ப்பு:

விடுதலை மகிழ்வில் விளைந்தநல் லுணர்வினைக்
கொடுமதி வடவர் கொண்டனர் தீதாய்!
மக்களாட்சியின் மாண்பினை அறியாக்
கொக்கரிப் பாளரின் கொட்டம் அடக்க,
எந்தாய் தமிழே, இனியும் பிறழோம்;
இந்தி அரக்கியின் இழியுடல் நாற்றமும்
உன்மேற் படர ஒவ்வோம்;
இன்னுயிர் கொடுக்கவும் தயங்கோம் தாயே!

– அலைமணற் குழவி, வீசூர்.

தமிழ்மொழியைப் பழிப்போரைத் தாக்கும் போதில்
தாய்வந்து தடுத்தாலும் விடவே மாட்டார்;
அமிழ்த்தவொணு மறவர்குலம், தமிழர் கூட்டம்!
அனைவருமே கிளர்ந்தெழுவர் தமிழைக் காக்க!
உமியுண்ண ஒருபொழுதும் இணங்க மாட்டார்;
உரம்வாய்ந்த தமிழ்மக்கள் மனதிற் கொள்வீர்.
இமைப்போதும் சோராமல் எதிர்த்து நிற்பர்;
இந்தியினைத் திணிப்போரே, இதை உணர்வீர்!

– வெற்றியழகன், திருவல்லிக்கேணி.

வீறுகொண்டே எழுந்திடடா தமிழா! இன்றே
விளக்கமிலா இந்தியினை விரட்டி ஓட்டி,
மாறுகொண்டிங் கெதிர்ந்துவரும் மாற்றுர் தம்மை
மதுகையினுல், மெய்வலியால் எதிர்த்து வெல்வோம்.
நாறுகின்ற அழுக்ககற்றித் தமிழகத்தை
நன்ருேங்கச் செய்திடுவோம்; வல்லுணர்ச்சி
ஊறுகின்ற உள்ளத்தில் என்றும் நின்றே
ஒளிர்கின்ற நந்தமிழை உயரச் செய்வோம்.

– வீராச்சாமி, திருப்பனந்தாள்.

வாழ்ந்தாலும் தமிழ்மலையின் மடியில் வாழ்வோம்;
வாட்டும்இந்தி வாடைக்கோ நடுங்கிச் சாவோம்?
வீழ்ந்தாலும் அம்மலையின் அடியில் வீழ்வோம்;
வீணரதை அழித்திடவா விட்டு நிற்போம்?
தாழ்ந்தாலும் தமிழ்த்தாய்க்கே தொண்டு செய்வோம்;
தகைகெட்ட இந்திக்கோ தாள் பிடிப்போம்?
ஆழ்ந்தாலும் அன்னைக்கே அரண் சமைப்போம்;
அரக்கர்செயுஞ் சூழ்ச்சிகளை வெல்வோம் வெல்வோம்!

– சே. க. முருகன், திருப்பனந்தாள்.

திறையிறுத்து நின்றதிலை; திறமொடுங்கி என்றும்
தலைவணங்கி நின்றதிலை; தமிழரசு தாங்கிப்
பறைமுழங்கிச், சீர்பரப்பிப், பாவலர் செந் நாவால்
பண்பாடி, மொழிவளர்த்துப் பகை எதிர்த்து வென்று,
நிறைகருத்துக் கோவைஎன நூல்பலவும் யாத்து,
நெஞ்சுவந்து நின்றேம் எம் நிறைஅழிக்க இன்று
குறைமதியீர், குறைமொழியாம் இந்தியினைக் கொணர்ந்தீர்
குறைவுறுதல் எமக்கில்லை; கெட்டொழிவீர் நீரே!

– ஞா. அந்தோனிராசு, விரியூர்.

ஒளியிலா நிலவும் வேண்டா;
உருவிலாப் படமும் வேண்டா;
தெளிவிலாப் பேச்சும் வேண்டா;
தெம்பிலா நெஞ்சும் வேண்டா;
களியிலா வாழ்வும் வேண்டா;
கரையிலா ஆறும் வேண்டா;
புளியிலா நரந்தம் வேண்டா;
பயனிலா இந்தி வேண்டா!

புனலிலா நாடும் வேண்டா;
பொறுப்பிலாத் தலைவன் வேண்டா;
மனமிலா மாந்தன் வேண்டா;
மணமிலா மலரும் வேண்டா;
கனவிலா உலையும் வேண்டா;
கருத்திலா நூலும் வேண்டா;
இனமிலா அரசும் வேண்டா;
ஏற்பிலா இந்தி வேண்டா!

– உதயை. மு. வீரையன்.

காதல்:

பாடப் பாடக் குயில்நாணும்! – மொழி
பழகப் பழகக் கிளிநாணும்! – நடம்
ஆட ஆட மயில்நாணும்! – உடல்
அசைய அசையக் கொடிநாணும்! – விழி
ஓட ஓடக் கயல்நாணும்! – நடை
உலவ உலவப் பெடைநாணும்! – அவள்
தேடத் தேடக் கிடைத்தவளாம்! – என்
தேரா நெஞ்சில் ஒளிர்பவளே!

வார வார முகில்நாணும்; — நகை
வழங்க வழங்க மலர்நாணும்! — முகந்
தேரத் தேர மதிநாணும்! — கன்னஞ்
சிவக்கச் சிவக்கக் கனிநாணும்! — விழி
சாரச் சார முகம்நாணும்! — எழில்
சமையச் சமைய உடல்நாணும்! — உயிர்
ஆர ஆரக் கிடைத்தவளாம்! — என்
ஆகத் தென்றும் ஒளிர்பவளே!

— இளஞ்சித்திரன், தஞ்சை.

பொது:

புதிர்போடும் குறுகுறுப்பை முகத்திற் கொண்டு,
புரியாத மொழிகுழறி, என்னைக் கண்டு
மதிபோலும் தவழ்ந்தருகு வந்தே உன்றன்
மலர்போலும் கைகளினை நீட்டிக் காட்டி,
எதிலேயோ ஆழ்ந்திருக்கும் உள்ளம் தன்னை
எழிற் குழவீ, நீ சிரித்தே ஈர்க்கும்போது
குதிபோடும் என்னுள்ளம் மகிழ்வால் முன்னர்!
குவிந்திடுமே தமிழ்ப்பாடல் உன்மேல் பின்னர்!

— ப. கி. சேகரன், பெங்களூர்.

மங்க லம்நனி சேர்ந்திட
எங்கும் முத்தமிழ் ஓங்கிடக்
கங்கு லாம்இடர் நீங்கிடப்
பொங்க லேஎழிற் பொங்கலே!

— மகிபை. பாவிசைக்கோ, சென்னை.

சோம்ப லாகத் திரிவார்—திண்ணைத்
தூங்கி யாக இருப்பார்;
தேம்பி அழுவார் உண்மை;—அவர்
திருந்தில் பலர்க்கும் நன்மை.
உடலை வருத்தி உழைத்தால்—மெய்
உறுதி யாகும்; இன்பம்!
கடல்போல் நலன்கள் பெருகும்;—இதைக்
கருத்தில் கொண்டு நடவாய்!

— கோ. சோ. செயபால், பொய்கை.

பாரதி சபதம் (பாஞ்சாலி சபதம்-ஆய்வு.)

ஆசிரியர்: மது. ச. விமலானந்தம், எம். ஏ.
தமிழ் விரிவுரையாளர்,
சரபோசி மன்னர் கல்லூரி, தஞ்சை.

கிடைக்குமிடம்: பைந்தமிழ்ப் பண்ணை, தஞ்சாவூர்.

விலை: உருபா. 2—00.

(இப் பகுதிக்கு நூற்களை விடுப்பார் விளம்பர நோக்கத்தோடு விடுப்பதாகத் தெரிய வருகின்றது. இஃது அவர்தம் குறையன்று; தமிழ் நாட்டில் தாளிகைகள் இயங்கும் வாணிக நோக்கின் அடிப்பற்றி எழுந்த தீமைகளில் ஒன்றாகும். இப்பகுதிக்கு விடுக்கப் பெறும் நூற்கள் எவ்வகை விருப்பும் வெறுப்புமின்றி நடுநிலை நோக்கோடு தூக்கி நிறை செய்யப் பெறுகின்றன. அதனால் பிறர் மனம் துன்புறல் வேண்டும் என்பதோ மகிழ்வுறல்வேண்டும் என்பதோ நம்நோக்கமன்று. மேடையேறிப் பேசப்பெறும் பொழிவுகளைவிட அச்சியற்றி வெளியிடப் பெறும் நூற்கள் இயன்றவரை செப்பமும், நுட்பமும் வாய்ந்து மயக்கும், பிழைகளும் இன்றித் தெளிந்த ஊற்றுநீர் போலத் திகழல்வேண்டும் விடுக்கப்பெறும் நூற்கள் நட்பு, பகை,நொதுமல் என்ற பாகுபாடின்றி நிறை கூறப்படுகின்றமையால், நூலாசிரியர்கள் வருந்த வேண்டுவது அவர்தம் நூற்களின் பொருட்டாக இருத்தல் வேண்டுமேயல்லாது அந்நூற்களுக்கு உரைத்த நிறையின் பொருட்டாக இருத்தல் வேண்டா என்பதே நாம் எல்லாரையும் வேண்டிக் கேட்டுக் கொள்வதாகும். — ஆசிரியர்.)

இந்திய அரசினர் தம் தனியாண்மையை வலுப்படுத்திக் கொள்வதற்காக மேற்கொண்டு வரும் நாட்டு உணர்வு ஒருமைப்பாட்டுத் திட்டமும்,பனிமலை எல்லையில் சீனர்தம் படையெடுப்பும் சேர்ந்து, ஏற்கனவே தகுதிக்குமேல் உயர்வு பெற்றிருக்கும் சுப்பிரமணிய பாரதியாரின் மதிப்பை இலக்கிய அங்காடியில் மேலும் பன்மடங்கு உயர்த்திவிட்டன. பாரதியின் புகழ் பாடுவது

இன்று 'எழுத்தாளர் நாகரிகம்' ஆகிவிட்டது. தமிழன்பர்போல் காட்சிதந்து, உண்மையில் தமிழுக்குக் கேடு செய்யும் ஒரு கூட்டம் ''பாரதியை விட்டால் தமிழுக்கு வேறு போக்கில்லை'' என்பது போன்றதொரு சூழலை உருவாக்கப் பெரிதும் முனைந்து நிற்கின்றது. தம் பழம்பேரிலக்கியத்தை முற்றவுணர்ந்து அள்ளக் குறையா அச் செல்வத்தை நுகர்ந்து நுகர்ந்து உள்ளம் விம்மிப் பெருமித முற்றுத் தம் இலக்கியச் செருக்கில் தலைநிற்றல் வேண்டிய தமிழர், அவை இருத்தலையே மறந்து எளிய இலக்கிய வுணர்வுக்குஞ் சுவைக்கும் அடிமைப்பட்டு நிற்கின்றனர்.

''பாரதி சபதம்'' (பாஞ்சாலி சபதத்துக்கோர் ஆய்வு) எழுதியவரும் இதற்கு விதிவிலக்கல்லர். இலக்கியத்துள் விருப்பு வெறுப்புப் பாராட்டுவது நம் வேலை அன்று. எந்த நூற்கும் ஆய்வு வேண்டுவதே. ஆனால் உண்மை காணும் வேட்கை யில்லாமல் நூல்களெல்லாம் காலத்துக்கேற்ற கோலம் புனைகின் றனவே என்று எண்ணும் பொழுதுதான் வருத்தம் மேலிடு கின்றது.

பாரதியார் நல்ல புலவரே. இதனை யாரும் மறுக்கவில்லை. ஆனால் அவர் பாடல்களுட் காணப் பெறும் உயிர்ப்பையும் உணர் வழுத்தத்தையுமட்டுமே கொண்டு அவர் உலகப் பெரும் புலவர் எனவும் தமிழிலக்கியமே அவருள் அடக்கம் என்பது போலவும் பேசுவது ஒப்ப முடிந்ததன்று.

பாஞ்சாலி சபதம் பாரதநாட்டு விடுதலைப் போராட்டத்தை உள்ளுறையாகக் கொண்டதாக ஆய்வாளர் கருதுகின்றார் இது வலிந்து காணும் முயற்சியே. பாடலைப் படிக்கும் பொழுது அத்தகைய உணர்வேதும் தோன்றவில்லை. பாரத நாட்டைப் பற்றிப் பொதுவாகச் சில வரிகள் வருகின்றன; அவ்வளவே. இது கொண்டு, பாரதி நாட்டுணர்வெழுப்புதற்காகவே அக் கதையைத் தெரிந்து கொண்டாரென்று கூறுவது சரியன்று. நாட்டுணர்வெழுப்ப வேறு எத்தனையோ கதைகளிருப்ப இலை மறை காய்போல் இதனைக் கொள்ள வேண்டுவதில்லையே! மக்கட்கு நிறைந்த பயன் விளைய வேண்டுமெனில் கருத்துகள் இலைமறை காயாகவே இருத்தல்வேண்டும் என்கின்றார் ஆசிரியர் இஃது இலக்கியச் சுவைக்குப் பொருந்துமே யன்றி, அரசியல் துறையில் மக்கட்கு விழிப்பூட்டப் பயன்படாது. ஆதலின் பாரதியார் அச்சூழ்ச்சியைக் கையாண்டிரார். அதைப் பாரதியார் மேல் ஏற்றிக் கூறுமுகத்தான் ஆசிரியர் தமக்குள்ள இந்திய நாட்டுப் பற்றினையும் உணர்வு ஒருமைப் பாட்டினையும் காட்டிக் கொள்ள முயல்கின்றார் என்று தெரிகின்றது.

நாட்டுணர்வோடு பெண்மையின் உயர்வும் கண்ணனின் புகழும் ஒருங்கே தரப்படுவன என்று ஆசிரியர் விளக்கிச் செல்

கின்றார். பின்னிரண்டும் பற்றிய எண்ணங்கள் பொருத்தமாக இருக்கின்றன.

புதிதாக ஒன்றைப் படைப்பதினும் பழைய ஒன்றுக்குப் புது மெருகிடுவதே அரிதென்றும், அச்செயலில்தான் தனிமைச்சிறப்பு அடங்கியுள்ளதென்றும் ஆசிரியர் கூறுகின்றார். எடுத்துக் காட்டாக, சேக்சுப்பீயரையும் கூறுகின்றார் பழைய கதையினை எடுத்துக் கொண்டதில் தான் சிறப்பு என்பது பொருந்தாது. அதனைத் தம் ஆற்றலால் சுடர்விட்டுத் திகழச் செய்வதே சிறப்பாகும். எதையும் நிலைக்களனாகக் கொள்ளலாம். இயம்பும் முறையால்தான் புலவர்க்குப் பெருமை என்பது தான் இங்குக் கூற வேண்டுவது. அதனைவிடுத்துப் பழைய கதையினை மாற்றி அமைப்பதுவே புதுமை படைப்பதினும் சிறந்தது என்று கூறியிருப்பது பொருந்தாது. 'அரிது' என்று கூறியதோடமைந் திருக்கலாம்.

ஆசிரியர் தாம் கற்ற மேனாட்டு இலக்கிய ஆராய்ச்சிக் கருத்துகளைப் புகு முகமாகக் கொண்டு பாஞ்சாலி சபதத்துள் நுழைகின்றார்; பாட்டுக்கும், பாவியத்துக்கும் ஆய்வுரையாளர்கள் கூறும் பல இலக்கணங்களுக்கும் பாஞ்சாலி சபதம் எங்ஙனம் இடமளித்துத் திகழ்கின்றது என்று விளக்குகின்றார் இலக்கிய ஆராய்ச்சிக்குப் புதியவர்கட்கு இஃது ஓரளவு பயன்படக்கூடும். ஆயினும் ஆசிரியரின் ஆய்வு இயல்பானதாக இராமல் வலிந்த தொன்றாகத் தோன்றுகின்றது தாம்கற்ற கருத்துகளை எங்கெங்கு எப்படிப் பொருத்திக் காட்டலாம் என்ற நோக்கத்தோடேயே நூல் எழுதப்பட்டதாகத் தெரிகின்றது. ஆசிரியரின் முறைப்படி எந்த நூலையும் ஆய்வுக் கருத்துகளோடு பொருத்திக் காட்ட முடியும். போலி நூல்களையும் அவ்வாறே பொருத்திக் காட்ட முடியுமே! ஒரு நூலின் தனிச் சிறப்புக்கான காரணங்களை ஆயாமல், இலக்கியத்துக்குப் பொதுவாக வாய்ந்த சிறப்புகள் இதிலும் அமைந்திருக்கின்றன என்று கூறுவது தேவையற்ற வேலையாகும். மாந்தப் பிறவிக்குரிய இயல்புகள் ஒரு மாந்த னிடம் அமைந்திருப்பதாலேயே அவன் சிறந்த மாந்தனாகி விடான். அவனுக்கென ஒரு தனி உயர்வு அமைதல் வேண்டும். பாஞ்சாலி சபதம்—அதன் குறைகள் ஒரு புறம் இருப்ப ஓர் இலக் கியமே. இதனையே திரும்பத் திரும்பக் கூறி மகிழ்ந்து கொள்வ தால் யாது பயன்? அன்றி அஃதோர் இலக்கியமாக அமைந்து விட்டதன் காரணங்கள் இவை இவை என்று கூறுவதால் பெறப் படுவதுதான் என்ன? பிற நூல்களினின்று உயர்ந்து நிற்பதற்கு அதில் எவையேனும் உளவேல் அவற்றைக் கூறினால் ஆய்வு நூல் பயனுடையதாகும். பாஞ்சாலி சபதத்தில் அத்தகைய தனிச் சிறப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு பாவிய (காப்பிய)த்துக்கு அமைய வேண்டும் இயல்பான தன்மைகளை ஆசிரியர் பாஞ்சாலி சபதத்தில் கண்டு இறும்பூது எய்துகின்றார். கதை மாந்தர் உயிருடன் நடமாடுகின்றனராம். நூல் நாடகச் சுவை பொதுள அமைந்திருக்கின்றதாம். இவை அமையாத பாவியம் தான் எது? பாஞ்சாலி ஆடை களையப்பெறும் நிகழ்ச்சியை வேறு யாரும் பாரதியைப் போல் அத்துணை நாகரிகமாகக் கூறியிருக்க முடியாதாம். இலக்கியம் பாரதியின் தனிச் சொத்தன்றே!

பழைய மரபினை ஒட்டிப் பாரதியார் பாடியுள்ளவற்றை எல்லாம் மரபினை ஒட்டியவை என்று ஒப்புக் கொள்ளாமல் அவற்றைப் பாரதியாரின் சொந்த எண்ணங்கட்கு எடுத்துக் காட்டாகக் கூறிவிட்டு, மேற்கொண்டு முந்து நூல் கண்டமை- என்ற தலைப்பில் ஏதாவது சொல்ல வேண்டும் என்று ஆசிரியர் சொல்லியுள்ளவை நகைப்புக் கிடந்தருகின்றன. தம் நூலைத் தாமே தாழ்த்திக் கொள்ளும் ஆசிரியர்மேல் இரக்கமே மேலிடுகின்றது.

''புவியாளுமோர் கடுந்தொழில்''என்று பாரதி கூறியுள்ளது ''மன்பதை காக்கும் நற்குடிப் பிறப்பு, துன்பமல்லது தொழுதகவில்'' என்ற சிலப்பதிகார அடிகளின் தழுவலாம்! மலைநாடுடை மன்னர் மானும் தேனும் கொணர்ந்தமை பற்றிக் கூறுவது, சிலம்பில் குறவர் செங்குட்டுவனுக்கு அவற்றைக் கொணர்ந்து தந்த காட்சியை அடியொற்றியதாம். கைகேயி கூனிக்கு மாலை கொடுத்ததை மனத்திற் கொண்டே துரியன் சகுனிக்கு மாலை கொடுத்ததாய் அமைத்துள்ளாராம் ''என்னுயிர் பாரத நட்டில்'' என்ற தொடர் ''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' ''உயிரெலாம் உறைவதோர் உடம்புமாயினான்'' என்ற பழந் தொடர்களைப் பார்த்தே எழுதப்பட்டதாம்! இன்னும் இதுபோல் சிறு பிள்ளைத்தனமாக ஆசிரியர் காணும் ஒற்றுமைகள் பலப்பல! இவற்றின் பொருண்மையை இங்கு விளக்க வேண்டுவதில்லை. பாரதிக்கு இழுக்குத் தருவனவாகும் இவை.

வெற்றுணர்வுக் கிடங் கொடுப்பது ஆய்வாளரின் வேலையன்று. ''பெண்மை வாழ்க!'', ''பெண்மை போற்றும் பாரதி வாழ்க!'' ''செயல் மறந்து பாராட்டுவோமாக!'' இவை ஆங்காங்குக் காணப்பெறும் சொற்றொடர்கள்! ஆய்வு நூலுக்குத் தேவையில்லாத பாராட்டுகள் இவை!

''பாரதக் கதையின் பாங்கான இடத்தை எடுத்துப் பக்குவமாகப் பாடிவிட்டார் பாரதி என்பதில் இல்லை பாஞ்சாலி சபதத்தின் பெருமை!'' ''பாஞ்சாலி சபதமெனும் இலக்கியத்தில் பாரத அரசியல் பேசுகின்றான் பைந்தமிழ்ச் சாரதி பாரதி!''

''ஒப்பற்ற உயர்மிகு,'' ''மீப்பேரளவு மிக்கோங்கிய,'' ''நிதி படைத்தாரைத் துதி செய்து வாழும் மதியில் தன்மை'' - இவை. ஆசிரியரின் நடைக்கு எடுத்துக்காட்டுகள். திராய் நகரம் அழிந்தது எலனின் துன்பக் கண்ணீரால் என்று ஆசிரியர் கூறுவது வியப்பேயாம்! ''வன்மையுள் வன்மை மடவார் பொறை'' என்று குறளடியைப் பிறழ வுணர்ந்து பெண்டிரின் பொறையுடைமைக்கு அதனை மேற் கோளாகக் காட்டியிருப்பது வருந்தத்தக்க பெரும் பிழையாகும்.

பலவிடங்களில் தொடர்ப் பிழைகள், எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. நடையும் செப்பமாக அமையவில்லை. பயனுடையது யாதானும் உணர்த்தல் வேண்டும் என்ற உள்ளக் கிளர்ச்சியில் எழுவது உண்மை நூலாகும். அதுவும் அறிவால் ஒழுங்கு செய்யப்பெற்றே நூலாக்கப்படும். இவ் வக எழுச்சி யின்றிப் புறக் காரணங்களைக் கொண்டு எழுதப்படும் எந்தக் கலை நூலும் சிறப்பதில்லை. அதற்கு இந்நூல் சான்று.

''பாரதி பாடல்களைப் படித்த மயக்கத்தால் உளறிய மொழி களே இவை; அவையும் நெறிப் படுத்தப் பெறவில்லை; வெறியில் நெறி ஏது'' என்று ஆசிரியரே குறிப்பிடுகின்றார். வெறியில் உளறிய சொற்கள் விலையாக்கப் பெருதிருந்தால் அவற்றை மன்னித்தல் கூடும். இரண்டு உருபா விலையில் நூல் வெளியிடும் ஆசிரியர் ''உளறலையும் வெறியையும் வகைப்படுத்தாது நூலாக்கிவிட்டேன்'' என்று கூறுவது இத் தமிழ்நாட்டில் அன்றி வேறெந் நாட்டில்தான் இயலும்? பெயக்கண்டும் நஞ்சுண் டமைவது நயத்தக்க நாகரிகம் தான். ஆனால், காசு பெற்றுக் கொண்டு அந்நஞ்சினை விற்பது எத்துணைப் பெருங் குற்றம்! ஒரு சிலர் இத்தகைய நூல்களைப் பாராட்டலாம்; அவரைப் பற்றி நாம் என்றும் கவலைப்படப் போவதில்லை. உண்மை நெறியே நூல் ஆய்வுக்கு அடிப்படை. — **கல்லாடன்.**

தென்மொழி விற்பனை அறிக்கை.

எங்களால் ஒப்பந்தப்படி அமர்த்தப்பெற்ற முகவர் (Agent) களன்றி வேறு சிலர் தாங்களே தென்மொழியின் நேரடி முகவர் கள் என்று கூறிக்கொண்டு இதழ்களை எங்கிருந்தோ பெற்று விற்பனை செய்வதாகவும், அவற்றை மிகையான விலைக்கு விற்ப தாகவும் கேள்விப் படுகின்றோம். எடுத்துக் காட்டாக மலைநாடு முழுமைக்கும் தென்மொழி முகவராக திரு. சா. சி. சுப்பையா (ஈப்போ) அவர்களையே அமர்த்தியுள்ளோம். ஆனால் கோலாலம்பூரில் ஒரு சிலர் இதழ்களை எவ்வாறோ தமிழகத் திலிருந்து பெற்று விற்பனை செய்வதாகத் தெரிகின்றது. இது சட்டப்படி குற்றமாகும். இத்தகையார் மேல் தக்க நடவடிக்கை எடுக்க திரு. சுப்பையாவுக்கு உரிமை உண்டு. —**அமைச்சர்.**

(34-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றார் இத்தனை இடர்ப்பாட்டிற்கும் தமிழர்தம் தலை தாழ்ச்சிக்கும் இடனான அம் முப்பற்றுகளையும் வென்று குன்றா உரத்தொடும் குனியா மறத்தொடும் நின்று, எந்தமிழ்த் தாய்க்கும் நாட்டிற்கும் இரவு பகல் பாராது தொண்டாற்ற ஒருவரேனும் முன்வரின், தமிழ் நாடு விரைவில் உய்யுமே என்றும், அவ்வாறு முன்வரும் ஒருவரை இன்னுங் காண்கிலமே என்றும் ஏங்கிக் கிடந்தோம்.

இக்கால் தாங்கள் தொடங்கியுள்ள இந்தியப் பல்தமிழ்க் கழகம் உரஞ்சான்ற கொள்கையுடனும் திறஞ்சான்ற தலைவருடனும் அத்தகைய மெய்த்தொண்டு செய்ய முன் வந்ததே என்றெண்ணி அகமகிழ்ந்து நின்றேம். ஆயினும் ஐய, தங்கள் அழைப்பிதழைக் கண்ணுற்று மிகவும் துணுக்குற்றேம்.

எடுத்த எடுப்பிலேயே, தமிழ்த் தோன்றல் திரு. க. வெ. சித வே. வேங்கடாசலஞ் செட்டியார் அவர்கள் (அழகப்பா கல்லூரி அறநிலையச் செயலர்) கழகத்தைத் தொடங்கி வைக்கப் போவதாக அழைப்பில் கண்டுள்ளது. பிறர் மாட்டு நின்ற சாதி சமய கட்சிப்பற்றும் கழகத்தின் பெரும்பணியாளர் மாட்டு வரின் அவை தவிர்க்கப் பெறுதல் இல்லையாகின், தங்கள் கொள்கையாகக் குறிப்பிடப் பெற்றிருக்கின்ற அச் செயலாண்மைக்கு எவ்வகை உரந் தந்துள்ளீர்கள் என்பதை எ[illegible] வில்லை. செல்வச் செருக்கும், சாதி சமயச் செருக்கு[illegible]ரைத் தாழ்த்தியவை என்பதை எம்மினும் மேலாகத் தங்கள் அறிவீர்கள். அறிவாலும் கல்வியாலும் செல்வத்தாலும் மேம்பட்டு நிற்கின்ற தங்களைப் போன்ற தலைமையாளரே உள்ளங் கரந்துறைந்து உருவின் தலை காட்டி வெள்ளப் பெருக்காய் விரிந்து பொங்கும் சாதிப்பகட்டுகளைத் தவிர்க்க அஞ்சுவதாயின் எம்மனோரால் செய்தற்கு யாதுளது?

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

— பெருஞ்சித்திரன்

அன்பர்கட்கு....

'தென்மொழி' இதழ்கள் ஒவ்வோர் ஆங்கில மாதத்தின் 16-ஆம் நாளிலேயே உறுப்பினர்கட்கு அஞ்சல் செய்யப்பெறுகின்றன. இந்த நாளுக்குள் உறுப்பினர் கட்டணம் அனுப்பியவர்கட்கு மட்டுமே அந்தமாத இதழ் அனுப்பப்பெறும். அதற்குப் பின் உறுப்பினராகப் பதிந்து கொள்வார் அனைவர்க்கும் அடுத்த மாத இதழே கிடைக்கும். அன்பர்கள் இதுகுறித்து அடிக்கடி மடல்கள் எழுத வேண்டா வென்று வேண்டிக் கொள்கிறேம்.

—அமைச்சர், தென்மொழி.

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரை உண்மைத் தொண்டரைக் கண்டு கொள்ளல் சிப்பிகளில் முத்தைத் தேர்ந்தெடுத்தல்போல அரிய செயலாகவே இருக்கும் தென்மொழிக் கழகம் தொடங்கின் இத்தேர்தல் காலங்களில் குலம், கட்சி முதலியவற்றைச் சாராமல் பொது நிலை நின்று மக்களுக்கு எவ்வகையில் துணை நிற்க முடியுமோ அவ்வகையில் தன் பணியை ஆற்றும். பொதுவுணர்வு சான்ற நல்லமைப்பாளர்கள் ஏற்படும்வரை பொதுமக்கள் நல்லார்க்குத் தம் ஒப்போலைகளைப் போடாமற் போயினும், தீயார்க்குப் போடுதல் மிகவும் கேடு பயக்கும். இவையன்றிக் காசு வாங்கிக் கொண்டு ஒப்போலை போடுதல் போன்ற நாகரிகத் தீங்கு வேறொன்றில்லை. அமைதி யான–பயன்படுகின்ற மெல் விலங்குகள், சிற்றுயிர்கள் முதலிய இலச்சினை (சின்னங்)களின் பின், பொல்லாத வன்மையாளர்களும், ஊரையடித்து உலையிலிடுவார்களும் மறைந்திருந்து ஒப்போலை கேட்கக் கூடும். மக்கள் அவர்தம் பொய்யுருக் கண்டு தேர்ந்தும் உண்மை உருக்கண்டு தெளிந்தும் ஒப்போலை தருதல் வேண்டும். இல்லெனின் மக்கள் தமக்குத் தாங்களே தீங்கு செய்து கொள்வோராவர். நாட்டொற்றுமை, சீனப் படையெடுப்பு முதலியவற்றைக் காட்டி மடிவிரிப்பார் சிலர். யார் எவராயினும் தமிழ் நலமும் தமிழர் நலமும் பேணாத புல்லியர் தமக்குத் தமிழர்தம் ஒப்போலை ஒன்று தானும் சென்று விடுதல் கூடாது.

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். *

தென்மொழித் தொகுப்பு.

முதல் சுவடி.

முதல் சுவடியின் பன்னிரண்டு ஓலைகளும் சேர்ந்த தென்மொழியின் புதிய தொகுப்பு விற்பனைக்கு அணியமாயுள்ளது. மிகவும் குறைந்த தொகுப்புகளே கையயம் உள்ளமையால் தேவையான தமிழன்பர்கள் உரிய முழுத் தொகையையும் அனுப்பி, விரைவில் பெற்றுக்கொள்ள வேண்டுகின்றோம். படிகள் எஞ்சாமற்போமாயின் பின்னர் வருந்தநேரும். இலக்கிய இலக்கண அறிவியல் பற்றிய பல்துறை ஆராய்ச்சிக் கட்டுரைகள் 63ம், ஆங்கில மொழியாக்கங்கள் 12ம், 16 நூல்நிறைகளும் 73 இன்சுவைப் பாடல்களும், முழு இலக்கியம் ஒன்றும், 27 சொல் விளக்கங்களும், 31 துணுக்குகளும், 106 கருத்துரைகளும், 62 வினா விடைகளும், 8 சிறுகதைகளும், 3 நூற்சுருக்கங்களும், 6 கற்பனை ஊற்றுக்கட்டுரைகளும், 7 அறிஞர் வரலாறுகளும் கூடிய அறிவுப் பெட்டகம்! உயர்ந்த அழுத்தமான கட்டடம். பதிவு அஞ்சல் செலவும் சேர்ந்து விலை 10 உருபா. உங்கள் படிகட்கு உடனடியாக எழுதுங்கள்.

– அமைச்சர், தென்மொழி.

பெயர்ப் பட்டியல்-2.

பாவாணர் பொருட் கொடைத் திட்டம்

(15—1—64 முதல் 5—2—64 வரை அலுவலகத்திற்குப் பணம் விடுத்தவர்கள்.)

	உருபா.
பெங்களூர், தூரவாணி நகர் இந்தியன் தொலைபேசித் தொழிலக நண்பர்கள் திரு. பலராமன் வழி	27
திரு. இரா. மோகன், சென்னை.	2
,, பி. சின்னதம்பி, கோவா	5
,, பெ. கண்ணுயிரம், சௌந்தரவல்லிபாளையம்	4
,, கு. வே. நவநாதத்துரை, அரியான்கோட்டை	5
,, க. கோவிந்தன், பி. ஏ. சின்னபங்குநத்தம்	5
,, அ. பத்மநாபன், சென்னை	2
புன்செய்ப்புளியம்பட்டி (ஈரோடை) மறைமலையடிகள் மன்றச் செயலர் வழி:	
மறைமலையடிகள் மன்றம்	10
திரு. கா. பாலசுப்பிரமணியம்	2
,, நா. த. அருணசலம்	2
,, அ. கதிரொளி	2
,, பு பொ. கணேசன்	2
,, இரா. ஆறுமுகன்	2
,, நா. முருகன், பெங்களூர்.	3—50
,, க. சங்கரப்பன் ,,	5
,, கு. கொடுங்கோ ,,	5
,, அ. சிவப்பிரகாசம், நல்லிபாளையம்	1
புதுக்கோட்டை, திருக்குறள் கழகத் தலைவர் திரு. பு. அ. சுப்பிரமணியம்	25
திரு. இராம. குழந்தைவேல், பி. இ; சென்னை	5
,, க. தி. நாகராசன், காரைக்கால்.	3
திருச்சிராப்பள்ளி, சமால் முகமது கல்லூரி ஆசிரியரும், மாணவர்களும்	
திரு. வி. நடராசன், தமிழ் விரிவுரையாளர்	5
தலைக்கு உருபா 2 மேனி விடுத்த மாணவர்கள்: திருவாளர்கள். ஏ. ந. இராசன், பிகாம் 3, வே. பரமசிவம், பி எசி. 2, மு. இராசு, பி. ஏ., 1 கே. இராமசாமி, பி. காம் 2	8
திரு. கு. இராசாராம், எம். ஏ. (1)	1—50
,, நா. கருப்பையா, பி. எசி (1)	1—50

தலைக்கு உருபா 1 மேனி விடுத்த மாணவர்கள்: உருபா.
முதலாண்டு அறிவியல் திருவாளர்கள்: கி. கோதண்டபாணி, இரா. இராசமோகன், சாதிக், ஆர். அன்வர்பாஷ்சா, அரு. உலகப்பன், பி. மொகைதீன், ச. கமால்பாஷ்சா, ஏ. இராமச்சந்திரன், ஏ. கே. அப்துல் உசேன், பி. பெருமாள், க முருகேசன், பி. பரமசிவம், இரா. இளையா பிள்ளை, ஏ. எச். இரகிமான், இரா. தங்கவேலு, சிக்கந்தர் செய்குதம்பி, கா. உத்தமன், நா. குப்புசாமி. 18

2–ஆம் ஆண்டு அறிவியல்: குழ. செயராமன், கு. மாணிக்கம், வீ. இராதாகிருட்டிணன், செ. துரை–சாமி 4

3-ஆம் ஆண்டு அறிவியல்: சு. இராசகோபாலன், குப்புசாமி, செ. பெ. தங்கவேலு, பெ. அரங்கராசன் 4

கலை முதலாண்டு: கே. தேவராசன், ச. துரை-ராசன், பி. சீனிவாசன், இரா சாரங்கராசன், ஆர். செல்லையா 5

கலை 3–ஆம் ஆண்டு: நீ. அப்துல் கபூர் 1

வணிக வகுப்பு: கே. பழநிச்சாமி (ஆண்டு 1), உலூா. சுந்தரராசன் (2), ச. வீரப்பன் (2), எம். நடராசன் (2), இராசன் (2), ம. ச. நாராயணன்(2), மு. காதர்மொகைதீன் (2), ம. ஒகது (3), தி. ஏ. முத்து (3), கி. பாசுகரன் (3), சமால்முகமது (3), ச. நாகராசன் (3), முகமதுகாலிஃப் (3), காசா அப்துல் காதர் (3) 14

வ. சியாவுதீன் அகமது 1

புகுமுக வகுப்பு: வி. தங்கவேலு, எம். சந்திர-சேகன், ஆர். பொன்னுசாமி, சே. சவுகத் அலி, தி. ஆர். சாசாதா, ஏ. சிக்கந்தர், தாசுதீன், இரா. செழியன், அபீப் முகமது, கா. அப்துல் இலத்தீஃப். 10

தலைக்கு 50 காசு மேனி கொடுத்த மாணவர்கள்: திருவாளர்கள். பொன். அரங்கராசன், கோ. இராமலிங்கம், வெ. தங்கராசன், வெ. குழந்தைவேல், கா. சிவக்கொழுந்து, இரா. அரங்கராசன், நா. கணேசன், கு. திருமால் மருகன், மு சங்கரன், து. கோவிந்தன், இராசசேகரன், மா. கந்தசாமி, வை. சண்முகசுந்தரம் அ. பழநிசாமி, ஆர். செகந்நாதன், ஆ. நடேசன், என். நடேசன், ந. பழநியப்பன், இ. சுப்பிரமணியன், வி கண்ணன், எம். கபீஃப் இரகிமான், வீ. கந்தசாமி, எம். அகமது கனி, ஆ. இராமலிங்கம், நல். சிதம்பரம், சா. இராசகோபால், கே. பட்டாபிராமன்,

	உருபா.
இரா. முருகன், இர. கோதண்டராமன், சு. சந்திரசேகரன், கமால்தீன், வே. விசுவநாதன், நா. சுபாசு, கி. செகந்நாதன், எம். ஏ. பதுருதீன், ஏ. விக்தர், இரா. திருநாவுக்கரசு, ஒய். செகந்நாதன், ஏ. விசுவநாதன், மா. தங்கவேலு, வி. கிருட்டிணமூர்த்தி, எம். பரூக், கே. சாகுல் அமீது, ச. நூர்முகமது, வீ. தியாகராாசன், ஆர். பொன்னுசாமி, எம். கமால்தீன், ஆர். சுப்பிரமணியன், எம். அமீதுமுபாரக், ஆ. சாலமோன், சி. உத்திரம், ஆர். வாசுதேவன், கே. முகமதுஇபுராகிம், எம். பஃக்சீர் அகமது, எம். சாகுல் அகமது, பி. தியாகராசன், பி. முத்துசாமி, ஆர். தங்கவேலு, தி. சோதி, அப்துல் அக், ஏ. சாகுல் அமீது, என். சுதந்திர பிரகாசம், செகன்மோகன் கோபால்	31—50
திரு. மு. நமசிவாயம்	0—30
,, கா. சாமுவேல் சான்சன்	0—30
தலைக்கு 25 காசுமேனி கொடுத்த மாணவர்கள்: திருவாளர்கள்: வாசுதேவன், சு. தங்கவேலு, சி. செல்லப்பிள்ளை, செ. கோவிந்தசாமி, க. கறுப்பண்ணன், எம். குலாம்முகமது, எம். விக்தர்	1—75
திரு. பொ. இரத்தினம், பி எசி., மேலச்செவல்	5
,, சுப. ஆறுமுகம், இடப்புறக்குடியிருப்பு	5
,, இராம. இராமமூர்த்தி, கொட்டுச்சேரி	2
,, வி சி. சுப்பிரமணியன், இடப்புறக்குடியிருப்பு	10
நன்னிலம் வட்டம், ஏனங்குடி க. உ. பள்ளிச் சார்பில்:	
தலைக்கு உருபா 1 மேனி கொடுத்தவர்கள்:– திருவாளர்கள்: ஆ. இராசகோபாலன், எம்.ஏ , பி.டி; இரா. வரதராசலு, பி. எசி; பி. எட்; அ செல்வம், க. கோ. நடேசன், மு. கோவிந்தன், புலவர். வா. சக்காராம், புலவர் சா. குருமூர்த்தி, நா. மு. அனிபா	8
தலைக்கு 50 காசு மேனி கொடுத்தவர்கள்:– திருவாளர்கள்: கோ. வசந்தகுமார், பி ஏ., பி. எட்; வி இராமலிங்கம், வி பத்மநாபன், கா. ந கிருட்டிணமூர்த்தி, பா. மு. சொக்கலிங்கம், இரா. கணேசன், சா சுந்தரேசன், வி. மகாலிங்கம், இரா சீநிவாசன், தி க சீநிவாசன், மா. வேலையன், செ மு அசரப் அலி, மு. சவுரிராசன், எம். இராசப்பா	7
மொத்தம்:	261—35
பணவிடைக் கழிவு:	1—80
மொத்தம்:	259—55
முன் மொத்தம்:	76—50
தொகு மொத்தம்:	336—05

தென்மொழி பதிவு எண் : எம். 7211

பொருளடக்கம்

சுவடி 2. மாசி - தி. பி. ௧௯௯௫ ஓலை 1.

இரண்டாம் ஆண்டு நகராண்மைக் கழகத் தேர்தல்கள்	(ஆசிரியவுரை)	3
பொறியுணர்வும் உயிர் ஆற்றலும்	(எமர்சன்)	7
செந்தமிழ்ச் சின்னச்சாமி	(பாடல்)	16
எண்சுவை எண்பது	(இலக்கியம்)	15
தேள்		20
எற்றென்று இரங்குவ செய்யற்க		23
பெண்டிர்க்கு	(பாடல்)	27
இந்தியப் பல்தமிழ்க் கழகம்		29
தொல்காப்பியத்தில் தொழிற்பெயர்		35
குழந்தை	(பாடல்)	39
திருவள்ளுவராண்டு		40
கல்வி		44
ஐயம்	(பாடல்)	48
அமைதிப் புயல்	(கற்பனை ஊற்று)	49
பாவாணர்க்கு உதவுக	(பாடல்)	54
பொதுத் தொண்டர்க்குச் சில பொன்னுரைகள்		55
பிளந்தோடிய மண்ணுலகு		57
பாட்டு அரங்கம்		63

மற்றும்

நூல்நிறை முதலியன.

உரிமை, வெளியீடு
தாமரை, உலக முதல்வி

மித்திரா அச்சகம்
திருப்பாதிரிப்புலியூர்.